www.padippakam.com

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
ஏப்ரல் 2006 Vol : 3 - Iss : 6
ரூ.6



## அம்பேத்கர் வெளியிட்ட
# தேர்தல் அறிக்கை

படிப்பகம்

www.padippakam.com



# நம்முடைய உரிமைகளைப் பிற அரசியல் கட்சிகள் பறிக்கத் துடிக்கின்றன



அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே! நம் மக்களிடையே பேசுவதற்காக நான் லூதியானாவிற்கு தற்பொழுதுதான் முதல் முறையாக வந்திருக்கிறேன். நீங்கள் திரளாகக் கூடியிருப்பது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில், நடைபெற இருக்கும் தேர்தலில் பல்வேறு கட்சிகள் பங்கேற்கவிருக்கின்றன. இத்தேர்தலில் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பும் (Scheduled Castes Federation) தமது வேட்பாளர்களை முன்னிறுத்துகிறது. சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட அனைத்து இடங்களில் மட்டுமல்லாது, நம்முடைய வாக்குகள் கணிசமாக உள்ள சில பொதுத் தொகுதிகளிலும் நமது உறுப்பினர்கள் போட்டியிடுவார்கள். நமது வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

நம்முடைய வேட்பாளர்களின் வெற்றி, நம் மக்களையே பெருமளவில் சார்ந்திருக்கிறது. நம்முடைய மக்கள் அனைவரும் நமது வேட்பாளர்களுக்கு வாக்களித்தால், வெற்றி உறுதியாகக் கிடைக்கும். எனவே, அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குமான ஒரே அமைப்பான 'பட்டியலினக் கூட்டமைப்பு' உறுப்பினர்களுக்கு, நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்...

பல்லாண்டுகாலப் போராட்டத்திற்குப் பிறகுதான், நாம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சில முக்கிய அரசியல் உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். இருபது ஆண்டுகளாக நான் 'மகாத்மா' காந்திக்கு எதிராகப் போரிட்டேன். அவர், நமக்கு தனித்துவமான சிறப்பு உரிமைகளை வழங்கும் திட்டத்திற்கு எதிராக இருந்தார். தீண்டத்தகாத மக்களுக்கு சிறப்பு உரிமைகள் அளிக்கப்பட்டால், அவர்கள் ஒருபோதும் இந்து அமைப்புக்குள் வரமாட்டார்கள் என்று அவர் வாதிட்டார். அவர்கள் என்றென்றும் நிரந்தரமாக இந்துக்களிடமிருந்து விலகி, தனித்தே நின்றுவிடுவார்கள் என்றார். வட்டமேசை மாநாட்டிலும்கூட, நம்முடைய இரட்டை வாக்குரிமை கோரிக்கையை அவர் எதிர்த்தார். பல ஆண்டுகாலப் போராட்டத்திற்குப் பிறகு நாம் ஓரளவு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளோம். தற்பொழுது, சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் ஒதுக்கப்பட்ட தனித் தொகுதி இடங்களுக்கு, நாம் நமது பிரதிநிதிகளை அனுப்ப முடியும்.


இத்தகைய நம் உரிமைகளை எல்லாம், பல அரசியல் கட்சிகளும் பறித்துவிட முனைப்பாக இருக்கின்றன. அவர்கள் நம்முடைய வாக்குகளைப் பெற்றுக் கொண்டு, அவர்களுடைய ஆதரவாளர்களை, நமக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்புகின்றனர். அவர்களுடைய நோக்கங்களை நீங்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். தாழ்த்தப்பட்ட மக்கள் தற்பொழுது இருக்கும் நிலையிலேயே நீடித்திருக்க வேண்டும்; அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிவிடக் கூடாது; நம் மக்கள் காலங்காலமாக செய்து வரும் இழிவான தொழில்களையே தொடர்ந்து செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். எனவே, வரும் தேர்தலில் நீங்கள் வாக்களிப்பது குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய வாக்குகள் மூலம் உண்மையான பிரதிநிதிகளே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சட்டத்தில் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் பாதுகாக்கப்படும்.

சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நம்முடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில், நாம் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. சுதந்திரம் என்பது கேலிக்கூத்தாகவே இருக்கும். இது, ஆதிக்க சாதியினருக்கான சுதந்திரமாகவே இருக்கும்; நமக்கானதாக இருக்காது. ஆனால், நம்முடைய உண்மையான பிரதிநிதிகள், சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்திலும் இருந்தால்தான், நம்முடைய பிரச்சினைகளும், கோரிக்கைகளும் தீர்க்கப்படும், அப்பொழுதுதான் நமது குழந்தைகள் போதிய கல்வியைப்பெற முடியும்; நம்முடைய வறுமை ஒழியும், அப்போதுதான் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் நமக்கு சமமான பங்கு அளிக்கப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சிறப்பு சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பினும், பிற கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ் கட்சி – இதில் தேவையின்றி தலையிடுகிறது. அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில், தங்களுடைய ஆதரவாளர்களையே நிறுத்துகின்றனர். காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்கள், தங்களுடைய கட்சித் தலைவர்களின் நலன்களுக்கு எதிராக, நம்முடைய நலன்களைப் பாதுகாப்பார்களா? அவர்கள் நமக்காக என்ன செய்வார்கள்?

காங்கிரஸ் சார்பில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் பற்றி, நான் சில செய்திகளை சொல்ல விரும்புகிறேன். அந்த முப்பது உறுப்பினர்களும், கடந்த நான்கு ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர். இவர்களில் ஒருவர்கூட, நாடாளுமன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகள் பற்றி கேள்வி எழுப்பியதில்லை. அப்படியான தொரு கேள்வி எழுப்பப்பட்ட போதும், அவைத் தலைவர் இதற்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டார். அத்துடன் இப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது.

- தொடரும்



*28.10.1951 அன்று, லூதியானாவில் ஆற்றிய உரை*

> ❝ சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் நம்முடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில், நாம் சுதந்திரத்தை அனுபவிக்க முடியாது. சுதந்திரம் என்பது கேலிக் கூத்தாகவே இருக்கும். இது, ஆதிக்க சாதியினருக் கான சுதந்திரமாகவே இருக்கும்; நமக்கானதாக இருக்காது. நம்முடைய உண்மையான பிரதிநிதிகள், சட்டமன்றங் களிலும், நாடாளுமன்றத் திலும் இருந்தால்தான், நம்முடைய பிரச்சினை களும், கோரிக்கைகளும் தீர்க்கப்படும். ❞



படிப்பகம்

www.padippakam.com

யாழன் ஆதி

இறுகிய பாறையின் ஊடே
இறங்கி பிளக்கும் வேரென
பரவுகிறது கோபம்

அறிவின் நீள்சமவெளியெங்கும்
அடைக்கப்பட்ட ஊற்றுக் கண்களில்
கசிகின்றது இருள்

மடமை சுமைகளை ஏற்றியேற்றி
நீள்கிறது மூடநம்பிக்கையின் கம்பி

மதத்தின் போதை
கண்களை மறைக்க
அரங்கேறுகின்றன பிரார்த்தனை
பயங்கரங்கள்

ஒளியை உறிஞ்சிக் கருத்த
இரவு மரங்களாய் கிடக்கின்றன
மூட மனிதங்கள்

பகுத்தறிவின் பாதைகளைத் தூர்க்கும்
பக்தி மாயைகளை
விரட்டித் துரத்த தேவை
அம்பேத்கரின் ஒரு துளி மையோ
பெரியாரின் கைத்தடி நுனியோ




காரைக்குடியில் உள்ள சின்ன முத்துமாரியம்மன் கோயிலில் 22.3.2006 அன்று நடைபெற்ற திருவிழாவில், பத்தடி நீள இரும்புக் கம்பியை பக்தரின் பாவத்தைப் போக்க, ஒரு கன்னத்தில் குத்தி மறு கன்னத்தில் வெளியே எடுக்கிறார்கள். படம் : 'டெக்கான் கிரானிக்கல்'



படிப்பகம்

www.padippakam.com



# ஏப்ரல் 22
# மாவீரன் லெனின்
# பிறந்த நாள்


8 ''பறச்சி சமச்சத சாப்பிடக் கூடாதுன்னு சொல்லித் தடுத்திட்டாங்க'' ரா. முருகப்பன்

12 தனியராகத் திரண்டெழுந்த வரலாறு - கே.எஸ். முத்து

14 ''உடல் உழைப்பில் இருந்தே இசை பிறக்கிறது'' தலித் க. சுப்பையா

22 சாணியாகிப்போன கனவுகள்

24 ஜப்பானிலும் ஜாதி! பூங்குழலி

30 அம்பேத்கர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை

37 அம்பேத்கரின் ஆசான் புத்தர் ஏபி. வள்ளிநாயகம்

40 மீள்கோணம் அழகிய பெரியவன்



■ அட்டைப்பட வடிவமைப்பு : யாக்கன்
■ இதழ் வடிவமைப்பு : பிரேமா, ஜெமிமா ஆலிஸ்
■ அலுவலக ஒருங்கிணைப்பு : ஆர். ஜோன்ஸ், மு. ரமேஷ் குமார், சி. ராமன்




படிப்பகம்

www.padippakam.com


தலித் முரசு

Volume : 3 Issue : 6

ஏப்ரல், 2006

10 - 3

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்

அழகிய பெரியவன்

யாக்கன்

காவ்யா

விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-

நூலகக் கட்டணம் : ரூ. 200/-

வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•



தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in
www.dalithmurasu.com


# ஏன் வேண்டும் தலித் அரசியல் – II

சென்ற இதழ் தலையங்கம், சில முக்கிய விமர்சனங்களை எழுப்பியுள்ளது: 'தலித் கட்சிகளுக்கு மட்டும் கொள்கைகள் தேவையில்லையா?' / 'அவர்கள் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி அமைக்கலாமா?'... வேறு எந்தக் கட்சிகளைக் காட்டிலும், தலித் கட்சிகளுக்கு கொள்கைகள் முக்கியம் என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், தலித் கட்சிகளுக்கு கொள்கை இல்லை என்ற காரணத்தால்தான் அவை - இந்தத் தேர்தலில் புறக்கணிக்கப்பட்டனவா? நீர்த்துப்போய் விட்டதாகச் சொல்லப்படும் தலித் கட்சிகளைக்கூட ஏற்க மறுப்பவர்கள், கொள்கை உறுதியுடன் இருந்தால் மட்டும் ஏற்றுக் கொள்வார்களா? தேர்தல் அரசியலில் எல்லா வகையான சமரசங்களையும் செய்து கொள்பவர்கள்தான் – தலித் கட்சிகளைப் புறக்கணிப்பதற்கு - இப்படியான போலி காரணங்களைக் கண்டுபிடிக்கின்றனர்.

அரசியல் தீண்டாமையால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் தலித் கட்சிகள், 'தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்' என்ற வாதத்திலும் சாரம் இல்லை. அரசியல் அதிகாரத்தை தேர்தல் அரசியலால் மட்டுமே வென்றெடுத்துவிட முடியாது என்பது உண்மைதான். ஆனால், ஒரு தலித் கட்சி தேர்தலைப் புறக்கணிப்பதால், சாதி / ஊழல் கட்சிகளே தலித் வாக்குகளை அபகரித்துக் கொள்வதற்கும்; தலித்துகளை நிரந்தரமாக ஏமாற்றுதற்கும் வாய்ப்பாகின்றது. சாதி ஒழிப்பு என்ற லட்சியத்தை அடையும் வரை, சாதி ரீதியான இடஒதுக்கீடு எப்படி இன்றியமையாததோ, அதேபோல்தான் - அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை, தலித் கட்சிகள் தேர்தலில் பங்கேற்பதும் இன்றியமையாததாகின்றது. இரட்டை வாக்குரிமை நடைமுறைச் சாத்தியமில்லாத சூழலில், தலித் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தனித் தொகுதிகளே தீர்வாகின்றன. ஆனால், அது ஒரு போலி பிரதிநிதித்துவம் என்பது, அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதுதான். இந்நிலையில், இம்மக்களின் உரிமைகளை அரசியல் களத்தில் வென்றெடுக்க, ஒரு தலித் கட்சியின் அவசியத்தை யார் மறுக்க முடியும்?

மேலவளவு முருகேசன், தி.மு.க. வேட்பாளராகத் தேர்தலில் பங்கேற்பதற்கும், பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் வேட்பாளரை முன்னிறுத்துவதற்கும் – ஒரு தலித் கட்சியான 'விடுதலைச் சிறுத்தைகள்'தானே தேவைப்படுகிறது. இந்த அவலத்தைக் கண்டித்து பட்டினி கிடப்பவர்கள், ஆதங்கப்படுவதாகச் சொல்பவர்கள், தலித் பிரதிநிதித்துவம் தங்கள் கட்சியிலும் இருப்பதாகப் பீற்றிக் கொள்பவர்கள் எவரும் – தங்கள் வேட்பாளர்களை நிறுத்தாமல் - சாதிவெறியின் பிரதிநிதிகளாகவே அமைதி காக்கின்றனர். 'ஒட்டுப் பொறுக்கி அரசியல்' என்ற விமர்சகர்கள்கூட, இந்த அநீதிக்கு எதிராக எதையும் பொறுக்குவதில்லை. பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்கும் திராவிடப் பாரம்பரியங்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னிறுத்தும் இடதுசாரிகளும் - கள்ளர் சாதி வெறியை எதிர்த்து வெளிப்படையாக செயல்பட அஞ்சுவதேன்? ஒரு தலித் கட்சியால்தான் அதைத் துணிந்து எதிர்க்க முடியும் என்பதற்கு - முனைவர் பட்ட ஆராய்ச்சிகள் தேவையில்லை.

சூழ்ச்சிகள் நிறைந்த அரசியல் அரங்கில், தலித் கட்சிகள் தந்திரமாக செயல்படாமல்; முக்கியப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் இருக்கலாம். இதைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்ய வேண்டிய தேவை, எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் உண்டு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் இக்காரணங்களுக்காக, தலித் கட்சிகளின் தேவையை முற்றாக மறுதலித்துவிட முடியுமா? திண்ணியம் கொடுமைகளைப் பற்றி பேச, எத்தனைக் கட்சிகள் இருக்கின்றன? அம்பேத்கர் சிலைகள் குற்றவாளிகள் போல, கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் கொடூரத்தைக் கண்டிக்க எவரும் இல்லையே! தமிழக அரசில் 17 ஆயிரம் தலித் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று குரல் கொடுக்க, சட்டமன்றத்தில் யார் இருக்கிறார்கள்? இந்தப் பத்தாண்டுகளில், பரிதி இளம்வழுதி கருணாநிதியைப் பாதுகாக்க, குறைந்தது நூறு முறையாவது சட்டமன்றத்திலிருந்து அவமானப்படுத்தப்பட்டு, தூக்கியெறியப்பட்டிருப்பார். ஆனால், தலித் உரிமைகளை முன்வைத்து ஒரு முறையாவது, அவர் வெளிநடப்புச் செய்திருப்பாரா? அவர் நினைத்தாலும், அப்படிச் செய்துவிட முடியாதே!

சமூக மாற்றத்தை வலியுறுத்துபவர்கள்கூட, கருணாநிதி வர வேண்டுமா? ஜெயலலிதா வர வேண்டுமா? என்று தேநீர்க் கடை அரசியல் போல, தேர்தல் நிலைப்பாடு எடுக்கிறார்கள். ஆனால், தேர்தல் அரசியலில் தலித் பிரதிநிதித்துவம், பெண்களின் பிரதிநிதித்துவம், கோலோச்சும் சாதி அரசியல், வாரிசு அரசியல் பற்றியெல்லாம் விவாதிப்பதற்குத் தயாராக இல்லை. கருணாநிதியா, ஜெயலலிதாவா என்று மட்டும் முடிவெடுப்பதற்கு கட்சிக்காரர்கள் போதுமே!

ஆங்கிலேயர் ஆட்சியே மேல் எனில், காங்கிரஸ் தோன்றியிருக்காது; காங்கிரஸ் கட்சியே போதும் எனில் திராவிட இயக்கம் தேவையற்றதாக இருந்திருக்கும்; திராவிட இயக்கமே உரிமைகளைப் பாதுகாக்கும் எனில், தலித் கட்சிகள் தோன்றியிருக்காது. ஆனால் இதுகாறும், தலித் வரலாறு, தலித் இயக்கம், தலித் இலக்கியம், தலித் அரசியல்... என அனைத்தும் - புறக்கணிக்கப்பட்டதால்தான் - 'தலித் அரசியல்' முகிழ்த்தெழுகிறது என்பதை உணர்த்த வேண்டிய கட்டாயம் நமக்கிருக்கிறது.

•




படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்




'கிளைன் செய்டுங்'




'டெக்கான் கிரானிக்கல்'




'தி இந்து'

"தமிழகத்தில் ஏறக்குறைய 78க்கும் மேற்பட்ட பட்டியல் இன சாதிகள் இருந்தாலும், அதில் ஆதிதிராவிடர் வட தமிழகத்திலும், தேவேந்திரகுல வேளாளர் தென் தமிழகத்திலும், அருந்ததியர் மேற்கு தமிழகத்திலும் திரளாக உள்ளனர். இப்பகுதிகளில் அந்தந்த சமூக மக்கள், அவர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் கோவை, ஈரோடு, நீலகிரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், கரூர் உள்ளடக்கிய மேற்குத் தமிழகத்தில் மொத்தம் 15 தனித் தொகுதிகள் உள்ளன. தமிழகத்தில் இதுவரை 12 சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இதில் முறையாக (15 × 12 = 180) நூற்று எண்பது சட்டமன்ற உறுப்பினர்கள், அருந்ததியர் சமூகத்தின் பிரதிநிதிகளாக வந்திருக்க வேண்டும். ஆனால், இதுவரை 16 சட்டமன்ற வேட்பாளர்கள் மட்டுமே வந்துள்ளனர். இவை அருந்ததியர் சமூகம், சகோதர சாதிகளால்கூட புறக்கணிக்கப்படுகிற அவலத்தையும் காட்டுகிறது. அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்தவர்கள், தென் மற்றும் வட மாவட்டங்களில், எந்தவிதமான தேர்தல்களிலும் (நகரம், ஊராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம்) பங்கேற்க முடியாது. எனவே, அருந்ததியர் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை மேற்கு மாவட்டங்களில் மட்டுமே பெற முடியும். இந்நிலையில், மேற்கு மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளில் - அருந்ததியர்களுக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அனைத்துக் கட்சிகளுக்கும் கோரிக்கை விடுக்கிறோம்.

8.3.2006 அன்று, கோவையில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் ஆதித்தமிழர் பேரவை நிறைவேற்றிய தீர்மானம்.

பெண்ணுரிமை, பெண்களுக்கு அதிகாரப்பகிர்வு - இந்த வார்த்தைகளை உச்சரிக்காத அரசியல் கட்சிகளே கிடையாது. ஆனால், எல்லாமே பேச்சளவில்தான்! அ.தி.மு.க. மட்டும்தான் மிகக் கூடுதலாக 24 பெண்களைக் (அதுவும் 13%) களத்தில் நிறுத்தியுள்ளது. தி.மு.க.வில் அதுகூட இல்லை. பெண் வேட்பாளர்கள் 10 சதவிகிதம்தான். பெரியாரின் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பா.ம.க.வும், விடுதலைச் சிறுத்தைகளும் - பெண்களுக்குத் தேர்தலில் வாய்ப்பு கொடுப்பதில் அ.தி.மு.க., தி.மு.க.வைவிட மிக மிக மோசமாக உள்ளன. பா.ம.க. வெளியிட்டுள்ள 29 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் ஒருவர்தான் பெண். விடுதலைச் சிறுத்தை வேட்பாளர்கள் 9 பேரில் ஒருவர்கூட பெண் இல்லை. புதுவை உட்பட 37 பேர் கொண்ட ம.தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் ஒரே ஒருவர்தான் பெண்.

எஸ். ராமசாமி, செய்தியாளர், 'தினமணி' (31.3.06) நாளேட்டில்

பாபாசாகேப் அம்பேத்கரும், அவருடைய ஆதரவாளர்களும் பவுத்தம் தழுவி, அய்ம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் ஓராண்டு காலப் பொன்விழா கொண்டாட்டங்கள் இந்தியா முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதன் நிறைவு விழா அக்டோபர் 1 முதல் 3 நாட்கள் வரை நடைபெறும். இவ்விழாவில், பவுத்த பண்பாட்டு நிகழ்ச்சிகளும், அம்பேத்கரின் புகைப்படக் கண்காட்சியும் நடைபெறும். இவ்விழாவில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நாக்பூரில் ஒன்றிணைவார்கள். எனவே, இப்பொன்விழாவை முன்னிட்டு அஞ்சல் தலை வெளியிடவும், நாக்பூர் ரயில் நிலையத்திற்கு பாபாசாகேப் அம்பேத்கர் பெயரை சூட்டுவதற்கும் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்."

கவாய், தலைவர், 'அம்பேத்கர் சமரக்சமிதி'



படிப்பகம்

www.padippakam.com

## இப்போது கிடைக்கிறது...

### தெற்காசிய மொழிகளில் முதல் முறையாக

# தமிழில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்

அறிமுக நூல்கள், புதிய துறைகளை அறிந்திட ஆர்வத்தைத் தூண்டும் இலகுவான வழி; முக்கியமான விஷயங்களைக் கற்க விரும்பும் எல்லோருக்கும் தேவைப்படும் அடிப்படையான நூல்கள்; துறை வல்லுநர்களால் எழுதப்பட்டு, உலகம் முழுவதும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போது தமிழில் கிடைக்கும் சுருக்கமான அறிமுகங்கள்:

**இலக்கியக் கோட்பாடு**
ஜானதன் கல்லர்
தமிழில்: ஆர். சிவகுமார்

**பௌத்தம்** தாமியென் கோவ்ன்
தமிழில்: சி. மணி

**இந்துமதம்** கிம் நாட்
தமிழில்: டி.கே. ரகுநாதன்

**உலகமயமாக்கல்**
மான்ஃப்ரட் பி.ஸ்டெகர்
தமிழில்: க. பூரணச்சந்திரன்

**புத்தர்** மைக்கேல் கே.தர்ஸ்
தமிழில்: சி. மணி

**வரலாறு** ஜான் எச். அர்னால்டு
தமிழில்: பிரேம்

**தத்துவம்** எட்வர்டு கிரெய்க்
தமிழில்: சே. கோச்சடை

**ஃப்ராய்ட்** அந்தோனி ஸ்டோர்
தமிழில்: சி. மணி

**சமூக-பண்பாட்டு மானிடவியல்**
ஜான் மோனகன், பீட்டர் ஜஸ்ட்
தமிழில்: பக்தவத்சல பாரதி

**பாசிசம்** கெவின் பாஸ்மோர்
தமிழில்: அ. மங்கை

**அரசியல்** கென்னத் மினோக்
தமிழில்: ஆனந்தராஜ்

**கலைக் கோட்பாடு**
சிந்தியா ஃப்ரீலேண்ட்
தமிழில்: செ. பாபு ராஜேந்திரன்

**இறையியல்***
டேவிட் எஃப். ஃபர்ட்
தமிழில்: சூசைமாணிக்கம்

**உளவியல்***
கில்லியன் பட்லர்,
ஃபிரிடா மெக்மெனஸ்
தமிழில்: டி.ஐ. ரவீந்திரன்

**பின் நவீனத்துவம்***
கிறிஸ்தோஃபர் பட்லர்
தமிழில்: பிரேம்

**ஜனநாயகம்*** பேனட் க்.க்
தமிழில்: த. ஜெயராமன்

**பின் அமைப்பியல்***
கேதரின் பெல்ஸி
தமிழில்: அழகரசன்

**பின் காலனியம்*** யூங்
தமிழில்: அ. மங்கை

**தொல்லியல்*** பவுல் பாஹ்ன்
தமிழில்: சு. ராஜவேலு

**பயங்கரவாதம்***
சார்லஸ் டவுன்செண்ட்
தமிழில்: ஞாநி

**தொண்ணூறு ரூபாயில் உலகப் புகழ்பெற்ற அறிமுக நூல்கள்...**
**கையடக்கமாய்... சிறு பையடக்கமாய்... கருத்தை ஈர்க்கும் தமிழ் நடையில்...**

* ஜூன் 2006 வெளியீடுகள்

வெளியீடு
**அடையாளம்**
1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310. ✆ 04332 273444 email:admin@adaiyalam.com

கிடைக்குமிடங்கள்: **சென்னை:** திலீப் குமார் 044 24952217, ஹிக்கின்பாதம்ஸ் 28520640, நியூ புக்லேண்ட்ஸ் 28158171, கீழைக்காற்று 28412367 **கோவை:** விஜயா புக்ஸ் 0422 2394614 **சேலம்:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 0427 245081 **திருச்சி:** 0431 2700885 **தஞ்சை:** 04362 231371 **மதுரை:** 0452 2350271 **திருநெல்வேலி:** ஈகிள் புக்ஸ் 0462 2578899, **நாகர்கோவில்:** சுதர்சன் புக்ஸ் 04652 228445, **இலங்கை:** பூபால சிங்கம் புத்தக சாலை, கொழும்பு 11

படிப்பகம்

www.padippakam.com

# “பறச்சி சமைச்சத சாப்பிடக் கூடாதுன்னு சொல்லித் தடுத்திட்டாங்க”

■ ரா. முருகப்பன்

தமிழகம் எத்தனையோ வகை போராட்டங்களைக் கண்டிருக்கிறது. ஆனால் அண்மையில், கிருஷ்ணகிரி மாவட்டம் - போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள அ. மோட்டூர் என்கிற குக்கிராமத்தில் நாம் நினைத்துக்கூட பார்க்க முடியாத, மனித நாகரிகமற்ற ஒரு போராட்டம் நடைபெற்றுள்ளது, தீண்டாமைக் கொடுமைக்கு ஆதரவாக! தி.மு.க.வின் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மாதன் என்பவரும், ஊர்க் கவுண்டராக உள்ள மாதேஸ் என்பவரும் சேர்ந்து கொண்டு, ''பறச்சி சமைக்கிற சாப்பாட்ட ஊர்ப்பசங்க சாப்பிடக் கூடாது'' என்று 7.3.2006 அன்று, ஊரிலிருந்து பள்ளிக்கு ஒரு மாணவனைக்கூட அனுப்பாமல் தடுத்துள்ளனர். மேற்கண்ட மாதன், மாதேஸ் இருவரும் வன்னியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


மகேஸ்வரி தமது குழந்தைகளுடன்

அ. மோட்டூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், மொத்தம் 88 மாணவர்கள் உள்ளனர். வன்னியர் சாதியைச் சேர்ந்த 55 மாணவர்களும், இசுலாமியர்கள் 11 பேரும், இருளர்கள் 22 பேரும் இங்கு சேர்ந்து படிக்கின்றனர். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் யாரும் இங்கு படிக்கவில்லை. அ. மோட்டூரில் இருந்து ஒரு கி.மீ. தொலைவில் உள்ள முருக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 28 வயது நிரம்பிய மகேஸ்வரி, கணவனை இழந்தவர். 2004 ஆம் ஆண்டில் பெங்களூரில் நடைபெற்ற விபத்து ஒன்றில் இவர் கணவர் இறந்து விட்டார். மகேஸ்வரி நான்கு குழந்தைகளுடன், பெற்றோர் ஆதரவில் வாழ்ந்து வருகிறார். கணவனை இழந்த பெண் என்ற வகையில், கருணை அடிப்படையில் அ. மோட்டூர் தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமைக்கும் ஆயாவாக அரசு இவரை நியமனம் செய்தது.

அதன் அடிப்படையில் மார்ச் 2 அன்று பள்ளிக்கு வேலையில் சேரச் சென்ற மகேஸ்வரியை, மறுநாள் வரச்சொல்லி தலைமை ஆசிரியர் கூறியுள்ளார். அதன்படி மகேஸ்வரி மறுநாள் மார்ச் 3 அன்று, பள்ளிக்குச் சென்று சமையல் வேலை செய்துள்ளார். சாப்பாட்டு மணி அடித்ததும், மாணவர்கள் எல்லாம் வழக்கத்திற்கு மாறாக பள்ளியில் இருந்து வீட்டிற்குச் சென்றுள்ளனர். மொத்தம் உள்ள 88 மாணவர்களில், சுமார் 20 பேரே அன்று சாப்பிட்டுள்ளனர். இரண்டு மணிக்குப் பள்ளி தொடங்கி, அனைத்து மாணவர்களும் வந்துள்ளனர். ஆனால், யாரும் சாப்பிடவில்லை. அதன் பிறகு பொறுப்பாளர் உணவைக் கீழே கொட்டியுள்ளார். மறுநாள் வெள்ளிக் கிழமை அன்றும், சுமார் 10 பேர் மட்டுமே சாப்பிட்டுள்ளனர். அன்றும் மகேஸ்வரி சமைத்த உணவு கீழே கொட்டப்பட்டுள்ளது. மறுநாள் சனிக்கிழமை சமைக்கப்பட்ட உணவை, ஒரு மாணவர்கூட சாப்பிடவில்லை. மகேஸ்வரி சமைத்த உணவு முழுவதும் கீழே கொட்டப்பட்டுவிட்டது.

தான் சமைத்த உணவைக்கூட சாப்பிட மறுக்கும் அவலநிலை கண்டு மனம் வெறுத்த மகேஸ்வரி, நொந்துபோய் தன் குழந்தைகளுடன் அயிலம்பட்டியில் உள்ள தன் தாய் வீட்டிற்குச் சென்றுள்ளார். இந்நிலையில் தகவல் அறிந்த விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைப்பளார் ராமன், காவேரிப்பட்டிணம் ஒன்றிய அமைப்பாளர் அண்ணாமலை ஆகிய இருவரும் மகேசுவரியை தேடிச்சென்று, நேரில் பார்த்து ஆறுதல் சொல்லி தைரியப்படுத்தி, திங்களன்று பள்ளிக்கு வரச் செய்துள்ளனர். மேற்கண்ட ராமன், அண்ணாமலை இரு



படிப்பகம்

www.padippakam.com

வரும் ஞாயிறு அன்றே, மோட்டூர் பள்ளியில் நடைபெறும் இக்கொடுமை குறித்து மாவட்ட, வட்ட அரசு நிர்வாகத் திற்கும், காவல் அதிகாரிகளுக்கும் தகவல் தந்துள்ளனர்.

அதற்குப் பிறகு மார்ச் 7, திங்கள் காலை 8 மணிக்கெல் லாம் பாரூர் போலிசார் பள்ளிக்குச் சென்றுள்ளனர். ஆசிரியர் களும் பொறுப்பாளர் மகேஸ்வரியும் வந்துள்ளனர். மாணவர் கள் யாரும் பள்ளிக்குக்கூட வரவில்லை. 10.30 மணி வரை பார்த்தும் மாணவர்கள் யாரும் பள்ளிக்கு வராத நிலையில், தலைமை ஆசிரியர் கல்வியதிகாரிகளுக்கு தகவல் அளித் துள்ளார். பொறுப்பாளரும் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தகவல் தந்துள்ளார். அடுத்த அரை மணி நேரத்தில், போச்சம் பள்ளி வட்டாட்சியர், காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய ஆணையர், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் பள்ளிக்கு வந்துள்ளனர். அதிகாரிகள் பெற்றோர்களை அழைத்துப் பேசியுள்ளனர். பெற்றோர்கள் பேசாமலிருக்க, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், தி.மு.க.வை சேர்ந்தவருமான 45 வயதான மாதன் என்பவரும், ஊர்க்கவுண்டர் என்கிற 35 வயதான மாதேஸ் என்பவரும், ''தாழ்த்தப்பட்ட பெண் சமைச்சா ஊர்ப்பசங்க வரமாட்டாங்க. அந்தப் பெண்ணை மாற்றினால்தான் மாணவர்கள் பள்ளிக்கு வருவார்கள்'' என்று அரசு அதிகாரிகளை மிரட்டியுள்ளனர்.

முதுகெலும்பற்ற அரசு அதிகாரிகள், அவர்களின் கோரிக் கைக்குப் பயந்து, மகேஸ்வரியை 3 கி.மீ. தொலைவில் உள்ள அரசம்பட்டி என்கிற ஊரில் உள்ள மேனிலைப் பள்ளிக்கு மாற்றுகின்றனர். அதன் பிறகுதான் மாணவர்களை - மாதன், மாதேஸ் இருவரும் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மகேஸ்வரியைப் பற்றிய கவலையின்றி அதிகாரிகள் இருந்த நிலையில், இக்கொடுமை குறித்து அறிந்த பத்திரிகைகள் செய்தி வெளியிட ஆரம்பித்தன. முதலில் 'தீக்கதிர்', 'தினகரன்', 'தினமலர்' என நாளிதழ்களும் 'ஜூனியர் விகடன்' வார இதழும் மகேஸ்வரிக்கு நேர்ந்த அவலம் குறித்து எழுதின.



**''கம்ப்யூட்டர் உலகம்னு சொல்றாங்க. ஆனா கிராமத்தில் இன்னமும் தலித்துகளுக்கு தீண்டாமை மட்டும் அப்படியே உள்ளது. இதுக்கு காரணமே பாதிக்கப்பட்டவங்க புகார் கொடுத்தா, போலிஸ் நடவடிக்கையே எடுக்கறதில்ல.''**

- அண்ணாமலை, 'விடுதலைச் சிறுத்தைகள்' காவேரிப்பட்டிணம் ஒன்றிய அமைப்பாளர்

இதற்கும் மேலாக, திராவிடர் கழகத்தின் 'விடுதலை' நாளிதழ், இந்த வன்கொடுமைகள் குறித்தும், குற்றவாளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தொடர்ந்து 2 நாள்கள் செய்தி மற்றும் இரண்டு நாள்கள் தலையங்கம் எழுதியதுடன் - 10.3.2006 அன்று தஞ்சையில் நடந்த அவர் களின் பொதுக் குழுவில், ''மோட்டூரில் நிலவும் தீண்டாமைக் கொடுமைக்கு முடிவு கட்டுக'' என தனித் தீர்மானமும் நிறை வேற்றினர். இதன் பிறகும் நடந்த கொடுமை குறித்து கொஞ்ச மும் அக்கறையற்ற நிலையில், 'அ.தி.மு.க. தான் செய்தது'



**''இதே விடுதலைச் சிறுத்தைகள்னா தப்பு எதுவும் செய்யாம இருக்கும் போதே, பொய் வழக்கு, கைதுனு பண்ணத் துடிக்கிற போலிஸ், இப்ப என்ன பண்ணுதுன்னே தெரியல''**

- ராமன், 'விடுதலைச் சிறுத்தைகள்' கிருஷ்ணகிரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

என கருணாநிதியும், 'இல்லை தி.மு.க. வினர்தான்' என ஜெயலலிதாவும் லாவணி பாடினர். இதன் பிறகு விழித்துக் கொண்ட அரசு அதிகாரிகள், அவசர அவசரமாக விழுந்தடித்து ஓடி, அரசம்பட்டி பள்ளியில் இருந்த மகேஸ்வரியை, அரசு வண்டியிலேயே மோட்டூர் பள்ளிக்கு மீண்டும் அழைத்து வந்து பணியமர்த்தி உள்ளனர்; சமைக்கச் செய்து மாணவர் களை வற்புறுத்தி சாப்பிடச் செய்துள்ளனர்.

இதற்கிடையே ஊராட்சி ஒன்றிய ஆணையர், பின்னாளில் தனக்கு எதுவும் பிரச்சினை வந்து விடக் கூடாது என்பதற்காக, பள்ளிப் பொறுப்பாளர் மோகனிடம் அறிக்கை ஒன்றைப் பெற்று, அதையே காவல் துறையிடம் புகாராகத் தந்துள்ளார். அதை வைத்து பாரூர் காவல் துறையினர் மாதேஸ், மாதன் ஆகிய இருவர் மீதும் குற்ற எண் 45/2006இன்படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். பி.சி.ஆர் சட்டம் 1955 பிரிவு 4(i) (iii) என்கிற குற்றப் பிரிவில் சேர்த்துள்ளனர்.

இதனிடையே மார்ச் 15 அன்று, நாம் அப்பள்ளியையும், பாதிக்கப்பட்ட மகேஸ்வரி, சாப்பிட மறுத்த மாணவர்கள் என அனைவரையும் நேரில் சந்தித்தோம். அப்போது நம்மிடம் முதலில் பேசிய சத்துணவுப் பொறுப்பாளர் மோகன், ''மகேஸ்வரிக்கு முன்னாடி இங்கு ஒரு ஆயாதான் சமைச் சாங்க. அவங்களும் வேறு பள்ளியில் இருந்து மாற்றுப் பணி யாக வந்தவங்கதான். ரொம்ப நாளா புது ஆள் போடாமலே இருந்தாங்க. அப்புறம் இப்பதான் மகேஸ்வரி வந்தாங்க, சமைச்சாங்க. மூணு நாள்ல - பசங்க 2 நாள் கொஞ்ச பேர் சாப் பிட்டாங்க, சனிக்கிழமை யாருமே சாப்பிடல. இதை நான் என் மேலதிகாரிக்கு, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அறிக் கையாகத் தந்தேன். அதுக்கப்புறம் அதிகாரி, போலிஸ் எல்லாம் பள்ளிக்கு வந்தாங்க. பேசினாங்க. மாதேஸ், மாதன் இரண்டு பேரும் மகேஸ்வரிய மாத்தினால்தான் பசங்க சாப்பிடுவாங்க என்று பேசினர். அப்புறம் மகேஸ்வரி மூணு நாள் அரசம்பட்டி பள்ளிக்குப் போனாங்க. அப்புறம் அதிகாரி களே இங்க அழைச்சிகிட்டு வந்தாங்க. சமைக்க வச்சி, பசங்கள வச்சி சாப்பிட வச்சாங்க'' என்று கூறினார்.

நாம் பள்ளிக்குப் போன நேரம் சாப்பாட்டுக்கு மணி அடித்து, மாணவர்கள் தட்டைக் கழுவிக் கொண்டிருந்தார்கள். பிறகு மாணவர்கள் வரிசையில் நின்று சாப்பாடு வாங்கினர். ஒரு பெண் சாப்பாடு போடுவதைப் பார்த்தோம். 8 பேர் மட்டும் வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்து வந்து சாப்பிட் டார்கள். விசாரித்ததில் தினமும் அவர்கள் வீட்டு சாப்பாடு தான் சாப்பிடுவார்கள் என்றனர். அதன் பிறகு மகேஸ்வரியை பார்க்கலாமா என்று பொறுப்பாளரிடம் கேட்டோம். அழைத்து வந்தவர், இவர்தான் மகேஸ்வரி என்றார். வரிசை



படிப்பகம்

www.padippakam.com

யில் நின்ற மாணவர்களுக்கு சாப்பாடு போட்ட அதே பெண். மகேஸ்வரியிடம் பேசிய வகையில் நாம் மேலே குறிப்பிட்டுள்ள அதே சம்பவங்களையே கூறினார். அதன் பிறகு அவரை புகைப்படம் எடுக்க அழைத்துச் சென்று தனியாக விசாரித்தபோதுதான் தன்னுடைய அச்சத்தை வெளிப்படுத்தினார் : ''முதல்ல மாதிரி இல்ல சார். இப்ப பசங்க சாப்பிடுறாங்க. ஆனா இது எத்தனை நாளைக்குன்னு தெரியல. ஏன்னா, நான் சமைக்கிற சாப்பாட்டுல யார் மூலமாவது எதையாவது கலந்து, பசங்களுக்கு ஏதாவது ஆச்சின்னா. நான்தான் செஞ்சேன்னு என்மேல் பழிபோட்டுடுவாங்களோன்னு பயமா இருக்கு. மாதன் ஆட்கள் எங்க ஊர் முருக்கம்பட்டியில, ஒருதடவ கலவரம் பண்ணி வீட்ட எல்லாம் அடிச்சிருக்காங்க'' என்றார்.


அ. மோட்டூர் பள்ளியில் நண்பகல் உணவை உண்ணும் மாணவர்கள்

சமைத்த உணவை சாப்பிட மறுக்கும் அவலம்; சாப்பிட ஆரம்பித்தாலும் இந்த அச்சம். இதனிடையே நான்கு மாணவர்களிடம் தனித் தனியாக, 'ஏன் நீங்கள் பள்ளியில் 3 நாட்களாக சாப்பிடவில்லை. ஒரு நாள் பள்ளிக்கும் போகவில்லை?' என்று கேட்டோம். மற்ற மாணவர்கள் பதில் சொல்லாமல் நழுவிய நிலையில், ஒருவரிடமிருந்து மட்டும் - ''பறச்சி சமைச்சத சாப்பிடக்கூடாதுன்னு சொல்லித் தடுத்திட்டாங்க'' - பளிச்சென்று பதில் வந்தது. உடனே அந்த மாணவரை வேறு இரண்டு மாணவர்கள், ''ஏய் சொல்லாத... சொல்லாத...'' என்பதையும் காண முடிந்தது.

இச்சம்பவம் குறித்து, பர்கூர் டி.எஸ்.பி. வில்வரெனி முருகன் அவர்களிடம் கேட்டபோது, ''இப்ப ஏதும் பிரச்சினை இல்லங்க சார். அந்தப் பொண்ணு புகார் தரல. அதிகாரி புகார வச்சிதான் எப்.அய்.ஆர். போட்டிருக்கோம். விசாரிச்சிகிட்டிருக்கோம்'' என்று கூறினார். மேலும் நாம், ''மாதேஸ், மாதன் மேல நடவடிக்கை எடுக்கலீங்களா?'' எனக் கேட்டதற்கு, ''இப்ப பிரச்சினை ஏதும் இல்லையே சார். சுமூகமா இருக்கு'' என்று கூறி முடித்துக் கொண்டார். நடவடிக்கை எடுக்க வேண்டிய விசாரணை அதிகாரியான டி.எஸ்.பி.யே இப்படி பொறுப்பற்று இருந்தால், இன்னும் பல மாதேஸ், மாதன்கள் பாதுகாப்பாக இருக்கலாம். மகேஸ்வரிகள் மட்டும் பயத்துடனேயே வாழ வேண்டும்!



“நான் சமைக்கிற சாப்பாட்டுல யார் மூலமாவது எதை யாவது கலந்து, பசங்களுக்கு ஏதாவது ஆச்சின்னா, நான்தான் செஞ்சேன்னு என்மேல் பழிபோட்டுடு வாங்களோன்னு பயமா இருக்கு.”

இதன் பிறகு நாம், இப்பிரச்சினையை வெளியுலகுக்குக் கொண்டு வந்து, மகேஸ்வரி மீண்டும் அதே பள்ளியிலேயே பணியாற்ற - அடிப்படைக் காரணமாக அமைந்த விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த காவேரிப்பட்டிணம் ஒன்றிய அமைப்பாளர் அண்ணாமலை அவர்களை சந்தித்தோம் : ''விஞ்ஞான வளர்ச்சி, நாகரிக முன்னேற்றம், அறிவியல் தொழில்நுட்பம், கம்ப்யூட்டர் உலகம்னு சொல்றாங்க. ஆனா கிராமத்தில் இன்னமும் தலித்துகளுக்கு வன்கொடுமையும், தீண்டாமையும் அப்படியே உள்ளது. இதுக்கு காரணமே போலிஸ்தான் சார். பாதிக்கப்பட்டு புகார் கொடுத்தா நடவடிக்கையே எடுக்கறது இல்ல. இந்த தைரியத்துலதான் அவர்கள் தலித்துகளை மேலும் மேலும் வன்கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள். போலிஸ் எப்ப ஒழுங்கா நடவடிக்கை எடுக்குறாங்களோ, அப்பதான் கொஞ்சம் மாற்றம் வரும்'' என்று கூறினார்.

இவருடன் துணையாக நின்று உதவிய கிருட்டிணகிரி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமன் அவர்களைச் சந்தித்தோம். அவர் நம்மிடம், ''என்ன சார் கொடுமை இது! சாப்பாட்டில் கூடவா தீண்டாமை? நாம சமைச்சத யாரும் சாப்பிடலயேன்னு அந்தப் பொண்ணு ஒரு மாதிரி மனசு பாதிச்சு, அவுங்க அம்மா வீட்ல இருந்துச்சுங்க சார். இந்த அவமானம் தாங்காம அந்தப் பொண்ணு ஏதாவது செஞ்சிகிட்டிருந்தா, என்ன சார் ஆவுறது? அந்த 4 குழந்தையோட கதி என்னா சார் ஆயிருக்கும். ஏதோ நாம எல்லாம் தலையிட்டு, ஒரு வழியா அந்தப் பொண்ணோட மனச தேத்தி, திரும்பவும் அது வேலைக்குப் போவுது. இவ்வளவு நடந்திருக்கு. இத்தனை பத்திரிகைகள்ல வந்திருக்கு. ஒரு அதிகாரியும் ஒண்ணும் செய்யல. இதே விடுதலைச் சிறுத்தைகள்னா, தப்பு எதுவும் செய்யாம இருக்கும்போதே பொய் வழக்குல கைது பண்ணத் துடிக்கிற போலிஸ், இப்ப என்ன பண்ணுதுன்னே தெரியல'' என்று கோபத்துடன் கூறினார்.

இத்தீண்டாமைக் கொடுமை, இம்மாவட்டத்தில் நடக்கும் மூன்றாவது நிகழ்வு ஆகும். இதற்கு முன்பும் இதே போன்று, தலித் பெண்கள் சமைக்கச் சென்றபோது, சமையல் செய்யவிடாமல் மாற்றப்பட்டு, அதிகாரிகளால் மூடிமறைக்கப்பட்டுள்ளது. பத்திரிகைகளில் இவ்வளவு பெரிய அளவில் செய்தி வெளியான பிறகும், முதல்வர் ஒரு பெண் என்ற நிலையிலும் அமைதி காக்கிறார். அரசியல்வாதிகள் எல்லாம் தேர்தலை நோக்கி ஓடுகிறார்கள்; அதிகாரிகள் எல்லாம் அவர்களுக்கு வால்பிடிக்க காத்திருக்கிறார்கள். மகேஸ்வரிகள் மட்டும் சுயமரியாதைக்காக, அவமானங்களைத் தாங்கி நிற்கிறார்கள். இறுதிவரை மகேஸ்வரிகளுக்காக யார் போராடப் போகிறார்கள்? ●



படிப்பகம்

www.padippakam.com



## சட்டமும் பெண்களின் பாலியல் உரிமைகளும்

**விலை ரூ.70**

''பெண்களின் தாழ்வுணர்ச்சியும், அடக்கமும், மந்தத்தனமும் அடிபணிதலும், பயமும் எங்கிருந்து தோன்றுகின்றன. அவளின் வளர்ப்பில், இந்து வளர்ப்பில் (சாதிய), ஆண் ஆதிக்க மரபில் சுற்றுச் சூழலின் இறுக்கத்தில் இருக்கிறது. அமைதியான, சலன மற்ற, எந்திரமான மரபுக் குடும்பத்தைவிட, எழுச்சியும், வீறும் கொண்ட சுதந்திரமான பெண் - ஆண் குடும்பமே இனிமையான, இன்பமயமான வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.''




■ ஆசிரியர்: பிலோமியா அக்னீஸ் ■ பக்கங்கள்: 160
■ வெளியீடு : விடியல் பதிப்பகம் ,
11, பெரியார் நகர், மசக்காளிபாளையம்,
கோயம்புத்தூர் - 641 015, பேசி : 0422-2576772

●●

## விடுதலை வீரர் ராஜூ

**விலை ரூ.20**

''விடுதலை வீரர் தலைவர் ராஜூ அய்யா என்றால் மேற்கு மாவட்டங்களில், அவரை அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். கோவை போத்தனூரை அடுத்த வெள்ளனூர் கிராமப் பள்ளியில் தீண்டாமை இருப்பதைக் கண்டு கொதித்தெழுந்தார். பள்ளியின் தலைமை ஆசிரியரை அழைத்துக் கண்டித்து, தீண்டாமையை நடைமுறைப்படுத்தும் அவர் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டி, பள்ளி நிர்வாகத்தை கதிகலக்கிவிட்டார். நிலைமையின் பாதகத்தை உணர்ந்த தலைமை ஆசிரியரும், பள்ளி நிர்வாகமும் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டது.''




■ ஆசிரியர்: எழில் இளங்கோவன் ■ பக்கங்கள்: 70
■ வெளியீடு : ஆதித்தமிழர் பேரவை,
51, மருதமலைச் சாலை, கல்லூரிப் புதூர்,
கோவை - 641 041 ■ பேசி : 0422 - 2439445

●●

## புகைக்கல்லில் ஓர் புகைச்சல்

**விலை ரூ.50**

''தமிழகத்தில் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் நமது சகோதரர்கள் என்று, சரிநிகர் சமானமாக வைத்துப் போற்றுகின்றோம். எந்த மொழி, எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும், தமிழ் மக்களுக்கு நிகராகவே நடத்தப்படும் நல்ல பண்பு உள்ளது. இந்திய குடிமக்கள் அனைவரும் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, சகல உரிமையும் பெற்றவர்கள். அதில் கர்நாடகா மட்டும் விதிவிலக்காக இருப்பதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளதா? மாநில உரிமைகள் என்பது வேறு. இந்நாட்டு குடிமக்கள் உரிமைகளை ஒரு மாநில அரசு பறித்து விடவா முடியும்?''




■ ஆசிரியர்: ந. நஞ்சப்பன் ■ பக்கங்கள்: 66
■ வெளியீடு: ஒகேனக்கல் உரிமைப் பாதுகாப்புக் குழு, அமைதி இல்லம், பென்னாகரம், தருமபுரி
■ பேசி : 94434 58491

## பெரியார் பார்வையில் இஸ்லாமும் புத்தமும்

**விலை ரூ.45**




''புத்த சமயத்தை மறுபடியும் வகுத்தவர்கள் - முறைப்படுத்தியவர்கள் என முக்கியமாகக் குறிப்பிடப்படும் அனைவரிலும் - பெரியார்தான் மிகுந்த புரட்சித் தன்மையராகவும் குற்றம் குறைகளுக்கு இடமில்லாதவராகவும் இருக்கிறார். எப்படியெனில் அவர்தான் புத்தரின் மய்யமான போதனையைச் சுற்றிலும் ஆயிரம் ஆண்டுகாலமாய்ப் பெருகி இருந்த பழைய மரபுகளின் புறப் பெருக்கங்களை, ஏறக் குறைய முழுமையாகத் தவிர்த்து மேற்சென்றார்.''

■ ஆசிரியர் : ஞான. அலாய்சியஸ் ■ பக்கங்கள் :104
■ வெளியீடு : புதுமலர் பதிப்பகம், 176, வைகை வீதி, வீரப்பன் சத்திரம், ஈரோடு - 638 004 ■ பேசி : 0424 - 2219340

●●

## இடஒதுக்கீடும் இடர்ப்பாடுகளும்

**விலை ரூ.30**




''ஏழ்மையும் தாழ்த்தப்பட்ட தன்மையும் ஒன்றல்ல. தாழ்த்தப்பட்ட நிலை என்பது, சமூகப் பிரச்சினை, ஏழ்மை என்பது பொருளாதாரப் பிரச்சினை. தாழ்த்தப்பட்ட நிலையால் ஏழ்மை நிலை உண்டாக்கப்படுகிறது. ஆனால், ஏழ்மை நிலையால் தாழ்த்தப்பட்ட நிலை உருவாக்கப்படுவதில்லை. ஏழ்மையைத் தீர்மானிக்க, பொருளாதார அளவீடு மட்டுமே போதும். ஆனால், தாழ்த்தப்பட்ட நிலையைத் தீர்மானிக்க பொருளாதார அளவீடு மட்டும் போதாது; சமூக நிலையையும் அளவீடாகக் கொள்ள வேண்டும். சமூக ஏற்றத் தாழ்வு என்பது, பிறக்கும் சாதியிலிருந்தே தீர்மானிக்கப்படுகிறது.''

■ ஆசிரியர்: செயமாலை ராஜா ■ பக்கங்கள்: 120 ■ வெளியீடு: முகில் பதிப்பகம், அய்டியாசு மய்யம், 26-அ, வாழைத் தோப்பு, சிந்தாமணி சாலை, மதுரை - 625001

●●

## தலித்துகளும் வன்கொடுமைகளும்

**விலை ரூ.50**




''தலித் மக்கள் மீதான வன்கொடுமைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்தியச் சட்டங்களும் நீதியும் அதைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டன. காரணம், சட்டமும் நீதியும், ஆட்சியும் அதிகாரமும், சாதி உணர்வாளர்களின் பிடியில் சிக்கியிருக்கின்றன. அத்தகையோரின் துணையோடுதான் வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனவே, தலித் மக்கள் தங்கள் மீது ஏவப்படும் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த, வேறுவழிகளைத் தேட வேண்டியவர்களாக உள்ளனர். இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளவை, வெறும் வன்கொடுமைப் பட்டியலாக மட்டும் இல்லாமல், தலித் மக்களுக்கும், தலித் இயக்கங்களுக்கும் தற்காப்பு உணர்வையும், செயல் திட்டத்தையும் உருவாக்கும்.''

■ பக்கங்கள்: 170 ■ வெளியீடு : தலித் ஆதார மய்யம், 32, பாரதிதாசன் சாலை, அரசரடி, மதுரை - 625 016
■ பேசி : 0452 - 2302199



படிப்பகம்

www.padippakam.com

# தனியராகத் திரண்டெழுந்த வரலாறு!

■ **கே.எஸ். முத்து**

பல்லாயிரக்கணக்கான சாதிகளால், விடுவிக்க இயலாத வகையில் கட்டமைக்கப்பட்டிருக்கும் இந்திய சமூகத்தில் - சமத்துவத்தையும், சாதி ஒழிப்பையும், நீதி நேர்மையையும் நிலைநாட்ட வெகுண்டெழுந்து போராடிய - தன்மானமிக்கத் தலைவர்களின் வரிசையில், இந்திய அளவில் முதல் போரா ளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்தான் மகாத்மா புலே. அண்ணல் அம்பேத்கரின் புரட்சிகர சிந்தனைகளுக்கு உயிரூட் டிய சமூக ஆசிரியர்களுள் ஒருவராக அறியப்படும் மகாத்மா புலே, இந்திய சமூக சீர்திருத்தத்தின் முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறார். ஆனால், புலே பிறப்பதற்கு முன்பே அவர் தன் வாழ்கையில் என்னவெல்லாம் செய்ய நினைத் தாரோ, எதையெல்லாம் சாதிக்கத் துணிந்தாரோ, அதை யெல்லாம் தனியொரு மனிதனாகத் திரண்டெழுந்து நிகழ்த் திக் காட்டிய வீர வரலாற்றை - வழக்கம் போல சாதியச் சமூகம் மறைத்திருக்கிறது.

> **கடவுள்களின் கோபத்தைத் தணிக்க ஆதிக்கச் சாதியினர், தாழ்த்தப்பட்ட மக்களையே நரபலிக்கு ஆளாக்கினர். எப்பொழுதாவது ஒரு ஆற்றில் அல்லது குளத்தில் கடும் மழையால், புயலால் வெள்ளம் ஏற்பட்டு கரை உடைந்து விட்டால், அதற்கு கடவுளின் கோபமே காரணம் எனக்கூறி, கடவுள்களுக்கு ஏற்பட்ட கோபத்தைத் தணிக்க தாழ்த்தப்பட்ட மக்களை உடைப்பில் போட்டு மண்ணைப் போட்டு மூடி பலி கொடுத்தனர்.**

அத்தகைய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்தான் மகராசன் வேதமாணிக்கம். சாக்கிய இனத்தின் மூலாம்பர வேர்களின் அதிர்வுகளில் கருத்தரித்து, பொருள் முதல்வாதத் தத்து வத்தில் ஆளுமை பெற்று, கிறித்துவத்தின் வழியே - சாதி ஒழிப்பையும், சம உரிமையையும் வென்றெடுத் தவரே மகராசன் வேதமாணிக்கம். சாதிய சமூகத்தால் மறைக்கடிக்கப்பட்ட அந்த வரலாற்று நாயகனைத் தேடிப்பிடித்து, தமிழ்ச் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தி யுள்ளார், ஏபி. வள்ளிநாயகம்.

'மகாத்மா புலேவுக்கு முன் மகராசன் வேதமாணிக் கம்' என்ற நூல் வழியே மகராசன் வேதமாணிக்கத்தை மட்டுமின்றி, கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலான தென்னிந் திய சமூகச் சூழலையும், இக்காலங்களில் ஆட்சி செய்த மன்னர்களின் செயல்பாடுகளையும், உழைக்கும் மக்களுக்கு இழைத்த சொல்லொணா துயரங்களையும் அம்பலப்படுத்தியுள்ளார். குறிப்பாக அன்றைய சாணார்கள் - இன்றைய நாடார் சமூக எழுச் சிக்காகப் போராடிய அய்யா வைகுண்டர் (1809 - 1851), ஒடுக் கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகப் போராடிய பவுத்த வழித்தோன்றல் மகராசன் வேதமாணிக்கத்திற்கு 58 வயது இளையவர் ஆவார். அதுபோல, ஈழவர்களின் சமூக உரிமைக் காகப் போராடிய நாராயணகுரு (1826 - 1928), சாம்பவர்களின் எழுச்சிக்குத் தலைமையேற்று வழி நடத்திய மகராசன் வேத மாணிக்கத்திற்கு 99 வயது இளையவர். மேலும், புலையர்களின் சமூக எழுச்சிக்காகப் போராடிய தலைவர் அய்யன்காளி (1863 - 1941), மகராசன் வேதமாணிக்கத்திற்கு 106 வயது இளையவர் ஆவார் என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் மெய்ப்பிக்கிறது இந்நூல்.

இந்திய சமூகத்தை ஆய்வு செய்தவர்கள், இந்திய வரலாற்றை எழுதிய வரலாற்று அறிஞர்கள், கல்வியாளர்கள், சாதிகளால் கட்டமைக்கப்பட்ட அடுக்கு கோபுரத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டு, தங்களுக்குக் கிடைத்த மேலோட்டமான தரவுகளின் மேல் காலூன்றி, தங்களுக்கே உரிய 'பொதுப்புத்தி'யின் அடிப் படையிலேயே வரலாற்றைப் புனைந்திருக்கின்றனர். வரலாற் றைத் திரித்து எழுதியது மட்டுமின்றி, தங்களால் இயன்றவரை இருட்டடிப்பு வேலையையும் திறம்படச் செய்திருக்கிறார்கள். ஆனால், அதே வேளை, இந்திய சமூகத்தை ஆய்வு செய்த அய் ரோப்பிய மற்றும் மேற்கத்திய அறிஞர்கள் பலர், வரலாற்றை சரி யாகப் பதிவு செய்ய முனைந்திருக்கிறார்கள். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட நூல்களில்தான் ஒடுக்கப்பட்டோரின் உண்மை யான சமூக நிலையை சான்றாதாரங்களாகக் காண முடிகிறது.

சமூகவியல் குறித்த சிந்தனையை அய்ரோப்பிய அறிஞர் களிடமிருந்துதான் இந்திய கல்வியாளர்கள் பெற்றுக் கொண் டனர் என்பதையும் இந்நூல் மறுக்கிறது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகுதான் அய்ரோப்பிய சிந்தனையாளர்களிடம் சமூகவியல் குறித்த அக்கறை மேலெழும்பியது. குறிப்பாகச் சொல்ல வேண்டு மெனில், அகஸ்ட் கோம்த் என்னும் பிரெஞ்சு சிந்தனையாளர்தான் 'சமூகவியல்' என்ற சொல்லை உருவாக்கி - சமூகக் குழுக் களை, சமூக அமைப்பை, மனித நடத்தைகளை அவற் றுக்கான காரணங்களை சமூக அறிவியல் நோக் கில் ஆராயத் தொடங்கினார். அவருக்குப் பிறகே எண்ணற்ற சமூகவியலாளர்கள், சமூகத்தைப் பல் வேறு கோணங்களில் ஆய்வு செய்ய முன் வந்தனர்.



மகராசன் வேதமாணிக்கம்

'சமூகவியல் தந்தை' என வர்ணிக்கப்படும் அகஸ்ட் கோம்த் பிறப்பதற்கு முன்பே, சமூகத்தை ஆய்வு செய்து அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்த பெருமை, மகராசன் வேதமாணிக்கத்திற்கு உண்டு என்றால் மிகையில்லை. இவரைப் போன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்து மிகப் பெரிய சமூக மாற்றப் புரட்சிகளை முன்னெடுத்த போராளிகள், ஏன் சமூகத்திற்கு அடையாளம் காட்டப்படுவதில்லை என்பதற் கான காரணங்களை ஆராய்கின்றபோது, பளிச்சென ஓர் உண்மை விளங்குகிறது. தாழ்த்தப்பட்ட சமூ கத்தில் பிறந்தவன் எத்தகைய அறிவாளியாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தாலும், அவனை அறிவாளியாக அங்கீகரிக்க மாட்டோம்; எந்தவொரு உண்மையும், சமூகப் புரட்சியும் தாழ்த்தப்பட்டவன் வழியாக ஏற்பட்டு விடக்கூடாது; அதற்கு நாங்களே உரிமையானவர்கள் என்ற சாதி இந்துக்களின் இறுமாப்பே இத்தகைய வரலாற்று மோசடிக்குக் காரணமாக அமைகின்றது.

சாதி இந்து ஆய்வாளர்களால் - அறிவுஜீவிகளால் மறைக்கப்பட்ட போராட்ட வரலாறுகள், ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களால் அடையாளம் கண்டு பதிவு செய்யப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் இந்நூலும் இடம் பெறுகிறது. மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூல், முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைத் தாங்கிய தகவல் களஞ்சியமாகத் திகழ்கிறது. சாதி - தீண்டாமை ஒடுக்குமுறை, பார்ப்பனிய பயங்கரவாதம், சாதி ஆதிக்க வன்மத்தின் வரிக்கொடுமை, ஆணாதிக்கம், புலைப்பேடி, பறைப்பேடி, வண்ணாப்பேடி சம்பிரதாயங்கள், ஆங்கிலேயரின் ஆதிக்கம் - இவையனைத்தும் கொடி கட்டிப் பறந்த பிரிக்கப்படாத திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், தனியொரு மனிதனாய் வெகுண்டெழுந்து - ஒரு யுகப் புரட்சியை முன்னெடுத்த மகராசன் வேதமாணிக்கத்தின் வாழ்வும் - பணியும், அடித்தட்டு மக்களின் பார்வையிலிருந்து தெள்ளத் தெளிவாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

இந்திய சமூகத்தில் கவிதை, கட்டுக்கதை, பாடல் என சுய வளர்ச்சிக்காக எழுதியவர்கள் எல்லாம் மிகப் பெரிய சாதனையாளர்களாக, சரித்திர நாயகர்களாக, இந்திய தேசியத்தின் அடையாள புருஷர்களாக வரலாற்று ஆசிரியர்களால் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த ஒருவர், சமூக மாற்றத்திற்காக எத்தகைய பணியினை மேற்கொண்டிருந்தாலும் அவரைப் புறக்கணித்து, வரலாற்றின் பக்கங்களிலிருந்து அவர்களைப் புறந்தள்ளுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். தமிழக வரலாற்றில் மறைக்கப்பட்ட அந்த மாபெரும் தலைவரின் அப்பழுக்கற்ற வாழ்க்கையையும், அவருடைய மகத்தான செயல்பாடுகளையும் தோண்டித்துருவி ஆராய்ந்து, அவற்றை மிகச்சரியான மொழி ஆளுமையுடன் நூலாக வெளிக்கொணர்ந்திருக்கிறார் ஆசிரியர் ஏபி. வள்ளிநாயகம்.

'நான் ஓர் இந்துவாகப் பிறந்து விட்டேன்; ஆனால், நான் ஓர் இந்துவாக சாகமாட்டேன்' என்று அறைகூவல் விடுத்து, பவுத்தம் தழுவிய புரட்சியாளர் அம்பேத்கரைப் போல, மகராசன் இந்துவாகப் பிறந்துவிட்ட போதும், சிவபெருமானை தரிசிக்க குமரியிலிருந்து சிதம்பரம் நோக்கி நடைப்பயணம் மேற்கொண்ட மகராசன், நந்தன் எரித்துக் கொல்லப்பட்ட சூழ்ச்சியை உணர்ந்த பிறகு, தஞ்சையில் அப்போது போதகராயிருந்த ஜே.சி. கோலப் கொடுத்த 'மெய்ஞானம்' நூல் வழியே மன மாற்றம் பெற்றார். புதிய வாழ்க்கையின் திறவுகோலாக, சாதிய ஒடுக்கு முறைகளைச்சுட்டெரிக்கும் நெருப்பாக, சீர்திருத்தக் கிறித்துவத்தைக் கேடயமாகப் பெற்ற மகராசன், மிகப் பெரிய சமூகப் புரட்சியை திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தனியொரு மனிதராய் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

இத்தகைய வரலாற்றுப் பதிவுகள், இன்றைய தலித் இளைஞர்களுக்கும், இயக்கச்செயல் வீரர்களுக்கும் ஒருவித துணிச்சலையும், தலைநிமிர்வையும் கொடுக்கும் என்பதில் அய்யமில்லை.

மகராசனின் வாழ்க்கை வரலாற்றை மட்டும் சொல்லாமல், தமிழகத்தில் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் வெவ்வேறு பகுதிகளில், பல்வேறு மன்னர்களால் நடத்தப்பட்ட கொடுங்கோல் ஆட்சிமுறைகளையும் நம் கண் முன்னே பசுமையான நினைவாதாரங்களோடு விரித்துக் காட்டுகிறார் நூலாசிரியர். மகராசனின் போராட்ட வாழ்க்கையையும், அவருக்கு முன்னும் பின்னும் இருந்த சமூகச் சூழலையும் இணைத்து எழுதியது, சிறந்ததொரு அணுகுமுறையாகும்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் சீர்திருத்த கிறித்துவத்தின் தாயும் தந்தையுமான மகராசன், 'கிறித்துவம்' என்ற மதத்தினை சமூகப் புரட்சிக்கான குறியீடாக குறிப்பாக, இந்துத்துவத்தின் எதிர்க்குறியீடாகக் கையாண்டு, தன்னிலிருந்து தன் குடும்பத்திலிருந்து மதமாற்றப் புரட்சியைத் தொடங்கியிருக்கிறார். அது இன்றைய மதமாற்றத் தன்மையிலிருந்து வேறுபட்டது என்பதை, இந்நூலின் மூன்றாவது பகுதி ஆதாரங்களுடன் விளக்குகிறது. உண்மை இவ்வாறிருக்க, மகராசன் வேதமாணிக்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட மத போதகர் ரிங்கல் தொபேதான், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் குறிப்பாக குமரி மாவட்டத்தில் சீர்திருத்த கிறித்துவத்தைப் பரப்பியவர் என்று, அங்குள்ள சாதிக் கிறித்துவர்கள் ஆண்டுக்கொரு முறை விழா கொண்டாடி வருகிறார்கள்.




மகராசன் வேதமாணிக்கத்தின் தலையை வெட்டிய பிறகு, அந்த இடத்தில் ரிங்கல் தொபேயின் தலையைப் பொருத்தி உண்மையான வரலாற்றை மறைத்து வருகிறார்கள் என்பதை ஆசிரியர் பதிவு செய்திருக்கும் விதம் அழுத்தமானது: ''மகராசன் வேதமாணிக்கத்தின் முயற்சியால் உருவான சொத்துகளை ஆளலாம்; ஆனால், வரலாற்றை ஆள முடியாது. ஏனென்றால், மகராசன் வேதமாணிக்கம் தானே தனியாகத் திரண்டெழுந்த மனித வரலாறு. புலே பிறந்த ஆண்டான 1827 இல் மறைந்த மகராசன் வேதமாணிக்கம், புலேவுக்கு முந்திய புரட்சியாளர் வழி காட்ட பொறுப்பேற்றுக் கொண்ட சாக்கிய இன சாம்பவர் புரட்சிக் குலத்தின் வரலாறு. புத்தருக்குப் பிறகு புத்தரின் புரட்சியை கிறித்துவத்தால் அளந்த பவுத்தப் புரட்சியின் தொடர்ச்சியான வரலாறு'' இதுவே இந்நூலின் மய்யக் கருவாகும்.

அய்ரோப்பிய 'மிஷினரிகள்' இந்திய மண்ணில் கிறித்துவத் திருச்சபைகளை வழி நடத்தியபோது தான் - தலித் மக்கள் தங்களுடைய கல்வி, பொருளாதாரத் துறைகளில் காலூன்ற முடிந்தது என்பதையும் இந்நூல் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. இது ஏதோ கிறித்துவர்களுக்கான நூல் என எண்ணி விட வேண்டாம்; சமூக மாற்ற சிந்தனையாளர்கள் அனைவரின் கைகளிலும் தவழ வேண்டிய கேடயம்.

- நூல் : மகாத்மா புலேவுக்கு முன் மகராசன் வேதமாணிக்கம்
- ஆசிரியர் : ஏபி. வள்ளிநாயகம்
- வெளியீடு : தலித் ஆதார மய்யம், அரசரடி, மதுரை - 16, பேசி : 0452 - 2302199
- பக்கம் : 384
- விலை : ரூ.150



படிப்பகம்

www.padippakam.com

சனவரி மற்றும் பிப்ரவரி இதழ்களில் இடம் பெற்ற **தலித் க.சுப்பையா** அவர்களுடைய நேர்காணலின் இறுதிப் பகுதி, இவ்விதழில் இடம் பெறுகிறது

**'உடல் உழைப்பில் இருந்தே இசை பிறக்கிறது'**



**தாங்கள் ஓர் இசைக் கலைஞராக உருவான பின்னணியைச் சொல்லுங்கள்**

தமிழில் எனக்கு மிகவும் பிடித்தமானவை அய்ந்து சொற்கள்: தாய், காதல், சுதந்திரம், விடுதலை, இசை. எல்லோரும் ஏதேனும் ஒரு நிலையில் பாடுகிறோம், பாடலை ரசிக்கிறோம். அடிப்படையில் இசைப்பாடல் ஒரு கூட்டு முயற்சியாகும். இதில் தனிநபர் பம்மாத்துக்கு இடமில்லை. இசையறிவு தலித்துகளின் பிறப்புரிமை என்பதுபோன்ற தவறான ஒரு கருத்து பரப்பப்பட்டு வருகிறது. இசையை பிறப்புதான் தீர்மானிக்கிறது எனும் சிந்தனை, இயற்பியலுக்கெதிரானபொய்யாகும். உடல் உழைப்பிலிருந்தே இசை பிறப்பதாக நான் நம்புகிறேன். தலித்துகளில் மேட்டுக்குடியினராக வாழும் பலர் பறை குறித்து நிறைய பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். கருத்தரங்குகள், கலை விழாக்களில் பறை குறித்து விமர்சனம் பேசும் இந்த 'நாகரிக' மனிதர்கள், தங்கள் வீடுகளுக்குள் பறைச்சத்தத்தை அனுமதிப்பதில்லை. தங்கள் வீடுகளின் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் பறைச் சத்தம் இசைத்தால் இவர்கள் பதட்டமடைகிறார்கள். அண்டை வீட்டார், பறைச்சத்தத்தை வைத்தே தங்கள் சாதியை அடையாளம் கண்டுகொள்வார்களோ என்கிற அச்சம்தான் காரணம். பறைச் சத்தத்தின்அதிர்வுகளைக் கேட்டு வளர்ந்தவன் நான்; கள்ளர்களின் சாவு வீடுகளில் உடம்பில் சட்டையில்லாமல் மணிக்கணக்கில் வெய்யிலில் நின்று, எங்கள் சேரி மனிதர்கள் பறையடிப்பதை அருகில் நின்று பார்த்தவன். கள்ளர்கள் பறையடிக்கக் கூப்பிடும் விதமும், பறையடிப்பவர்களை, அவர்கள் நடத்தும் விதமும் பறையடிப்பது இழிவான தொழில் என்கிற எண்ணம், எனக்குள் ஆழமாகப் பதிந்து கிடந்தது. தமிழ் மக்கள் இசைவிழா, தலித் கலை விழாக்கள், பறை குறித்த ஆய்வுகள் போன்றவை பறை குறித்த உயர்வான மதிப்பீடுகளை எனக்குள் தோற்றுவித்தன.

**ஆரம்பப் பள்ளியில் பாடியது**

ஆரம்பப் பள்ளியில் என்னைப் பாட வைத்தவர் ரெஜினா 'டீச்சர்'. ஒவ்வொரு நாளும் பள்ளி தொடங்குவதற்கு முன்பு என்னைக் கடவுள் வாழ்த்துப் பாடச் சொல்வார். அச்சமயத்தில் வெளியிடப்படும் திரைப்படங்களில் இடம் பெறும் சாமி பாடலைத்தான் கடவுள் வாழ்த்தாகப் பாடுவேன். பாட்டில் சொல்லப்படும் கருத்துகள் எனக்கு விளங்காது. பாடலின் மெட்டுதான் எனக்கு முக்கியமானதாகத் தோன்றும். காலைநேர வெயிலில் 50 க்கும் குறைவான மாணவர்கள் முன் நின்று பாடத் தொடங்கி முடிக்கிற போது, உடம்பெல்லாம் வியர்த்துவிடும். அப்போதெல்லாம் பள்ளிகளுக்கு மின் வசதி கிடையாது; தெருவிளக்கு கிடையாது. மண் சுவரும் மேற்கூரையும், மூங்கில் சட்டத்தால் அமைக்கப்பட்ட சன்னல்களும்தான் அக்காலப் பள்ளிகளுக்கான அடையாளம். ரெஜினா 'டீச்சர்' மதிய உணவு இடைவேளையில் என்னை அழைத்து, திரைப்படப் பாடல்களைப் பாடச் சொல்லி மகிழ்வார். மணமாகாத அவர், எங்களை தான் பெற்றெடுத்த பிள்ளைகளைப் போன்று பாசத்துடன் நடத்தினார். பாலியல் வன்முறைக்கு அவர் ஆளானபோது நாங்கள் கதறியழுதோம்.

**நடுநிலைப் பள்ளியில் பாடியது**

நடுநிலைப் பள்ளியில் நான் படித்த மூன்று ஆண்டுகளிலும் எனக்கு தமிழாசிரியராயிருந்த பச்சையம்மாள் 'டீச்சர்' தான் நான் பாடுவதற்கு ஊக்கமளித்தவர். அவருடைய வகுப்பில் வாரத்தில் இரண்டு நாட்கள் என்னைப் பாட வைத்து விடுவார்.

ஜவ்வாது மேடையிட்டு
சர்க்கரையில் பொங்கலிட்டு
செவ்வாழை இதழ் விரித்து வா வா வா
செம்மாதுளை பிழிந்து தா தா தா -

எனும் பாடலை பச்சையம்மாள் விரும்பி என்னைப் பாடச் சொல்வார். அப்பாடலின் இடையில் எக்காளமிட்டு ஒரு தனிச்சிரிப்பு வரும். அவற்றை அதே தொனியில் நான் பாடும்போது, பச்சையம்மாள் டீச்சர் குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பார். அப்போது மேலூரில் இயங்கிவந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள், பயிற்சி அடிப்படையில் எங்களுக்கு வகுப்பு நடத்த வருவார்கள். அவர்களிடம் நன்றாகப் பாடுகிற மாணவன் என்று என்னை பச்சையம்மாள் அறிமுகம் செய்து வைத்தார். பயிற்சி மாணவர்கள் தங்கள் அறைகளுக்கு என்னை வரச் சொல்லி, பாடக்கேட்டு மகிழ்ந்தார்கள்.

தினந்தோறும் சக மாணவர்களுடன் பள்ளிக்குச் செல்லும்போது, அக்கிரகாரத்தையொட்டி அமைந்துள்ள அரசினர் மாணவியர் விடுதி ஒன்றைக் கடந்து செல்வோம். சில சமயங்களில் அந்த விடுதி சன்னல்



படிப்பகம்

www.padippakam.com

ஓரமாக நின்று ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவோம். நாங்கள் அப்பாடலைப் பாடுவதற்கு ஒரு காரணம் இருந்தது. அவ்விடுதிப் பெண்கள் நிற்கும்போதும், நடக்கும் போதும், படிக்கும்போதும் விரல் இடுக்குகள், தொடை ஆகிய பகுதிகளைச் சொறிந்து கொண்டேயிருப்பார்கள். சொறி சிரங்கினால் பாதிக்கப்பட்ட அவர்களில் பலர் என் வகுப்பு மாணவிகளாக இருந்தனர். நாங்கள் பாடிய அப்பாடல் 'காதலிக்க நேரமில்லை' திரைப் படத்தில் இடம் பெற்றுள்ள 'உங்கள் பொன்னான கைகள் புண்ணாகலாமா உதவிக்கு வரலாமா' எனப் பாடலின் மெட்டில் எழுதப்பட்ட - 'உங்கப் பொன்னான கைகள் புண்ணாகிப் போனா, லைப்பாய் சோப்பைப் போடுங்க' எனும் பாடலாகும். நாங்கள் பாடும்போது விடுதி மாணவிகள் விறகுக் கட்டைகளைத் தூக்கிக் கொண்டு, எங்களைத் துரத்துவார்கள். என் சக மாணவிகள், வகுப்பாசிரியர் பச்சையம்மாளிடம் புகார் செய்த நிலையில், அவரின் கடுமையான எச்சரிக்கையால் நாளடைவில் அப்பாடலையே நாங்கள் மறந்துவிட்டோம்.

என் சக மாணவிகளில் ஒருவர் கஸ்தூரி, செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். வாரத்தில் இரண்டு நாட்களாவது பட்டுச் சட்டை பாவாடையில் காட்சியளிப்பார். மாணவிகளில் கஸ்தூரி மிகவும் அழகாக இருப்பார். மதிய உணவு இடைவேளையில் என்னைப் பாடச் சொல்வார். நான் மறுக்கும் போது, என் கைகளில் மிட்டாய்களைத் திணித்துப் பாடும்படி கெஞ்சுவார். நான் கணக்குப் பாடத்தில் பலவீனமாக இருந்தேன். நான் பாடாவிட்டால் கணக்குச் சொல்லித்தர மாட்டேன் என்று கஸ்தூரி என்னை மிரட்டுவார். கஸ்தூரி எனக்கு கணக்குச் சொல்லித் தர வேண்டும்; நான் கஸ்தூரிக்குப் பாட்டுப் பாட வேண்டும். அப்பள்ளியில் படித்த மூன்று ஆண்டுகளிலும் பணம் வாங்காமல் எனக்கு கணக்குச் சொல்லிக் கொடுத்த டியூஷன் ஆசிரியர் கஸ்தூரி. இது மட்டுமல்ல தனது வீட்டிலிருந்து அடை, முறுக்கு, சீடை போன்ற தின்பண்டங்களை எனக்கும் சக மாணவர்களுக்கும் கஸ்தூரி கொண்டு வந்து தருவார். அடை, முறுக்கு, சீடை போன்றவற்றை எனக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கஸ்தூரிதான். கெட்டுப் போகாத அன்றைய கல்வி நிறுவனச் சூழலில், இன்றைய ஈவ்டிசிங் போன்ற வக்கிரங்கள் எதுவும் கிடையாது. இதற்குக் காரணம் இன்றைய ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். தற்பொழுது தங்கள் மகள் வயதையொத்த தங்களிடம் படிக்கும் மாணவிகளையே கள்ளத்தனமாக உறவுக்கழைப்பது, மனைவியாக்கிக் கொள்வதுபோன்ற பொறுக்கித்தனமான செயல்கள், பள்ளி தொடங்கி பல்கலைக் கழகங்கள் வரை நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

**உயர்நிலைப் பள்ளியில் பாடியது**

மேலூர் உயர்நிலைப் பள்ளியில், ஆண்டுதோறும் பள்ளி ஆண்டு விழாவின் போது, பாடல் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றிருக்கிறேன். கணித ஆசிரியர்கள் கன்னியப்பன் - அரசன், சரித்திர ஆசிரியர் சண்முகம், தமிழாசிரியர் சஞ்சீவி ஆகியோர் நான் பாடுவதைப் பாராட்டி என்னை உற்சாகப் படுத்துவார்கள். நான் பாடிய பல்வேறு பாடல்களில் 'முத்தைத்திரு பத்தித்திருநகை' எனும் பாடல்தான் பள்ளியின் மொத்த மாணவர்களுக்கும் என்னை அடையாளம் காட்டியது. மனப்பாடம் செய்வதற்கும், நினைவில் நிறுத்தி ராகம் தவறாமல் பாடுவதற்கும் சிரமமான பாடல் அது. காலையில் பள்ளி தொடங்கும் முன்பு 2000க்கும் அதிகமான மாணவர்கள் முன்பு நின்று இறைவணக்கப் பாடலாக இப்பாடலைப் பாடியிருக்கிறேன். பாடல் வரிகள் மறந்துபோகும் என்கிற பயத்தின் காரணமாக இப்பாடலைப் பாடும்போது, கண்களை மூடிக் கொள்வேன். இப்பாடலைச் சிறப்பாகப் பாடியதற்காக பள்ளி ஆண்டு விழா போட்டியில் பத்தாம் வகுப்பு படிக்கும் போது எனக்கு முதல் பரிசு கிடைத்தது.



விடுதலைக் குரல் கலைக் குழுவினர் : சீனிவாசன், தலித் க. சுப்பையா, து. முருகையன், திருவேங்கடம், ராசாத்தி, அய்யம்மாள், அய்யாச்சாமி, திருஞானம்

நான் பாடிய பாடல்களை என்னுடன் படித்து ரசித்த ஒரு நண்பனை, இங்கு அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். அந்த இனிய நண்பன் வேறு யாருமல்ல, தமிழ்த் திரையுலகில் பிரபலமான நடிகர் ராமராஜன்தான். பள்ளியில் இவரது பெயர் குமரேசன். நானும் குமரேசனும் ஒரே வகுப்பில், ஒரே பெஞ்சில் அக்கம் பக்கமாக அமர்ந்து மூன்று ஆண்டுகள் படித்தவர்கள். மேலூரைச் சேர்ந்தவரும், புதுச்சேரியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்து வருபவருமான என் நண்பன் கண்ணன், குமரேசன் மற்றும் நான் ஆகிய மூவரும் இணைபிரியாக் கூட்டாளிகள். 'பாட்டுப்பாடு' இல்லாவிட்டால் உன் மதியச் சோறைச் சாப்பிட்டு விடுவேன் என குமரேசன் என்னை மிரட்டுவான். நான் பாடாவிட்டால் என் சாப்பாட்டுப் பாத்திரம் காலியாகிவிடும். எளிய குடும்பத்தில் பிறந்த குமரேசனால் கண்ணன் மற்றும் என்னைப் போன்று கல்லூரிப் படிப்பைத் தொடர முடியவில்லை. சிவப்பு நிறம், மெலிந்த உடல், சுருள் முடியுடைய குமரேசனை மேலூர் கணேஷ் தியேட்டர் முன்பிருந்த அவனது வீட்டிலிருந்து உயர்நிலைப் பள்ளிவரை, எனது சைக்கிளில்தான் ஏற்றிச் செல்வேன். என்னுடன் பள்ளியில் படித்த சக மாணவர்களில் பலர் பிற்காலத்தில் என்னைச் சந்தித்த வேளைகளில் 'முத்தைத் திரு பத்தித்திருநகை' பாடலை நினைவுபடுத்தித்தான் என்னை அடையாளம் கண்டார்கள்.

**பூக்குளித் திருவிழாவில் பாடியது**

எங்கள் கிராமத்தில் தலித் அல்லாதவர்களால் நடத்தப்படுவது, முருகன் கோயில் திருவிழாவாகும். இவ்விழா நடைபெறுவதற்கு எட்டு நாட்களுக்கு முன்பாகவே கோயில் முன்பு கொட்டகை போடப்படும். கொட்டகை போட்ட நாள் தொடங்கி விழா நடைபெறும் முதல் நாள் வரை, கள்ளர்கள், யாதவர்கள் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட சாதியினர் கோயில் முன்பாக இரவில் கூடுவார்கள். அப்போது எங்கள் கிராமத்திற்கு மின்சாரம் அறிமுகமாகவில்லை. கொட்டகையில் பெட்ரோமாக்ஸ் விளக்கு எரியும்.



படிப்பகம்

www.padippakam.com

அவ்விளக்கு வெளிச்சத்தில் கள்ளர்சாதிப் பெரியவர்கள் அமர்ந்து விழாப் பறைகள் குறித்து விவாதிப்பார்கள். இவர்கள் மட்டுமல்ல, பூக்குளி இறங்க காப்புக் கட்டியவர்கள் மற்றும் இளைஞர் பட்டாளமே கொட்டகையில் அமர்ந்திருப்பார்கள். அப்போது பெரியவர்கள் வேடிக்கை பார்க்கச் சென்ற என்னை அழைத்து, அவர்கள் மத்தியில் உட்காரச் சொல்லி பாட்டுப் பாடச் சொல்வார்கள். என் பாட்டை ரசிக்கும் பெரியவர்கள், மிட்டாய் வாங்கித் தின்னுடா என்று சொல்லி எனக்கு காசு தருவார்கள். நான் அவற்றை வாங்க மறுக்கும் போது 'பய படிக்கிறான்ல, அதுதான் காசு வாங்க கூச்சப்படுறா(ன்)' என்று சிலர் கிண்டலடிப்பார்கள். நான் கை நீட்டிக் காசு வாங்க மாட்டேன். அவர்களில் ஒருவர் எழுந்து காசு தருபவர்களிடம் சென்று காசுகளைப் பெற்று, மொத்தமாக என் சட்டைப் பையில் திணிப்பார். கிராம மக்கள் மத்தியில் பணத்தாள் புழக்கம் இல்லாத அக்காலத்தில், என் பையில் போடப்பட்ட அனைத்தும் சில்லறைக் காசுகளாகவே இருக்கும்.

இப்படிக் காசு வாங்கியதற்காக என் பெரியம்மா என்னைக் கடுமையான வார்த்தைகளால் திட்டியிருக்கிறார். கள்ளர்களின் பேச்சுக்கு மறுப்புச் சொல்ல முடியாத அன்றைய சமூகச் சூழலில் வாழ்ந்த என் தந்தை, பெரியவர்கள் விரும்பித் தருவதை வாங்கிக் கொள், இல்லாவிட்டால் வருத்தப்படுவார்கள் என்று எனக்கு அறிவுரை கூறுவார். வருத்தம் என்பதற்கு, கள்ளர்கள் மொழியில் கோபம் என்று பொருள்படும். இக்கோபம் பஞ்சாயத்தாக மாறும்போது கும்பிட வைப்பது, அபராதம் போடுவது போன்ற தண்டனையாக நடைமுறைப்படுத்தப்படும். வானொலிப் பெட்டி அறிமுகமாகாத எங்கள் கிராமத்திற்கு, நான்தான் கிராமப் பெரியவர்களுக்கு வானொலிப் பெட்டியாக இருந்தேன் என்பதை நினைக்கும் போது, எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

**கல்லூரியில் பாடியது**

கல்லூரிப் படிப்பில் எனக்குத் தமிழார்வத்தை உருவாக்கியது, மதுரை தியாகராசர் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாவலர்கள் இன்குலாப், நா. காமராசன், எழுத்தாளர் சூரியதீபன் ஆகியோர் தியாகராசர் கல்லூரி மாணவர்கள். பேரா. சுப. அண்ணாமலை எனக்கு தமிழாசிரியர். புகழ்பெற்ற பொருளாதார மேதை கீன்ஸ் அவர்களின் மாணவரான திரு. பாஸ்கரன் எனக்கு ஆசிரியராக இருந்தார். ஆண்டுதோறும் நடைபெறும் கல்லூரி ஆண்டு விழாவின் பாடல் போட்டியில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்று வந்தேன். இளங்கலை இரண்டாமாண்டு நான் பாடல் போட்டியில் பங்கேற்ற போது, செருப்பணிந்தபடியே மேடையில் அமர்ந்து பக்திப் பாடல் ஒன்றைப் பாடினேன். நான் பாடலை முடித்தபோது, பலத்த கைதட்டல் அரங்கை அதிர வைத்தது. ஆனால், பேராசிரியர் அண்ணாமலை என்னை நோக்கி செருப்பணிந்து கொண்டு, பக்திப் பாடலைப் பாடுகிறாயே! பாடலின் பொருளுணர்ந்து பாடினாயா அல்லது பரிசு வாங்கப் பாடினாயா என்று கோபமாகத் திட்டினார். நான் மறுப்பேதும் பேசவில்லை. மேலும், அவர் பேசியதைப் பெரிதாகவும் நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில்,



> வானொலிப் பெட்டி அறிமுகமாகாத எங்கள் கிராமத்திற்கு, நான்தான் கிராமப் பெரியவர்களுக்கு வானொலிப் பெட்டியாக இருந்தேன் என்பதை நினைக்கும்போது, எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.

சிறுவயதிலிருந்தே கடவுள், பக்தி, வழிபாடு போன்றவற்றில் பொருள் விளங்காத நிலையில்தான் அது தொடர்பான பாடல்களைப் பாடி வந்திருக்கிறேன். பாடல் போட்டியில் கிடைத்த பரிசுப் பொருட்களில் திருக்குறள், சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, கலித் தொகை போன்ற தமிழ் இலக்கிய நூல்களை எனது பொருளாதாரப் பேராசிரியர் நந்தகோபாலிடம் கொடுத்துவிடுவேன். பாத்திரங்கள் மற்றும் பிற உபயோகப் பொருட்களை வீட்டிற்கு எடுத்துச் செல்வேன்.

தியாகராசர் கல்லூரியில் நான் படித்த காலங்களில் மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, யாதவர் கல்லூரி, மதுரைக் கல்லூரி அமெரிக்கன் கல்லூரி ஆகிய இடங்களுக்கு பாடல் போட்டியில் எனக்கு அறிமுகமானவர், மீனாட்சி மகளிர் கல்லூரி தமிழ்த் துறை மாணவி திலகா. கம்பம் பகுதியைச் சேர்ந்த இவர் இனிமையான குரலுக்குச் சொந்தக்காரர். பாடும்போது முதிர்ச்சியான ஒரு கலைஞரைப் போல தன்னையே மறந்து பாடுவார். பாடல் முறை குறித்து எனக்கு நிறையச் சொல்லிக் கொடுத்தார். கேள்வி ஞானம் எனும் சொல்லையும், அதற்குரிய அர்த்தத்தையும் திலகாதான் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

இன்னும் நிறையச் சொல்லலாம். இரவு நேரங்களில் அப்பா வயலில் தண்ணீர் பாய்ச்சும் போது, நான் சாப்பாடு கொண்டு போவேன். அப்போது இருள் பயத்தைப் போக்கப் பாடுவேன். ஏர் ஓட்டும் சமயத்தில் சகதியில் மிதித்து, பல மணிநேரம் நடக்கும் போது கால் வலிக்கும். வலியை மறக்கப் பாடுவேன். அறுவடைக் காலங்களில் களத்தில் நெல்லைக் குமுடு போட்டுக் காவல் காக்கும் போது, இரவு நேரத்தில் மகிழ்ச்சியாகப் பாடவரும். வெளியூர் கண்மாய்களுக்கு மீன்பிடிக்க நடுஜாமத்தில் புறப்படுவோம். கண்மாய் போய்ச்சேரும் வரை, உடன் வருபவர்கள் என்னைப் பாடச் சொல்வார்கள். என் அத்தை மகள் குலமங்களம் பெத்தி, மாமன் மகன்கள் சூரக்குண்டு சுந்தரம், சித்தலூர் சமையன் ஆகியோர், எங்கள் குடும்ப விழாக்களின் போது என்னைப் பாடச் சொல்லி ரசிப்பார்கள். வேலைவாய்ப்பிற்காகத் தொண்டு நிறுவனம் ஒன்றில் நான் பணியாற்றிய போது, என்னுடைய களப் பணியில் பாடுவதும் ஒரு பணியாக அமைந்தது. அந்த நிறுவனத்தின் பணிகள், தமிழகத்தின் பெரும்பான்மை மாவட்டங்களில் நடைபெற்று வந்த நிலையில், மாநிலத்தில் பரவலாகச் சென்று பாடுவதற்கான வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இத்தகைய அடித்தளத்தைக் கொண்டுதான் பாடல் எழுதத் தொடங்கினேன். நான் எழுதிய முதல் தலித் விடுதலைப் பாடல், 'இந்துமதச் சிறையினிலே' என்கிற பாடலாகும். நான் எழுதிய முதல் சமுதாய விழிப்புணர்வுப் பாடல் 'சமுதாயம் மாறுகின்ற காலம் நெருங்குது' எனும் பாடலாகும். 120 க்கும் கூடுதலான பாடல்களை இதுவரை எழுதியுள்ளேன். இது குறித்த வரலாற்றைச் சுருக்கமாக சொல்ல இயலாது என்கிற நிலையில், பாடல் எழுதத் தொடங்கிய வரலாற்றைப் பிரிதொரு நேரத்தில் சொல்கிறேன். ●

நேர்காணல் : அன்பு செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞருக்கு நன்றி!

அருந்ததியர் மக்களின் வாழ்வுரிமைப் போராட்டமாகவும், மனித உரிமைப் பிரச்சினையாகவும் இருக்கும் - மனிதர் கழிவை மனிதர் கையால் அகற்றும் கொடுமையான தொழிலைத் தடை செய்து, அந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் அடிப்படையில், மாற்றுப் பணிகள் வழங்க வேண்டும் என்ற தலையாய உரிமைப் போராட்டத்தை ஏற்று, கடந்த காலங்களில் 'ஆதித்தமிழர் பேரவை' போராடி வந்தது.

இதற்காக 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று, கோவையில் தூய்மைத் தொழிலாளர் மறுவாழ்வு மாநாடு நடத்தியும், 2005 ஆம் ஆண்டு நவம்பர் 28 அன்று நாடு தழுவிய அளவில் ரயில் மறியல் போராட்டம் நடத்தியும், எதிர்வரும் 2006 சூன் மாதம், தமிழகத்தில் 6 மாநகராட்சிகளில் முற்றுகைப் போராட்டம் நடத்தவும் - ஜனநாயக அடிப்படையில் மாநாடு, போராட்டம் நடத்தியும், நடத்தவும் பேரவை செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், எதிர்வரும் 13 ஆவது தமிழக சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி, தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தரும் நிலைப்பாட்டை, பேரவை செயற்குழு எடுத்தது. இதனைக் கடந்த 14.3.2006 அன்று, அறிவாலயத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களை பேரவை நிறுவனத் தலைவர், பொதுச் செயலாளர் உட்படப் பேரவை பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, தி.மு.க. ஆதரவு நிலைப்பாட்டைத் தெரிவித்ததுடன் - மனிதர் கழிவை மனிதர் கையால் அகற்றும் சமூகக் கொடுமையான தொழிலைத் தடை செய்து, அவர்களுக்கு மாற்றுப் பணி வழங்க வேண்டுகோள் விடுத்தனர்.

அதனை உடனே கலைஞர் ஏற்றுக் கொண்டு ஆவன செய்வதாக உறுதியளித்தார். அதன்படி, தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் பக்கம் 64 இல், சமூக சீர்திருத்த சட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் 'மனிதர் கழிவை மனிதர் கையால் அகற்றும் கொடுமையை நீக்கி, அவர்களுக்குத் தகுதியான வேறு பணிகள் வழங்குவதாக' உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆதித்தமிழர் பேரவையின் இக்கோரிக்கையை ஏற்று, தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்களுக்கு, பேரவை தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# ஆதித்தமிழர் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயக இருள் - 5

# மறுக்கப்பட்ட அதிகாரம்

■ யாக்கன்

அய்க்கிய நாடுகள் அவை வளர்ச்சித் திட்டத்தின் 2003 ஆம் ஆண்டிற்கான உலக மனித மேம்பாட்டு ஆண்டறிக்கையின் முகப்பு பின்வருமாறு பேசுகிறது : ''விதவிதமான அரசியல் சட்டங்களும், தேர்தல் ஏற்பாடுகள் அல்லது சிறப்பான தேர்தல் நடைமுறைகள் ஆகியவற்றால் மட்டுமே, ஜனநாயகத்தை வளர்த்தெடுக்க முடியாது. ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கைமுறை. இன, மொழி, சமய, பண்பாட்டுக் கூறுகளால் பிளவுண்டு வாழும் குடிமைச் சமூகங்களை மறு ஒருங்கிணைப்புச் செய்வதற்கு, மிக நீண்டகாலமாக மேற்கொள்ளப்படும் செயல்முறை அது. உலகில் பல்வேறு நாடுகளில் ஜனநாயகம் நடப்பதாகக் கூறப்படுகிறது. அவற்றில் பெரும்பாலான நாடுகளில், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வழிமுறையாக ஜனநாயகம் கையாளப்படுவது, மிகவும் வேதனைக்குரியது. அரசியல் அதிகாரத்திற்காகப் போராடும் மக்கள் - குடிநீர், உணவு, கல்வி, நிலம், வேலைவாய்ப்பு போன்ற அடிப்படை சமூக உரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்கள். அந்த நாடுகளில் எல்லாம், ஜனநாயகம் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.''

உண்மைதான். இந்திய ஜனநாயகத்திற்கு மேற்கண்ட வரிகள் முற்றிலும் பொருந்தி நிற்கின்றன. இந்தியச் சமூகத்தில் நிலவும் சாதி, மத, பொருளாதாரப் பிளவுகளிலிருந்து மக்களை மீட்டு ஒருங்கிணைக்க, இந்திய அரசிடம் எவ்விதச் செயல் திட்டமும் இல்லை. அப்படியொரு பார்வையே ஆட்சியாளர்களிடம் இல்லை. எனவே, சரி செய்ய இயலாத பெரும் சமூகப் பதற்றத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது. சமூக அறிஞர் டாக்டர் கே.ஆர். நாராயணன் சொன்னதைப் போல, நாட்டில் ஒரு எதிர்ப்புரட்சி நடந்து கொண்டிருக்கிறது.

> ❝ பன்னெடுங்காலமாக பகைமுரண் கொண்ட மக்களிடையே நிலவும் அரசியல் அதிகார வேட்கையைக் குறைப்பதன் மூலமே, பதற்றமில்லாத ஜனநாயகச் சூழலை இந்தியாவில் உருவாக்க முடியும். ❞

ஆயினும், அடிப்படைத் தேவைகளுக்காகப் போராடும் இந்திய மக்கள், தேர்தல் நடைமுறைகளை பெரும் ஆர்வத்தோடு கவனிப்பதும், அதில் பங்கேற்கத் துடிப்பதும் ஆச்சரியமூட்டுபவையாக இருக்கின்றன. அரசியல் அதிகாரத்திற்கான வேட்கையே அவ்வாறு வெளிப்பட்டு வருகிறது. எனவே, தங்களின் அடிப்படைத் தேவைகளுக்காக, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியாக வேண்டிய பரிதாப நிலையிலிருக்கிறார்கள் மக்கள். இழந்த உரிமைகளுக்காக, அடிப்படைத் தேவைகளுக்காக, வசதி வாய்ப்புகளைக் காப்பாற்றுவதற்காக, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, இன்ன பிற காரணங்களுக்காக, கிட்டத்தட்ட எல்லா இந்திய மக்களுக்கும் - அரசியல் அதிகாரம் தேவையாக இருக்கிறது. அந்தத் தேவையே மக்களை மேலும் மேலும் பிளவுபடுத்துவதாகவும் இருக்கிறது.

எனவே, மிக முற்றிய ஆழமான பிளவுகளில் நிலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வர்க்கங்கள், அதிகாரத்தை நோக்கியப் போட்டியில் இறங்குகின்றன. ஜனநாயகம் என்ற பெயரில் இந்தியாவில் ஒரு 'உள்நாட்டுப் போர்' நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்திய அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற, புதிய புதிய அரசியல் கட்சிகள் முளைத்த வண்ணமிருக்கின்றன. ஏராளமான தலைவர்கள் உருவாகிக் கொண்டேயிருக்கிறார்கள். அதற்குக் காரணமும், நோக்கமும் எதுவெனில், நாடாளுமன்றம் முதல் சட்டமன்றம், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி வரையிலும் விசிறியடிக்கப்பட்டிருக்கும் பல்லடுக்குப் படிநிலை அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான்.

இந்தப் படிநிலை அதிகாரக் கட்டமைப்புகள்தான், இந்திய ஜனநாயகத்தின் 'அரசியல் பன்முகம்' என்று புகழப்பட்டு வருகிறது. தனிச்சொத்துரிமையை வலியுறுத்தும் ஏகபோக முதலாளித்துவ ஜனநாயக அமைப்பில்தான், இந்த 'அரசியல் பன்முகம்' மிக முக்கியத்துவம் பெற்றதாகி விடுகிறது. 'பெயரளவில் அதிகாரம்' கொண்டவைகளாக இருப்பினும், அதிகாரங்களுக்காக அலைந்து திரிந்து கொண்டிருக்கும் பகைகொண்ட வகுப்புகளுக்குத் தீனியிட, இந்த 'அரசியல் பன்முகம்' உதவுகிறது. ஆனால் உண்மையில், உச்சபட்ச அதிகாரத்திற்கானப் போர் எந்நாளும் நடந்து கொண்டேயிருக்கும்.




படிப்பகம்

www.padippakam.com

பன்னெடுங்காலமாக பகைமுரண் கொண்ட மக்களிடையே நிலவும் அரசியல் அதிகார வேட்கையைக் குறைப்பதன் மூலமே, பதற்றமில்லாத ஜனநாயகச் சூழலை இந்தியாவில் உருவாக்க முடியும். அதற்கு, மக்கள் அதிகாரமுடையவர்களாக மாற்றப்பட வேண்டும். தேர்தல் காலங்களில், ஜனநாயகத்தில் மக்களுக்குதான் முழு அதிகாரம் உள்ளதைப் போன்று அரசியல் கட்சிகள் பிரச்சாரம் செய்து வருகின்றன. வாக்குரிமை வைத்திருப்பதையே 'முழு அதிகாரம்' என்று சித்தரித்து மக்களை ஏய்த்துப் பிழைத்து வருகின்றன. அதிகாரமற்றவர்களாக தாங்கள் வைக்கப்பட்டிருப்பதை, இந்திய மக்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அதுவே இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரும் சோகம்.

ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் அதிகாரமற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளதைப்போல, பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பில், மக்களும் அதிகாரமற்றவர்களாக உள்ளனர். தாங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரநிதிகளிடம் கூட, அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. எனவேதான், தேர்தலுக்குப் பிறகு, தாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதியிடமே அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் கெஞ்சுகிறார்கள். இதை மிகப் பெரும் ஜனநாயகக் கொடுமை என்று கூற முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தவர்களிடமே கொள்ளையடிக்கிறார்கள்; கொழுத்துப் பெருகுகிறார்கள். பிரதிநிதிகளால் ஏமாற்றப்பட்டும் மீண்டும் ஏதேனும் ஒரு ஊழல்வாதியையே மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள்.

**“ பிளவுண்டு நிற்கும் மக்களை, அரசியல் தளத்தில் சமமானவர்களாக உருவாக்கியிருக்கும் இந்திய ஜனநாயகம், சமமான 'அரசியல் வாய்ப்புகளை' உறுதி செய்யவில்லை. வாய்ப்புகளை உருவாக்கித் தராத அரசியல் சமத்துவம் போலியானது. ”**



மக்களை அதிகாரமற்றவர்களாக வைத்திருக்கும் 'பிரதிநிதித்துவ ஜனநாயகம்' தான் - சமூகத்தில் மக்களிடையே இயல்பாக காலப்போக்கில் உருவாகும் ஒருங்கிணைப்பைக்கூட தடுத்து நிறுத்துகிறது. எத்தகைய மக்கள் விரோதச் சட்டங்களையும் உருவாக்கிக் கொள்ள ஆட்சியாளர்களுக்கு உதவுகிறது; மக்கள் மீது மிகக் கடுமையான ஒடுக்குமுறைகளை ஏவிவிடுவதற்குத் துணைசெய்கிறது. குற்றவாளிகளும் சமூக விரோதிகளும் ஆட்சி அதிகாரத்தைப் பெற உதவுகிறது. கட்டுப்படுத்த முடியாதபடி நாடெங்கிலும் ஊழலை ஊற்றெடுக்க வைத்திருக்கிறது. சட்டத்தினின்றும், நீதியினின்றும் எவ்விதத் தண்டனையும் இல்லாதபடி தப்பித்துச் செல்ல, பிரதிநிதிகளுக்கு உதவுகிறது. எல்லாவற்றையும் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தவர்களாக மக்களை முடமாக்கி வைத்திருக்கிறது.

இத்தகைய அவலத்திலிருந்து இந்திய ஜனநாயகம் மீள வேண்டுமெனில், மக்கள் அதிகாரமுடையவர்களாக மாற்றப்பட வேண்டும். அதிகாரமுடைய மக்களால் மட்டுமே தங்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அடிப்படைத் தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி வரும் ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள், சிறுபான்மையினர் உள்ளிட்ட பெரும்பாலான ஏழை எளிய மக்களை அதிகாரமயப்படுத்துவதன் மூலமே - அவர்களின் உரிமைகளை உறுதி செய்ய முடியும்.

''அதிகாரமயப்படுத்துவது என்பது, அன்றாடங்காய்ச்சிகளாக வாழும் பெரும்பாலான மக்களுக்குச் சமமான வாய்ப்புகள் சென்றடைவதை உறுதி செய்வதும், அதற்கு உத்திரவாதமளிப்பதும் ஆகும்'' என்கிறார் அறிஞர் கே.ஆர். நாராயணன். உண்மையில் 'சமமான வாய்ப்புகள்' அளிப்பது என்பது, அனைத்துத் தளங்களிலும் மக்களை 'பங்கேற்க வைப்பது' ஆகும். அரசியல் அதிகாரத்திலும் பொருளாதாரக் கட்டுமானங்களிலும், தேசிய கருத்துருவாக்கங்களிலும் ஏழை எளிய மக்களைப் பங்கேற்க வைப்பது என்பதே அவர்களை அதிகார மயப்படுத்துவது ஆகும்.

சமூகத் தளத்தில் பல்வேறு நம்பிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகளால் பிளவுண்டு நிற்கும் மக்களை, அரசியல் தளத்தில் சமமானவர்களாக உருவாக்கியிருக்கும் இந்திய ஜனநாயகம், சமமான 'அரசியல் வாய்ப்புகளை' உறுதி செய்யவில்லை. வாய்ப்புகளை உருவாக்கித் தராத அரசியல் சமத்துவம் போலியானது.

ஒரு தலைப்பட்சமான வளர்ச்சியிலிருந்து நாட்டை மீட்கவும், தேங்கி நிற்கும் நிர்வாகத்தைச் செயலூக்கம் பெறச் செய்யவும் - அதிகாரமயப்படுத்தப்பட்ட மக்களால் மட்டுமே முடியும். அரசைக் கண்காணிக்கவும் அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கவும், ஊழலைத் தடுத்து நிறுத்தவும், வாரிசு மயமாகிவரும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கவும், அதிகாரமுடையவர்களாக மக்கள் மாற வேண்டும். அப்போதுதான், உண்மையான மக்களாட்சி மலரும்.

ஆனால், அறுபதாண்டு கால சுதந்திர இந்தியாவில் மக்களை அதிகாரமயப்படுத்துவதற்கான விவாதமே எழுப்பப்படவில்லை. சமூகத்தையும் நாட்டையும் ஜனநாயகப்படுத்துவதற்கான தேவை அதிகரித்துக் கொண்டே வருகிற போதிலும், ஆட்சியாளர்களும் பெருமுதலாளிகளும், சாதியவாதிகளும் அதற்குப் பெரும் தடைகளை ஏற்படுத்திய வண்ணமிருக்கிறார்கள். பார்ப்பன ஊடகங்களோ, பொது நல அமைப்புகளோகூட, மக்களாட்சியில், மக்கள் அதிகாரமற்றவர்களாக முடக்கப்பட்டிருப்பது குறித்து எந்த விவாதத்தையும் எழுப்பவில்லை.

இந்திய வரலாற்றில் இந்திரா காந்தி கொண்டு வந்த 'அவசர நிலை' அறிவிப்பின்போதுதான் ஜனநாயகம் பற்றிய விரிவான விவாதங்கள் எழுந்தன. அப்போதும்கூட, மக்களுக்காக அவை நடத்தப்படவில்லை. •

– இருள் விரியும்



படிப்பகம்

www.padippakam.com

# ஏப்ரல் 14 அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளில் நம் கடமை



தமிழக அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அம்பேத்கர் படங்களை வைக்க அரசாணை (G.O.Ms. No.2368 Public General I dt. 24.10.1990) உள்ளது. இருப்பினும், தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைவர் அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நலச் செயலர் / இயக்குநர் அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் - இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப் படத்தை வைக்க மறுக்கும் தமிழக அரசைக் கண்டிக்கிறோம்.

**அனைத்து அரசு அலுவலகங்களிலும் அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப் படத்தை வைக்கும்வரை போராடுவோம்!**

இவண்,
டி. கந்தசாமி - ஆசிரியர்; ஜி. சிவப்பிரகாசம் - ஆசிரியர்;
முருகன் - ரயில்வே துறை; சி. அழகரசன் - ஆசிரியர் ,மெனசி;
ஈ. தன்ராஜ் - ஆசிரியர் 'அம்பு' - அம்பேத்கர் அனைத்துலகப்
பணியாளர் சங்கக் கூட்டமைப்பு, தருமபுரி மாவட்டம்

## தலித் பண்பாட்டுக்கூடல்

'துடி' இயக்கம் நடத்தும்

அம்பேத்கர் பிறந்த நாள்
மற்றும் பவுத்த பொன்விழா

**இடம் : அம்பேத்கர் மணிமண்டபம்**
**நாள் : 14.4.2006, காலை 9 மணி முதல்**

- அம்பேத்கர் சிலைக்கு பூமாலைக்கு பதிலாக புத்தகங்களை அளிப்போம். சேமித்த புத்தகங்களால் சேரிகளை அறிவாயுதங்களாக்குவோம்.
- தலித் விடுதலை பண்பாட்டுக் கூறுகள் - ஓவியம்; பங்கேற்பவர்கள் - தமிழ் நாடு ஓவியக் கல்லூரி மாணவர்கள்
- சென்னைப் பறை முழக்கம், உரைவீச்சு, கவியரங்கம், அம்பேத்கர் பற்றிய கேள்வி - பதில் / அரங்கம், புத்தக வெளியீடு, நாடகம் மற்றும் பல

அனைவரும் வருக

தொடர்புக்கு : 92831 41206 / 98420 07009

## ஆழிப்பேரலை பாதிப்பிற்குள்ளான மாணவர்களுக்குப் பள்ளிகள் கட்டுக!

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தென்சென்னை கடலோரப் பகுதி மக்கள், இதுவரை தமிழக அரசு அறிவித்த தற்காலிக வீடுகள்கூட கிடைக்காமல், பல்வேறு ஒடுக்குமுறைகளால் (ஆதிக்க சாதியினர், அரசு அதிகாரிகள், காவல் துறையினர், அரசியல் கட்சி ஊழல் பேர்வழிகள்) வாழ்வுரிமையை இழந்து, அகதிகளாய் வாழ்ந்து வருகின்றனர். வாழ்வியல் உரிமைகளை மீட்க வேண்டும் என்ற அடிப்படையில் - மக்கள் எழுச்சி இயக்கம் சார்பில் - 'ஆழிப் பேரலையின் மறுபக்கம்' என்ற நூல் 22.3.2006 அன்று, மயிலை மேதை அம்பேத்கர் பாலத்தில் வெளியிடப்பட்டது. ப. வேலுமணி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தியாகு, பேரா. கல்யாணி, இறை. பொற்கொடி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




வெளியீடு :
மக்கள் எழுச்சி இயக்கம்,
78, மீனம்பாள்புரம், மேதை
அம்பேத்கர் பாலம்,
மயிலாப்பூர், சென்னை - 4

விலை : ரூ. 20
பக்கங்கள் :80

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் : "ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமிழக அரசு உடனடியாக நிரந்தர வீடு வழங்க வேண்டும். ஆழிப்பேரலை நகர் மக்கள் வசிக்கும் இடங்களில், மாணவர்களின் எதிர்காலம் கருதி பள்ளிகள் அமைக்க வேண்டும். காலம் காலமாக வாழ்ந்த சென்னைப் பகுதியை விட்டு பாதிக்கப்பட்ட மக்களை வெளியேற்றுவதால் வேலையிழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களின் அடிப்படை உரிமையான வேலைவாய்ப்பை வழங்க வேண்டும்."

"வீடு கேட்டுச் சென்ற ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட தென்சென்னை மக்களை (பெரும்பான்மையானோர் தலித் மக்கள்) சாதி, மதத்தின் பெயரால் இழிவுபடுத்திய மயிலை வட்டாட்சியர் வேலாயுதப் பெருமாளையும் மற்றும் துணை அதிகாரி முனுசாமியையும் பணிநீக்கம் செய்து, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்."



படிப்பகம்

www.padippakam.com

# இந்து மனம் - கிறித்துவ மதம்!

■ செங்கதிர்

மதம் மாறினாலும், சாதி இந்துக்களின் மனம் மட்டும் மாறிவிடாது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது தச்சூர். காஞ்சிபுரம் மாவட்டம் தச்சூர் கிராமத்தில் உள்ள தேவாலயத்தில், சாதிவெறி தலைவிரித்தாடுவது இன்றளவும் நின்றபாடில்லை ('தேவாலயத்தில் ஜாதி வெறி' - 'தலித் முரசு' ஜுன் 2005). அங்குள்ள கன்னியர் மடத்து (கான்வென்டு)க்குள்ளும் சாதிவெறித்தனம் அரங்கேறியுள்ளது. அங்கு கல்வி, மருத்துவப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது, புனித அன்னாள் சபையைச் சேர்ந்த மடம். பிப்ரவரி 18 அன்று மடத்துக்குச் சொந்தமான நிலத்தில், தச்சூரின் அருந்ததியர் பகுதியான பாளையத்தைச் சேர்ந்தவரின் ஆடு மேய்ந்திருக்கிறது. அதனால், அதை மடத்தில் கட்டி வைத்துள்ளனர். ஆட்டுக்குச் சொந்தக்காரர் சேரிப் பகுதி பெரியவர்களைக் கூட்டிக் கொண்டு அன்று மாலை, மடத்தின் தலைமை சகோதரியிடம் பேசுவதற்காகச் சென்றுள்ளார்.

அப்போது, மடத்தில் இருந்த காணிக்கைமேரி என்ற கன்னியாஸ்திரி, தலைமை கன்னியாஸ்திரி சாப்பிடுவதால் சிறிது நேரம் காத்திருக்குமாறு கூறியிருக்கிறார். ஊர்க்காரர்கள் நீண்ட நேரம் காத்திருந்துவிட்டு, மீண்டும் கேட்கவும், தலைமை கன்னியாஸ்திரி சாப்பிட்டுவிட்டு தூங்கப் போய்விட்டதாக அதே கன்னியாஸ்திரி கூறியுள்ளார். அதைக் கேட்டவுடன், ஊர்க்காரர்கள் இதை முதலிலேயே சொல்ல வேண்டியதுதானே என்று கோபமாகப் பேசியிருக்கிறார்கள். மக்களை அனுப்பிவிட்டு அவர் திரும்பியபோது, அந்த மடத்திலேயே இருக்கும் ஜெசிந்தா என்ற தலித் கன்னியாஸ்திரியைப் பார்த்து ''உன்னுடைய சாதி என்பதால்தானே எதுவும் பேசாமல் இருக்கிறாய்'' என்று திட்டியுள்ளார். மேலும், 'கையேந்தும் சாதி' என்று தலித் மக்களை இழிவுபடுத்தியுள்ளார். நடந்தது எதுவும் தெரியாத ஜெசிந்தா, சாதியைச் சொல்லி இழிவுபடுத்தியதால் கோபமடைந்து, என்னிடம் ஏன் பேசுகிறாய், மக்களிடம் பேச வேண்டியதுதானே என்று கூறியுள்ளார்.

ஜெசிந்தாவின் பதிலைப் பொறுத்துக் கொள்ள முடியாத காணிக்கை மேரி, ''நீ முதலில் வெளியே போடி'' என்று கூறி, ஜெசிந்தாவைத் தள்ளிக் கொண்டுபோய் வெளியில் விட்டு, கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளே போய்விட்டார். ஜெசிந்தா பலமுறை கதவைத் தட்டிப் பார்த்தும், காணிக்கைமேரியின் சாதிவெறி கதவைத் திறக்கவில்லை. வேறு வழியின்றி, ஜெசிந்தா வெளியிலேயே இருந்திருக்கிறார். ஊர் அடங்கிய அந்த இரவு நேரத்தில், அவரை வெளியில் பார்த்ததும் பதறிப் போய் விவரம் கேட்டுள்ளார், ஊர்ப் பெரியவர் பிலிப். பின்னர், செய்தி அறிந்து தலித் மக்கள் திரண்டுள்ளனர். அவர்கள் வந்து கேட்டும் கன்னியர் மடத்தின் சாதி வெறிக்கு காது கேட்கவில்லை. ஊர்ப் பெண்களுடன் இரவு முழுவதும் மடத்துக்கு வெளியிலேயே அறப்போர் நடத்தி இருக்கிறார் ஜெசிந்தா.

இதற்கிடையில், ஊர்க்காரர்கள் அன்னாள் சபையின் தலைமைக்குத் தகவல் அனுப்பினர். பிரச்சனையின் பரிமாணத்தைப் புரிந்து கொண்ட சபைத் தலைமை, அதை அப்படியே அமுக்கப் பார்த்தது. மறுநாள் சம்மந்தப்பட்ட மடத்தின் கன்னியாஸ்திரிகளை, சென்னையை அடுத்த பெருங்குடிக்கு வரவழைத்தது. அன்னாள் சபையின் தலைவி, சபையின் மாநிலத் தலைவி ஆகியோர் இருவரிடமும் பேசி 'சமாதானம்' செய்து அனுப்பினர். சாதி இழிவுக்குள்ளான கன்னியாஸ்திரி ஜெசிந்தாவும், கர்த்தரின் வழிகாட்டலில் அய்க்கியமாகிவிட்டார். அதன் பிறகு, காணிக்கைமேரியின் வடிவில் அவருக்கு இழைக்கப்பட்ட சாதிக் கொடுமையைப் பற்றி சிலர் விசாரித்தபோது, அப்படி எதுவும் நடக்கவில்லை என்று ஒரேயடியாக அடிக்கிறார் சகோதரி ஜெசிந்தா.

ஆனால், மடத்திலிருந்து ஜெசிந்தா வெளியேற்றப்பட்டவுடன் நடந்த நிகழ்வுகளை, தலித் இளைஞர்கள் குழு ஒன்று 'வீடியோ' எடுத்துள்ளது. அதில், ''வேறு வேலையாகப் போய்விட்டு வந்து தங்கும் அறைப் பக்கம் சென்ற எனக்கு, ஊர்க்காரர்களுடன் காணிக்கைமேரி விவாதம் செய்த விவரம் தெரியாது. ஆனாலும், அவர் என்னை சாதிப் பெயரைச் சொல்லித் திட்டினார்; வெளியில் தள்ளி கதவைச் சாத்திக் கொண்டார். எனக்கு செத்துப் போகலாம் போல இருந்தது'' என்று ஜெசிந்தா பேட்டியளித்துள்ளார். அவர் இரவு நேரம் மடத்தின் வராண்டாவில் இருப்பதையும் புகைப்படம் எடுத்துள்ளனர்.



மூடப்பட்ட கதவுகளுக்கு வெளியில் தலித் பெண்களுடன் ஜெசிந்தா

தலித் மக்கள் மதம் மாறினால், ஒப்பீட்டளவில் அவர்கள் மீதான வன்கொடுமைகளும் இழிவுகளும் குறைகிறது என்பது உண்மைதான். ஆனால், கிறித்துவ மதம் மட்டுமே மாறியுள்ள சாதி இந்துக்களின் மனம் மாறாதவரை, இங்கு தேவாலயங்கள் கிறித்துவத்தின் வழியாக - 'ஜாதி ஊழியம்' செய்பவையாக மட்டுமே இருக்கும்! ●

> **“ஜெசிந்தா பலமுறை கதவைத் தட்டிப் பார்த்தும், காணிக்கைமேரியின் சாதி வெறி கதவைத் திறக்கவில்லை. வேறு வழியின்றி, ஜெசிந்தா வெளியிலேயே இருந்திருக்கிறார்.”**



படிப்பகம்

www.padippakam.com



### வாழ்க ஜனநாயக முரண்!

''எங்களுக்கெல்லாம் தனி டம்ளரில்தான் டீ கொடுக்கின்றனர். புலிமேடு, கீழ்கொத்தூர், ஏரிப்புதூர் போன்ற இடங்களில் எல்லாம் இது சர்வசாதாரணமாக நடக்கிறது. அதுவும் கீழ் கொத்தூர் கிராமத்தில், அ.தி.மு.க.காரரான டி.கே. முருகேசன் செய்யும் தொல்லைதான் ரொம்ப அதிகம். அந்தப் பகுதியில் அவருக்கு நிறைய நிலம் இருக்கிறது. தன் நிலத்தில் வேலை செய்யும் தலித்துகள் செருப்புப் போடக்கூடாது; பெண்கள் ஜாக்கெட் போடக்கூடாது; கிளாசில் தண்ணீர் குடிக்கக்கூடாது என்றெல்லாம் அவர் கட்டுப்பாடு போட்டு வைத்துள்ளார். செருப்புக்கூட போட முடியாத நாங்க, எதுக்கு ஓட்டுப் போடணும்'' - வேலூர் மாவட்டம் அணைக்கட்டு, அப்புக்கல் கிராமம் உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த அருந்ததியர்கள்தான் இக்கேள்வியை எழுப்பியுள்ளனர் ('குமுதம் ரிப்போர்ட்டர்' - 9.3.2006). 'நீலப்புலிகள் விடுதலைக் கட்சி'யின் ஆர். சண்முகம், இப்பிரச்சினையைக் கையிலெடுத்துப் போராடி வருகிறார். இக்கொடுமைகளைக் கண்டித்து, வரும் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகவும் தலித் மக்கள் அறிவித்துள்ளனர். தேர்தலில் வாக்களிப்பது ஜனநாயகக் கடமை என்று தேர்தல் ஆணையம் உள்ளிட்ட 'ஜனநாயகவாதி'கள் குரலெழுப்பி வருகின்றனர். ஆனால், இந்தத் 'தேர்தல் ஜனநாயக'த்தைப் புறக்கணித்தால்தான் - இழந்த தங்களுடைய மனித மாண்புகளையும், உரிமைகளையும் மீட்டெடுக்க முடியும்; பொது மக்களின் கவனத்தை ஈர்க்க முடியும் என்று - ஜனநாயகத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்கள் பொங்கி எழுகின்றனர். இந்த முரண்பாடுகளுக்கிடையே ஜாதி மட்டும் நிம்மதியாக உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது! ♦

### சாணியாகிப்போன கனவுகள்!


பஞ்சாபில் மூர்த்தி கவுர் என்ற சீக்கிய தலித் பெண், தமது முன்னோர் பண்ணையார்களிடம் 5 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியதற்காக - கடந்த அய்ந்துதலைமுறைகளாக கொத்தடிமைத் தொழிலாளியாக தமது பேத்திகளுடன் சாணியள்ளி வருகிறார். ''உள்ளூரில் உள்ள பண்ணையாரிடம் வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட, அய்ந்து தலைமுறைகளாக எங்கள் குடும்பம் கொத்தடிமையாக இருந்து வருகிறது. அதில் நான் மூன்றாவது தலைமுறையைச் சார்ந்தவள். நாங்கள் தினமும் காலை 4 மணியிலிருந்து மதியம் வரை மாட்டுச்சாணியைத் தலையில் சுமந்து கொண்டு, எங்களுடைய வட்டிக் கடனைக் கழித்து வருகிறோம். என்னுடைய மாமியார் இறந்த பிறகு, எனது திருமணம் முடிந்த ஆறாவது நாளிலிருந்து நான் இந்த வேலையை செய்து வருகிறேன். ராத்திரி நேரத்தில் எனக்கு சாணிக் கனவுகளாக வருகின்றன. யாரோ ஒருவர் என் தலையில் சாணியை வைக்கச் சொல்லிகத்துகிறார். யாராவது என் தலையில் சாணியைத் தூக்கி வையுங்களேன் என்று நான் கெஞ்சுகிறேன். ஆனால், யாரும் என்னைக் கண்டுகொள்வதில்லை...'' என்கிறார் கவுர்.

நங்கல் குர்த் என்ற கிராமத்தில் மூர்த்தி கவுரின் மகள் கரம்ஜித் கவுர், ஏழு பண்ணையார்களின் வீடுகளில் சாணி அள்ளி வருகிறார். இவர் 31 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார். சாணியள்ளுவதன் மூலம் கடனுக்கான வட்டித் தொகையை மட்டும் கழித்து வருகிறார். தாம்காட் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஜெயந்தோவின் விரல்கள், மாட்டுக்குத் தீனி அறுக்கும்போது துண்டாகி விட்டன.

❝ நாங்கள் தனித்து வாழ விரும்பியிருந்தால், போராட்
நாங்கள் வாழ வேண்டும்; அதனால்தான் அவர்களுடன்
இல்லை என்கிற முடிவு எடுத்துவிட்டால் சண்ன

ஆனால், பண்ணையாரிடமிருந்து வாங்கிய 7 ஆயிரம் ரூபாயை அவர் திருப்பிச்செலுத்தியாக வேண்டும். வெட்டப்பட்ட விரல்களுடன் சாணியள்ளும் அவர், தனது வேதனையைப் பகிர்ந்து கொள்கிறார்: ''சாணி அள்ளும் எங்களைப் போன்ற பெண்களுக்கு மூட்டுகளில் கடுமையான வலி ஏற்படுகிறது. எங்களுக்கு கண் பார்வை மங்கி விடுகிறது. எங்களின் வயிறும் ஊதிவிடுகிறது.'' - இப்படியாக இன்னும் பல வாக்குமூலங்களை 'தெகல்கா' (4.3.06) ஆங்கில ஏடு வெளியிட்டுள்ளது.

சட்டம், பண்ணையார்களை ஒன்றும் செய்வதில்லையாம்! பண்ணையார் முறை, மன்னராட்சி முறை, சர்வாதிகார ஆட்சி முறை, ஆங்கிலேய ஆட்சி முறை - என எல்லா முறைகளையும் ஒழித்ததாகச் சொன்னாலும், ஜாதி முறை மட்டும் எல்லா வகையான ஆட்சிகளையும் செரித்துக் கொண்டு, தலித்துகளை நிரந்தரக் கொத்தடிமைகளாக்கி வருகிறது. இனிவரும் காலங்களிலும், எளியோரை



மூர்த்தி கவுர் தனது பேத்திகளுடன்

அடக்கியாளும் பண்ணையார்களை சட்டம் ஒன்றும் செய்யாது. தலித்துகள் ஏதாவது செய்தால்தான் உண்டு. ♦

### மாதமொரு வன்கொடுமை!

மாதவிலக்கு என்பது ஒரு பெண்ணின் மிக அந்தரங்கமான பிரச்சினைகளில் ஒன்று. ஆனால், அதில்கூட தலித் மாணவிகள் தங்கள் அந்தரங்கத்தை வெளிப்படுத்தியாக வேண்டும் என்றொரு கொடுமையை - இதுவரை உலகம் கேள்விப்பட்டிருக்காது. மதுரை மாவட்டம் சோழவந்தான் என்ற ஊரில் உள்ள ஆதிதிராவிட மாணவிகள் விடுதியின் பதிவேட்டில், இவ்விடுதியில் தங்கும் மாணவிகள் தங்களின் மாதவிலக்கு விவரத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இதை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (24.3.06) ஏடு அம்பலப்படுத்தியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com




**திற்கே இடமில்லை. ஆதிக்க சாதிக்காரர்களோடு ராடுகின்றோம். அவர்களுடன் சேர்ந்து வாழ விருப்பம் கே இடமில்லை. ’** - சரண்குமார் லிம்பாலே

ஓரிரு நாள்கள் மாதவிலக்கு தள்ளிப்போனால்கூட, விடுதியின் சமையல்காரப் பெண், இவர்களை ஒழுக்கக்கேடானவர்களாகச் சித்தரித்து, அவர்களைக் கடுமையாகத் திட்டுவாராம். இதை நியாயப்படுத்தும் விடுதியின் காப்பாளர் செல்வராணி, இப்பதிவேட்டை தினமும் பார்வையிட்டு வருகிறார். இந்த விடுதியில் கழிவறை, குளியலறை உள்ளிட்ட வேறு எந்த அடிப்படை வசதிகளும் இல்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. குழந்தைகளின் / பெண்களின் அடிப்படை மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் இத்தகைய செயல்களை, அரசு தலையிட்டு உடனடியாகத் தடுத்து நிறுத்துமா? ♦

**‘படிப்பு உன் ஜாதியை ஒசத்தி விடுமா?’**

ஒரு தாழ்த்தப்பட்ட சாதிக்காரரின் மகன், சைக்கிளில் சவாரி செய்ய அனுமதிக்க முடியாது என்று கரூர் மாவட்டம் - கவுண்டன்



‘தெகல்கா’

புதூர் கிராமத்தைச் சேர்ந்த கவுண்டர்கள் மறுத்து, அவ்வாறு சைக்கிளில் சவாரி செய்த தேவராஜ் என்பவரை ஊர் நீக்கம் செய்து ஊரைவிட்டே விரட்டியுள்ளனர் (‘நக்கீரன்’ - 22.03.06). ‘‘சைக்கிள்ல போனதுக்காக மன்னிப்புக் கேட்டு, இனிமே சைக்கிளைத் தள்ளிட்டுப் போறதா சொன்னா, ஊர்ல சேர்த்துக்கிறதா சொன்னாங்க. இதைத் தட்டிக் கேட்ட பன்னீர் செல்வம் என்கிற கவுண்டர் சாதி வக்கீலைக்கூட ஊரைவிட்டு விலக்கிட்டாங்க’’ என்கிறார் தேவராஜ். இத்தீண்டாமைக் கொடுமை குறித்து ஊர்த் தலைவர் தங்கவேலு இப்படிச் சொல்கிறார்: ‘‘ஊருக்குனு சில நியாயம் இருக்கு. அதைக் கடைப்பிடிச்சாதான் மத்தவங்க மதிப்பாங்க. படிச்சிப்புட்டா மட்டும் மதிப்பு வந்திடுமா?’’ வேறு எப்படிதான் ஒரு மனிதனுக்கு, மதிப்பும் மரியாதையும் வரும்? இந்த நாட்டில் பிறப்பால் ஏற்படும் ஜாதி அடிப்படையில்தான் - ஒரு மனிதனின் சமூக நிலை தீர்மானிக்கப்படுகிறது. ‘இப்பிறவிக் குற்றத்தை’ படிப்பும் மாற்றாது; பொருளாதாரமும் மாற்றாது; அரசியலும் மாற்றாது; இந்த நாட்டின் உச்சபட்ச பதவியான குடியரசுத் தலைவர் பதவியையே ஒரு தலித் வகித்தாலும் - ஜாதியை மட்டும் அது ஒருபோதும் மாற்றாது. வேறு என்னதான் செய்வது? அம்பேத்கர் தன் வாழ்நாளில் இறுதியாகத் தேர்வு செய்த ஆயுதத்தால் மட்டுமே, ஜாதியை அழித்தொழிக்க முடியும். ஆனால், அண்ணலின் தீர்வு குறித்து இன்றளவும் சந்தேகத்தை எழுப்புகின்றவர்கள், சாதியை ஆராதிப்பவர்களாகவே புரிந்து கொள்ளப்படுவர். ♦

**ஒரேயொரு இ(ஜ)ந்து இருந்தால்கூட....**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது டி. சண்முகாபுரம் என்ற குக்கிராமம். இங்கு 633 பேர் மட்டுமே வசிக்கின்றனர். இதில் 150 ரெட்டியார் குடும்பங்கள் மற்றும் அருந்ததியர்களும் உள்ளனர். ஒரேயொரு இந்து இருந்தால்கூட, அங்கு ஜாதி கண்டிப்பாக இருக்குமே! இங்குள்ள அருந்ததியர்கள் மீது பல தலைமுறைகளாக கையால் மலமள்ளும் வேலை திணிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமின்றி, சாதி இந்துக்களின் வீடுகளிலும் இவர்கள் வீட்டு வேலை செய்து வருகின்றனர். இந்த வேலைகளை செய்ய மறுத்தால், தலித்துகள் கடுமையாகத் தாக்கப்படுவர். முத்தையன் என்பவர், வெள்ளைச் சாமி என்பவருக்கு இப்படியான வேலைகளைச் செய்ய மறுத்ததால் - அவர் ஏற்கனவே செய்த வேலைகளுக்குப் பணம் தர மறுத்திருக்கிறார். அது மட்டுமல்ல, சனவரி 17 அன்று, முத்தையனை கடுமையாகத் தாக்கியிருக்கிறார். எனவே முத்தையன், கொப்பம்பட்டி காவல் நிலையத்தில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்திருக்கிறார். அதைத் தொடர்ந்து, ஊராட்சி மன்றத்தின் சார்பில் நடைபெறும் பணிகளில் அவருக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளது. மேலும், முத்தையன் வழக்கைத் திரும்பப் பெறவில்லை எனில், அனைத்து தலித்துகளுக்கும் கையால் மலமள்ளும் வேலை மறுக்கப்படும் என்று மிரட்டியுள்ளனர் (ரொம்ப நல்லது. இதைத் தானே நாம் எதிர்பார்க்கிறோம். இனி, தலித் ‘பீ’யையும் சேர்த்து அவர்களே அள்ளட்டும்). தமக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கோரி பிப்ரவரி 27 அன்று, முத்தையன் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் நடத்தினார். அப்போதுதான் உலகத்தின் பார்வைக்கு இச்செய்தி தெரிய வந்தது. இக்கிராமத்திற்குச் சென்று விசாரித்தபோது, அங்கு தலித்துகளுக்கு தனி கோயில் இருப்பதையும், பொதுக் கழிவறைகளில், பொதுக் குழாய்களில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவதையும் காண முடிந்தது (‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ - 10.3.06).

‘விஷ்வ இந்து பரிஷத்’ என்ற இந்து மதவாத அமைப்பு, ‘ஹிந்து சமுதாயப் பாதுகாப்பு மாநாடு’ ஒன்றை அண்மையில் நடத்தியது. அதற்குப் பல நாளேடுகளிலும் 12.3.06 அன்று பெருமளவில் விளம்பரம் அளித்தது. அதில், ‘‘ஹிந்து சமுதாய அடித்தளத்தின் மீதுதான் அனைத்து ஜாதிகளுமே நின்று கொண்டிருக்கின்றன. ஹிந்து அடையாளம் அழிந்து விட்டால், நமது ஜாதி அடையாளங்களும் இல்லாமல் போய்விடும்’’ என்று குறிப்பிட்டுள்ளது - மிகத் தெளிவாக! இந்து அடையாளத்தைக் காப்பாற்ற வேண்டிய எந்தத் தேவையும் தலித்துகளுக்கு இல்லாதபோது, ஏன் அதைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும்? காரித் துப்பிவிட்டு வெளியேற வேண்டியதுதானே! ♦



படிப்பகம்

www.padippakam.com



# ஜப்பானிலும் ஜாதி!

புராக்கு மக்களின் குடியிருப்புகள்

■ பூங்குழலி

ஜப்பானிலிருந்து

ஜப்பான் - ஆசியக் கண்டத்தின் கிழக்குக் கோடியில் பசிபிக் பெருங்கடலில் இருக்கும் நாடு. ஹொக்காய்தோ, ஹொன்ஷு, க்யூஷு, ஷிகோகு என அழைக்கப்படும் நான்கு பெரிய தீவுகளும், பல குட்டித் தீவுகளும் கொண்ட நாடு. அமெரிக்கா மற்றும் அய்ரோப்பிய நாடுகளுக்கு ஈடாக வளர்ச்சிப் பாதையில் மிக வேகமாக நடை பயிலும் ஓர் ஆசிய நாடு. இருந்தபோதும், இந்தியாவைப் போலவே ஜப்பானிலும் படிநிலை சமூக அமைப்பு உண்டு என்பதும், அந்தப் படிநிலையில் கீழ்நிலையில் ஒதுக்கப்பட்ட ஒரு சமூகம் உண்டு என்பதும் அதிர்ச்சியூட்டும் உண்மைகள்!

ஒரு நாள் எனது ஜப்பானியத் தோழியிடம் இதுகுறித்து கேட்ட போது, ஒதுக்குமுறை இருந்ததை ஒப்புக்கொண்ட அவர், தற்பொழுது அது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது என்றார். இப்படி ஒரு கொடுமை ஒழிக்கப்படுவது உண்மையிலேயே சாத்தியமாகி இருக்கிறதா? அப்படி சாத்தியமெனில், அந்த முறையைப் பின்பற்றி இந்தியாவிலும் அதை ஒழித்து விடலாமே! ஆனால், அந்த வகுப்பினரைக் குறிக்கும் சொல் என்னவென்று கேட்டபோது, அந்தத் தோழியின் முகம் மாறிவிட்டது.

நாங்கள் அப்போது ஒரு உணவு விடுதியில் இருந்தோம். சுற்றும் முற்றும் பார்த்த அவர், தயங்கியவாரே நான் அதைச் சொல்ல முடியாது என்றார். பின்னர் நாங்கள் சாலையில் நடந்து வந்து கொண்டிருந்தபோது, ஒரு தனியான இடத்தில் அவராகவே என்னிடம் 'நீங்கள் கேட்ட சொல் 'புராக்கு' என்றார். இன்று சட்டப்படி அது முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. இப்போது நான் அதைச் சொல்வது முறையல்ல. அப்பகுதியில் இருந்து வந்தவர்கள் யாரேனும் அருகில் இருக்கலாம். அவர்கள் காதில் நான் சொல்வது விழுந்தால் தவறாகப் போய்விடும். மேலும், அந்தச் சொல்லை இக்காலத்தில் சொல்வது, அநாகரிகமாகக் கருதப்படுகிறது என்றார். நம் நாட்டிலும் ஒரு நாள் 'ஜாதி' என்ற சொல்லை சொல்வதற்கு கூச்சப்படும், அச்சப்படும் நாள் வருமா?

ஜப்பானில் மட்டும் அது எப்படி சாத்தியமாயிற்று? புராக்கு மக்களின் நிலையைப் புரிந்து கொள்ள, முதலில் ஜப்பான் நாட்டின் சமூக மற்றும் மதத்தின் பின்புலத்தை அறிந்து கொள்ள வேண்டும். ஜப்பானின் அரச மதமாக அறிவிக்கப்பட்டிருப்பது புத்த மதமே. ஜப்பானிய மக்களும் பெரும்பாலும் புத்த மதத்தினராகவே இருக்கின்றனர். இருப்பினும், புத்த மதம் இங்கு பல பிரிவுகளாக இருக்கின்றன. மிகப்புகழ் பெற்ற 'சென்' பிரிவு உட்பட, 'ஜோதோ' பிரிவு, 'ஜோதோ ஷின்சிசு' பிரிவு, 'நிச்சிரின்' பிரிவு என சீன நாட்டிலிருந்தும் கொரிய நாட்டிலிருந்தும் பரவிய புத்த மதப் பிரிவுகள் - இன்றும் ஜப்பான் நாட்டில் நிலவி வருகின்றன. இது தவிர, ஜப்பானின் பழமையான மதமான 'ஷின்டோ'வும் இன்னமும் உயிர்ப்புடனேயே இருக்கிறது.

புத்த மதத்தினர் 'ஷின்டோ' வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுபவர்களாகவே இருக்கின்றனர். ஷின்டோவின் கடவுளான 'கமி'களை புத்தரின் வடிவங்களாகவே பெரும்பாலான புத்த மதத்தினர் கருதுகின்றனர். புத்த கோயில்களில் ஷின்டோ மதத்தின் தாக்கங்கள் நிறைய இருக்கின்றன. ஷின்டோ மதத்தின் திருவிழாக்கள், புத்த கோயில்களிலும் நடைபெறுகின்றன. புத்த மதத்திற்குரிய சிறப்பு வழிபாடுகள் ஷின்டோ கோயில்களிலும் நடைபெறுகின்றன. புத்த மதம், ஷின்டோ இரண்டையும்



படிப்பகம்

www.padippakam.com

பின்பற்றுபவர்கள் ஒரே மக்கள் என்பதால், இவ்விரண்டு மத வழிபாட்டு முறைகளும் பிரித்துக் காண இயலாதவாறு ஒன்றோடு ஒன்று கலந்து இருக்கின்றன.

இந்தியாவைப் போலவே ஜப்பானிலும் நான்கு படிநிலை சமூக அமைப்பு உண்டு. 'சாமுராய்' என அழைக்கப்படும் வீரர்கள் முதல் நிலை. இரண்டாவதாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்போர். மூன்றாவதாக பிற தொழில் மற்றும் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சாதாரண மக்கள். நான்காவதாக, சாவு தொடர்பான வேலைகளில் ஈடுபட்டிருப்போர். இதில் கால்நடைகளைக் கொல்வது, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது போன்றவையும் அடங்கும். ஜப்பானின் பழமையான மதமான ஷின்டோ மதத்தில், இத்தகைய தொழில்கள் புனிதமற்றவையாகக் கருதப்பட்டன. அதனால் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களும் புனிதமற்றவர்களாகவே கருதப்பட்டனர். ஊருக்கு ஒதுக்குப்புறமாக, பிறரோடு கலந்து பழக இயலாதவாறு அவர்கள் வாழவைக்கப்பட்டனர். இந்தப் படிநிலை அமைப்பு முறை, 1333இல் ஜப்பானில் முடியாட்சி முறை இருந்தபோது ஏற்படுத்தப்பட்டது. எனினும், அதற்கு முன்பிருந்தே இம்மக்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மக்களாகவே இருந்திருக்கின்றனர். படிநிலை முறை அவர்களது நிலையை உறுதிப்படுத்தி, அவர்களை சமூகத்திலிருந்து மேலும் அன்னியப்படுத்தியது.

ஜப்பான் நாடு முழுவதிலும் பரவியிருக்கும் இம்மக்களின் வாழ்க்கை நிலை, காலம் காலமாக மிகவும் மோசமான நிலையிலேயே இருந்தது. கல்வி, வேலைவாய்ப்பு, சமூகக் கலப்பு போன்றவை அவர்களுக்கு அடியோடு மறுக்கப்பட்டன. ஜப்பானிய சமூகத்தில் ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட இனமாக அவர்கள் வாழ்ந்து வந்தனர். 'புராக்கு' என்றால் ஜப்பானிய மொழியில் ஒரு சிறிய கிராமம் என்று பொருள். இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த பகுதிகள் 'தொகுஷு புராக்கு' - சிறப்பு கிராமம் என்று அழைக்கப்பட்டன. நாளடைவில் 'புராக்கு' என்ற சொல்லே இம்மக்கள் வாழும் பகுதியைக் குறிக்கும் சொல்லாகவும், புராக்கு- மின் - புராக்கு மக்கள் என்ற சொல், இம்மக்களைக் குறிக்கும் சொல்லாகவும் பயன்படத் தொடங்கியது.

ஜப்பானில் சமூக - பொருளாதார மாற்றத்திற்குப் பெரிதும் வித்திட்டவர், 1869 - 1912 வரை ஆண்ட மெய்ஜி அரசராகும். அவரது காலத்தில்தான் படிநிலை சமூக அமைப்பு, சட்டப்படி நீக்கப்பட்டது. மக்கள் அனைவரும் சமமென அறிவிக்கப்பட்டனர். ஜப்பானை ஒரு சம நிலை சமூக அமைப்பாக, ஜனநாயக நாடாக மாற்ற மெய்ஜி பெரும் முயற்சி எடுத்தார். அவரது முயற்சியின் விளைவாக, புராக்கு வேறுபாடும் சட்டப்படி ஒழிக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் அதை சாத்தியப்படுத்துவது மிகுந்த கடினமான ஒரு சவாலாகவே இருந்தது.


இஷிகவா தமது மனைவி சசிகோவுடன்

அவரது காலகட்டத்திற்குப் பிறகு, இத்தகைய சமூக மாற்ற நடவடிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு - நாட்டின் பொருளாதார, அரசியல் வளர்ச்சி மட்டுமே முன்னிறுத்தப்பட்டன. நவீனமயமாக்குதல் காலம் என அழைக்கப்படும் இக்காலத்தில், புராக்கு மக்களின் நிலை மேலும் மோசமடைந்தது. மெய்ஜி காலகட்டத்தில் ஓரளவு அரசியல் தெளிவும், உலக அறிவும் பெற்ற ஒரு சில புராக்கு மக்கள் ஒன்றிணைந்து - 'புராக்கு விடுதலைக் கூட்டமைப்பை' உருவாக்கினர். 1965 ஆம் ஆண்டு இவ்வமைப்பின் அழுத்தத்திற்குப் பணிந்து, புராக்கு மக்களின் நிலையைப் பற்றி ஆராய அரசு ஒப்புக் கொண்டது. அரசு அமைத்த குழு அம்மக்களின் நிலையை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை அளித்தது. அவ்வறிக்கை, புராக்கு மக்களின் புறந்தள்ளப்பட்ட வாழ்க்கை நிலையை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

குடியிருப்புகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பின்மை, அதனால் வறுமை, குற்றச் செயல்கள் அதிகரிப்பு - போன்றவை புராக்கு மக்களின் அடையாளமாகவே இருந்ததை அவ்வறிக்கை சுட்டிக்காட்டியது. ஜப்பானின் அரசியலமைப்புச்சட்டம் வழங்கும் அடிப்படை மனித உரிமைகள் அனைத்தும் - இம்மக்களுக்கு மறுக்கப்படுவதையும், மிக அவசர நிலையாகக் கருதி அரசு இப்பிரச்சனைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்றும் இவ்வறிக்கை வலியுறுத்தியது. பத்தாண்டுகள் மட்டுமே காலவரையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட இச்சட்டம், பின்னர் சிறிது சிறிதாக நீட்டிக்கப் பெற்று, 1997 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் 30 ஆண்டுகள் அப்பகுதிகளின் முன்னேற்றத் திற்கானப் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

**“ ஒடுக்கப்படுபவர்களிலேயே மோசமாக ஒடுக்கப்படுபவள் பெண் என்ற உண்மை இங்கும் உறுதிப்படுகிறது. புராக்கு இனப் பெண்கள், புராக்கு இனத்தில் பிறந்ததினாலும், பெண்ணாக இருப்பதினாலும் - இரட்டை ஒடுக்குமுறைக்கு ஆளாகின்றனர். ”**

காலம் காலமாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு, 30 ஆண்டுகள் சலுகை போதுமானதாக இருக்க முடியாது என்றபோதும் - 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட, அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரிதும் முன்னேற்றம் காணப்படுகிறது. பரம்பரைத் தொழில்களிலிருந்து விடுபட்டு, வேறு தொழில்களில் ஈடுபடவும், கல்வி கற்று அதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெறவும் அம்மக்கள் முயற்சிக்கத் தொடங்கினர்; அதில் ஓரளவு வெற்றியும் பெற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், சமூகப் புறக்கணிப்பு இன்றும் தொடரவே செய்கிறது. இன்றைய இளைஞர்கள் புராக்கு குடியிருப்புகளிலிருந்து வெளியேறி, பொதுக் குடியிருப் புகளில் வாழத் தொடங்கிவிட்டனர். இருப்பினும், தங்களின் அடையாளத்தை மறைத்தே வாழ வேண்டிய நிலையில் இருக்கின்றனர். ஜப்பானில் வேலை மற்றும் திருமணங்களுக்கு, பின்புல விவர சேகரிப்பு செய்து தர பல தனியார் புலனாய்வு நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களின் உதவியால், புராக்கு இளைஞர்களின் பின்புலத்தை அறிந்து, அவர்கள் புராக்கு மக்கள் என்ற ஒரே காரணத்திற்காக - அவர்களுக்கு வேலை மறுக்கப்படும் கோடுமை தொடருகிறது. பல திருமணங்களும் இத்தகைய புலனாய்வுகளால் தடைபட்டிருக்கின்றன.

அப்படி ஒரு வேளை திருமணத்திற்குப் பிறகு இவ்விவரம் தெரிய வருமானால், உடனடியாக மண விலக்கு நடப்பதோடு - அந்த ஆணோ பெண்ணோ, கடுமையாக அவமானப்படுத்தப்படுகின்றனர். இதனால் தற்கொலை செய்து கொண்டவர்களும், வேலையை விட்டு ஊரை விட்டே வெளியேறியவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காது. புராக்கு மக்களுடன் குடியிருப்பதையோ, புராக்கு மக்களுடனான திருமண உறவையோ பிற சமூகத்தினர் விரும்புவதில்லை. தெரியும் வரையில் பிரச்சனை இல்லை; தெரிந்தால் ஒதுக்குதலும் ஒதுங்குதலும் இன்றளவும் நீடிக்கிறது.

பெரும்பாலான புராக்கு மக்கள், தங்களுக்கு நேர்ந்த அவமானங்களை அமைதியாகவே ஏற்றுக் கொள்வதாக ஓர் ஆய்வு கூறுகிறது. வெகு சிலரே அரசையோ அல்லது புராக்கு விடுதலை இயக்கத்தையோ நாடுகின்றனர். பள்ளிகளில், வேலை பார்க்கும் இடங்களில், மதம் தொடர்பான இடங்களில், அரசு அலுவலகங்களில் என அனைத்து இடங்களிலும் அவர்கள் மீதான ஒதுக்குதலும், அவதூறுகளும் நடத்தப்படுகின்றன. இதனால் கல்வியை பாதியில் விட்டவர்களும், வேலையை விட்டு வேறு ஊர்களுக்கே சென்று விட்டவர்களும் அதிகம் உள்ளனர்.

புராக்கு விடுதலை இயக்கத்திற்கு மிரட்டல்களும், அவமானப்படுத்தும் அவதூறான கடிதங்களும் வந்த வண்ணம் இருக்கின்றன. இத்தகைய அவதூறான கடிதங்கள், தெளிவான பெயர் முகவரியோடு வருவது அதிர்ச்சியூட்டும் செய்தியாகும். ஆனால், இத்தகைய செயல்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் சாத்தியம் இல்லாததால், இவற்றைத் தடுக்க முடியாமல் போய்விடுகிறது.

'கேவலமான புராக்கு மிருகமே, புராக்கு மக்கள் அனைவரையும் கொல்; புராக்கு மக்களை விஷ வாயு அறைகளில் அடைத்து' என்பது போன்ற கொடூரமான வாசகங்கள், இணையத் தளங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஒசாகா நகரில் வாழும் ஒருவன், 1993 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் தன் வீட்டைச் சுற்றிலும், புராக்கு மக்களைக் கேவலப்படுத்தும் வாசகங்களை எழுதி ஒட்டி வைத்துள்ளான். எத்தனையோ முறை உள்ளூர் அதிகாரிகள் வலியுறுத் தியும் இச்செயலை அவன் நிறுத்த வில்லை. அரசு, அம்மக்களுக்கான முன்னேற்றப் பணிகளை மேற்கொண்டாலும் சட்டப் பூர்வமான பாதுகாப்பை, அம்மக்களுக்கு வழங்காததையே இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது.



## புராக்கு பாகுபாடு

ஜப்பானின் சய்தாமா மாவட்டம், சயாமா நகரில் 1.5.1963 அன்று ஒரு பள்ளி மாணவி காணாமல் போகிறாள். அவளது வீட்டிற்கு ஒரு மிரட்டல் கடிதம் வருகிறது. அம்மிரட்டல் கடிதத்தின் அடிப்படையில் அந்தக் குற்றவாளிக்குப் பணம் கொடுக்கலாம் என்றும், அப்பணத்தை எடுக்க அவன் வரும்போது அவனைப் பிடித்து விடலாம் என்றும் காவல் துறையினர் முடிவெடுக்கின்றனர். கிட்டத்தட்ட 40 காவலர்கள் கண்காணித்தபோதும், அக்குற்றவாளி திறமையாகப் பணத்தை எடுத்துக் கொண்டு தப்பித்து விடுகிறான்; அப்பள்ளி மாணவியும் கொலை செய்யப்பட்டு விடுகிறாள். இந்நிகழ்வு மக்களிடையே காவல் துறைக்கு எதிராக பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது; காவல் துறைக்கு ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தியது.

மேற்கொண்டு எந்தத் துப்பும் கிடைக்காத நிலையில், வழக்கில் முன்னேற்றமின்றி காவல் துறை திகைத்து நின்றது. தங்கள் முகத்தைக் காத்துக் கொள்ள காவல் துறை, எந்தவித ஆதாரமும் இன்றி கசுவோ இஷிகவா என்ற 24 வயது இளைஞரை கைது செய்தது. அவர் புராக்கு குடியிருப்பைச் சேர்ந்தவர். அவர் மீது பல திருட்டு வழக்குகளை சுமத்திய காவல் துறை, ஒரு மாதம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. விசாரணை என்ற பெயரில் அவரைத் துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலங்கள் வாங்கி, பள்ளி மாணவி கொலை வழக்கில் அவரைக் குற்றவாளியாக்கியது.

அந்த வழக்கில் கீழ் நீதிமன்றம் இஷிகவாவிற்கு மரண தண்டனை வழங்கியது. மேல் முறையீட்டில் அத்தண்டனை, வாழ்நாள் சிறை தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இஷிகாவிற்கு ஆதரவாக 'புராக்கு விடுதலை இயக்கம்' தீவிர முயற்சிகள் எடுத்தது. வழக்கிற்கு மறுவிசாரணை கோரியது. முதல் முறை கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு, 31 ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாவது முறை, மறுவிசாரணை கோரிக்கை வழக்கின் அடிப்படையில், இஷிகவா பரோலில் விடுவிக்கப்பட்டார். அப்போதும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. மேலும், இரண்டாவது முறையும் மறு விசாரணையை நீதிமன்றம் நிராகரித்தது.

இன்று வரை இஷிகவா தனது போராட்டத்தைத் தொடருகிறார். தனது போராட்டத்திற்கு பெரும் துணையாக இருந்த சசிகோ என்ற பெண்ணை கடந்த 1997 ஆம் ஆண்டு, தனது 58ஆவது வயதில் திருமணம் செய்து கொண்டார். இருவரும் இன்றளவிலும் நாடெங்கும் சென்று தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தேடுகின்றனர். புராக்கு வேறுபாட்டிற்கு இவ்வழக்கு ஒரு முக்கியச் சான்றாக கருதப்படுகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

முன்னேற்றப் பணிகளும் முழுமையாக அம்மக்களைச் சென்றடையவில்லை. முப்பது ஆண்டுகளுக்கு முன் இப்பணிகளின் தொடக்கக் காலத்தில் புனரமைக்கப்பட்ட குடியிருப்புகள், இன்று மிக மோசமான நிலையில் இருக்கின்றன. ஒரு சிறிய அறையில் ஆறு உறுப்பினர்கள் வாழும் நிலை இருக்கிறது. சின்னஞ்சிறிய சாலைகள், குளிருக்குப் பாதுகாப்பு இல்லாத வீடுகள், பொதுக் கழிப்பறைகள், சுகாதாரச் சீர்கேடுகள், போதுமான நீர் மற்றும் கழிவு நீர் வெளியேற்ற வசதிகளின்மை போன்றவை இன்றும் புராக்கு குடியிருப்புகளில் நிலவுகின்றன.

அரசின் பராமரிப்பில் அறிவிக்கப்பட்ட புராக்குகளின் நிலைமையே இதுவென்றால், அரசுத் திட்டங்கள் சென்றடையாத புராக்குகளின் நிலைமை மேலும் மோசமாக இருக்கின்றன. உயர் கல்வி கற்ற, கற்கும் புராக்கு மக்கள் ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம். பெரும்பாலான புராக்கு இன மக்கள், தொடக்கக் கல்வி நிலையிலேயே படிப்பை விட்டு விடுகின்றனர். ஒரு சிலர் பள்ளி இறுதி வரை படித்திருக்கின்றனர். கல்லூரி வரை சென்றுள்ள புராக்கு இளைஞர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதிலும் முழுமையாக கல்விப் படிப்பை முடித்தவர்கள் வெகு குறைவானவர்களே.

ஒடுக்கப்படுவர்களிலேயே மோசமாக ஒடுக்கப்படுபவள் பெண் என்ற உண்மை இங்கும் உறுதிப்படுகிறது. புராக்கு இனப் பெண்கள், புராக்கு இனத்தில் பிறந்ததினாலும், பெண்ணாக இருப்பதினாலும் - இரட்டை ஒடுக்குமுறைக்கு ஆளாகின்றனர். புராக்கு இன மக்களிடையே படித்தவர்களில், பெண்கள் 10 சதவிகிதம்கூட இல்லை. பெரும்பாலான புராக்கு இனப் பெண்கள், படிக்கவோ எழுதவோ கூடத் தெரியாதவர்களாகவே உள்ளனர். வேலை என்று வரும் போதும், நிரந்தர அல்லது மாத வருமானம் ஈட்டும் பெண்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே உள்ளனர். பெரும்பாலான பெண்கள் மணி நேர கூலி வாங்குபவர்களாகவோ, தினக் கூலி வாங்குபவர்களாகவோ உள்ளனர்.

நிலைமை இப்படியிருக்க, பொது மக்கள் மத்தியில் வேறு எண்ணம் நிலவுகிறது. இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்த என் தோழியைப் போலவே, புராக்கு வேறுபாடு என்ற ஒன்றே தற்போது இல்லை என்றும், அரசு அவர்களுக்குத் தேவைக்கு அதிகமாக சலுகை காட்டுகிறது என்றும் பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர். அரசு சலுகை அவர்களுக்கு கிடைப்பதால் ஏற்பட்ட பொறாமை, மிக அதிகமாக பொது மக்களிடம் இருக்கிறது. 'அதைப் பற்றி பேசி ஏன் பெரிது படுத்துகிறீர்கள்? அமைதியாக விட்டால் அப்பிரச்சினை தானாக ஒரு நாள் காணாமல் போய்விடும்' என்று சொல்கிறவர்களே அதிகம். மேலும், 'இத்தனை ஆண்டு கால சலுகைக்குப் பிறகும் அம்மக்கள் முன்னேறவில்லை. அது அவர்கள் குற்றம். அவர்களை ஒன்றும் செய்ய முடியாது' என்று அலட்சியமாகப் பேசுபவர்களும் உள்ளனர். இந்த மனநிலை இந்தியாவிலும் இருப்பதை நாம் உணர்ந்துள்ளோம்.

மக்களின் மனநிலையில் மாற்றம் வரும்வரையில், அரசுத் திட்டங்கள் மட்டுமே இத்தகைய சமூக மாற்றங்களை கொண்டு வரப் போவதில்லை. ●


தலித்திய முன்னோடி
கே. டானியலின் ஆறு நாவல்கள்

கே. டானியல் படைப்புகள்




பஞ்சமர் ○ கோவிந்தன் ○ அடிமைகள்
காணல் ○ பஞ்சகோணங்கள் ○ தண்ணீர்

வல்லிய தாளில், கெட்டிக் கட்டில், நேர்த்திமிகு அச்சில்.
பக்கம் : 1144, விலை: ரூ. 640. வி.பி.பி. உண்டு
அஞ்சலில் பெற தொலைபேசியிலும் உறுதி செய்யலாம்
குறைந்த படிகளே அச்சிடப்பட்டுள்ளன. தேவைக்கு முந்துங்கள்

வெளியீடு
அடையாளம்
1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310.
✆ 04332 273444 email:admin@adaiyalam.com


## 'முதல் உதவி'க்கு நன்றி!


'தலித் முரசு' சார்பில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு 'முதல் உதவி' கேட்டு கோரிக்கை விடுத்திருந்தோம். இது குறித்து மிகுந்த அக்கறையுடன் நம்மை அணுகி, ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைத்து, நிதி திரட்டுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கி, அத்துடன் நின்றுவிடாமல் - டாக்டர் அம்பேத்கர் மய்ய அறக்கட்டளைக்கு 'முதல் உதவி'யும் அளித்து, இனிவரும் காலங்களிலும் 'தலித் முரசு' வளர்ச்சிக்குத் துணை நிற்பதாக உறுதியளித்துள்ள - 'டாக்டர் அம்பேத்கர் இன்டர்நேஷனல் மிஷன்' அமைப்புக்கு எமது உளமார்ந்த நன்றி. ♦



படிப்பகம்

www.padippakam.com

# பூவுலகின் நண்பரை இழந்தோம்



செழியன் என்று எல்லோராலும் பாசத்துடன் அழைக்கப்பட்ட நெடுஞ்செழியன் என்ற மனித உரிமைப் போராளி - இன்று நம்முடன் இல்லை; இயற்கை அவரை ஆட்கொண்டு விட்டது. மறைந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பது இயல்பான ஒன்று எனினும், ஒரு சமூக மனிதராக வாழ்ந்து மறைந்தவருக்கு இரங்கல் தெரிவிப்பது, கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. 18.3.2006 அன்று சென்னையில் நடைபெற்ற செழியனின் இரங்கல் கூட்டத்திற்கு, அவருடைய உறவினர்கள் வரவில்லை; மாறாக செழியனின் சமூகச் செயல்பாடுகளில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள்தான் பங்கேற்றனர்; தங்களுடைய ஆற்றாமையைப் பகிர்ந்து கொண்டனர்.

தமிழ்ச் சமூகத்தில், சாதி ரீதியாக இயங்குபவர்களே மலிவாகிப்போனதொரு சூழலில், தன்னை சாதியற்றவராக மாற்றிக் கொண்டு, சமூக மாற்றத்திற்காக இறுதிவரை போராடியவர்தான் செழியன். சமூக ஆர்வலர்களை உள்ளடக்கிய 'பூவுலகின் நண்பர்கள்' என்றொரு இயக்கத்தை உருவாக்கி, கடந்த 15 ஆண்டுகளில், 50-க்கும் மேற்பட்ட நூல்களை மொழிபெயர்த்து, ஓர் அமைதிப் புரட்சியை அரங்கேற்றியவர் நெடுஞ்செழியன். மரம் நடுவது மட்டும்தான் சுற்றுப்புறச் சூழலுக்கு நாம் செய்யும் உதவி என்றிருந்த கருத்தை, 'பூவுலகின் நண்பர்கள்' செயல்பாடுதான் மாற்றியமைத்தது. இதற்கென்று ஓர் அலுவலகமோ, பணியாளர்களோ இன்றி, தோழர்களின் துணையுடன் அவருடைய இல்லத்தையே செயல்பாட்டுக்கான களமாக்கியவர் செழியன். இருப்பினும், அவர் தன்னை ஒருபோதும் - அதன் அமைப்பாளராகவோ, செயல் தலைவராகவோ வெளிப்படுத்திக் கொண்டதில்லை.

உலக மனித உரிமைகள் அமைப்பான 'அம்னஸ்டி இன்டர்நேஷனலின்' இந்தியப் பிரிவு தலைவராக அய்ந்தாண்டு காலத்திற்கும் மேல் செயல்பட்ட நெடுஞ்செழியன், அய்க்கிய நாடுகள் அவையின் மனித உரிமைப் பிரகடனத்தை எண்பதுகளின் இறுதியில் மக்களிடையே அறிமுகம் செய்து, தமிழகமெங்கும் ஒரு லட்சம் கையெழுத்துகள் திரட்டி விழிப்புணர்வூட்டினார்;



படிப்பகம்

www.padippakam.com

'அம்னஸ்டி' அமைப்பின் செயல்பாடுகளை விளக்கி, செய்தி மடல் நடத்தினார்; கூடங்குளம் அணுமின் நிலையம் அமைவதை எதிர்த்தும், அணு ஆயுதங்களுக்கு எதிராகவும் தொடர் பிரச்சாரம் செய்தார்; மாற்றுக் கல்வி குறித்த விழிப்புணர்வை ஆசிரியர் மற்றும் மாணவர்களிடையே விதைத்தார்; தமிழால் எல்லாம் முடியும் என்று தமிழ் வழிக் கல்வியை ஆதரித்து, தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுத்துச் செல்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்; ஈழ விடுதலை குறித்து ஆக்க ரீதியான பணிகளை முன்னெடுத்தார்; இந்துத்துவத்திற்கு எதிரான பயிற்சிப் பயிலரங்குகள் நடத்தினார்; சாதி ஒழிப்பு - தலித் விடுதலை குறித்து அக்கறையோடு பங்கேற்று கருத்துகளை முன்வைத்தது மட்டுமின்றி, தலித் பிரச்சினையை ஒரு மனித உரிமைப் பிரச்சினையாக மாற்ற, உலக அளவில் செயல்பட்டு வரும் ரவி நாயரோடு இணைந்து - டர்பன் மாநாடுகள் நடப்பதற்கு முன்பே அய்க்கிய நாடுகள் அவை போன்ற மனித உரிமை அமைப்புகளில் - இப்பிரச்சினையை மனித உரிமைப் பிரச்சினையாக முன்னெடுத்தார்; ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் ஈராக் மீதான போருக்கு எதிராக கருத்தரங்குகள் நடத்தினார்; நூல்கள் வெளியிட்டார். தன்னைத் தேடி வரும் இளைஞர்களைக் கருத்தியல் ரீதியாக தயார் செய்தார். எந்த சமூகப் பிரச்சினையாக இருப்பினும், அதை முதலில் விரிவாகக் கற்று, பிறர் கருத்துகளைப் பொறுமையுடன் கேட்டு, அது தொடர்பான கருத்தரங்குகளில் பங்கேற்று, விவாதித்து, இறுதியாக அதுகுறித்து ஆக்கப்பூர்வமான முறையில் பங்கேற்பதை - அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செய்தவர்தான் செழியன். அவர், ஒரு குழுவாக இயங்குவதில் ஆர்வம் கொண்டிருந்தாலும், 'குழு அரசியலு'க்குத் தன்னை ஒருபோதும் ஆட்படுத்திக் கொண்டதில்லை.



இரங்கல் கூட்டத்தில் பங்கேற்றோர்

அம்பேத்கர் 'கற்பி' என்றார். அது முதலில் தன்னை சிந்தனை ரீதியாக கற்பித்துக் கொண்டு, அடுத்து தமது குடும்பத்தினரிடம் சிந்தனைத் தாக்கத்தை ஏற்படுத்துவது என்பதுதான் அடிப்படை. இன்றளவும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போர் செய்ய மறக்கும் பணி இது. இதில் செழியனின் பாணி தனித் தன்மையானது. அவர் தான் எடுத்துக் கொண்ட எந்த சமூகப் பிரச்சினையாக இருந்தாலும், அதைத் தமது குடும்பத்தினரிடம் விவாதித்து - அவர்களை முதலில் பயிற்றுவிப்பதற்குத் தவறியதே இல்லை. சமூக ஆர்வலர்கள் பலரும் தங்களுடைய சாதி அடையாளத்தை ஏதாவது ஒரு சூழலில் வெளிப்படுத்திக் கொள்கின்றனர். ஆனால், செழியன் தன்னுடைய சாதி அடையாளத்தை இறுதிவரை எங்கும் வெளிப்படுத்திக் கொண்டதே இல்லை. பெரியாருடைய கடவுள் மறுப்பு, சாதி மறுப்புக் கொள்கையை, எவ்வித விளம்பரமுமின்றி தன் குடும்ப அளவில் மெய்ப்பித்தவர். தமக்கும், தமது உடன்பிறப்புகளுக்கும் அவர் நடத்தியது அனைத்தும் சாதி மறுப்புத் திருமணங்கள்தான். சாதி ரீதியாக மக்களை அணிதிரட்டுவதுதான் எதார்த்தம் என்ற கற்பிதங்களை எல்லாம் மூர்க்கமாக எதிர்த்தவர்; அத்தகையோரிடம் பழக மறுத்தவர்.

பெரிய இயக்கங்கள், அமைப்புகள், நிறுவனங்களுடன் இணைந்து பொதுப் பிரச்சனைகளுக்காக சில தருணங்களில் பணியாற்றினாலும், அவர் ஒருபோதும் தன்னை முன்னிறுத்திக் கொண்டதில்லை. தன்னெழுச்சியாக வரும் இளைஞர்களை, அவர்களின் சிறு செயல்பாடுகளையும் ஆதரித்து, ஊக்கப்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். மேடை உரைவீச்சுகளின் மீது அவருக்கு நம்பிக்கை இருந்ததில்லை. குழு விவாதங்கள் மூலமே தீவிர செயல்பாட்டாளர்களை - கருத்தியல் ரீதியாக உருவாக்க முடியும் என்று உறுதியாக நம்பினார்; செயல்படுத்தினார். செழியன் ஒரு தொலைநோக்குச் சிந்தனையாளர். 'பூவுலகின் நண்பர்கள்' - அவர் செயல்பாட்டினால் ஈர்க்கப்பட்டதன் விளைவு, இன்று தமிழகமெங்கும் 500-க்கும் மேற்பட்ட 'நண்பர்கள்' உருவாகியுள்ளனர். பலரும் பல தளங்களிலும் இயங்கி வருகின்றனர் - சமூக மனிதர்களாக. அவர் உருவாக்கிய பூவுலகின் நண்பர்கள், சுற்றுப்புறச் சூழலுக்கு மட்டும் நண்பர்கள் அல்ல; மனித உரிமை, சமூக நீதி, சாதி ஒழிப்பு போன்றவற்றின் நண்பர்கள்!

கடந்த மூன்றாண்டுகளாகத்தான் அவர் 'டாக்டர் அம்பேத்கர் மய்ய'த்தின் அறங்காவலராக இருந்தார். இருப்பினும், கடந்த பத்தாண்டுகளில் 'தலித் முரசு' வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு அளவிட முடியாதது. குறிப்பாக, 'தலித் முரசி'ல் 'மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கும் இதழ்கள்' என்ற தலைப்பில் எழுதிய தொடர், மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அவருடைய நினைவாக இத்தொடரை 'தலித் முரசு' ஒரு நூலாக வெளியிட உள்ளது. மலேசியாவில் இருந்து செயல்படும் 'பூவுலகின் நண்பர்கள்' - அவரது நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் 'செழியன் பெயரில் விருது' ஒன்றை அளிக்க முடிவு செய்துள்ளனர்.

**“ தமிழ்ச் சமூகத்தில், சாதி ரீதியாக இயங்குபவர்களே மலிவாகிப் போனதொரு சூழலில், தன்னை சாதியற்றவராக மாற்றிக் கொண்டு, சமூக மாற்றத்திற்காக இறுதிவரை போராடியவர்தான் செழியன். ”**

நெடுஞ்செழியனை நினைவு கூர்வது என்பது, அவர் விட்டுச் சென்ற பணிகளை முன்னெப்போதைக் காட்டிலும் உத்வேகத்துடனும், தொய்வின்றியும் எடுத்துச் செல்வதுதான். மனித உரிமைகளுடன் கூடிய, சூழல் கேடுகள் அற்ற ஒரு சமூகத்தையே அவர் பூவுலகாகப் போற்றினார். ●

– பூவுலகின் நண்பர்கள்



படிப்பகம்

www.padippakam.com

## அண்ணல் அம்பேத்கர் வெளியிட்ட

# தேர்தல் அறிக்கை

**வாக்களிப்பதற்கு முன் சிந்திக்க வேண்டும் என்று எண்ணும் - இந்தியாவின் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும். தன் நலனைவிட, பொது நலனே முக்கியம் என்பதை நம்பும் - இந்தியாவின் அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும்.**

**பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு (Scheduled Castes Federation), பட்டியல் சாதியினருக்காக நிறுவப்பட்ட அகில இந்திய அரசியல் கட்சியாகும். இனிவரும் பக்கங்களில் அதன் கோட்பாடுகள், கொள்கை, செயல் திட்டங்கள், பிற அரசியல் கட்சிகளுடனான ஒருங்கிணைப்பு குறித்த அடிப்படைகள் ஆகியவற்றை விளக்க முற்பட்டிருக்கிறோம்.**

### கட்சியின் கோட்பாடுகள்

1. பொது செயல் முறைகளில் கட்சியின் செயல்பாடுகள், கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் அமையும் :

(i) சட்டத்தின் முன் இந்தியர்கள் அனைவரையும் சமமெனக் கருதுவதோடு, அனைவருக்கும் சம உரிமை உண்டு என்பதும், அப்படி சம உரிமை இல்லாத இடங்களில் அதனை செயல்படுத்தி, அது மறுக்கப்படும் இடங்களில் அதனை வலியுறுத்தும்.

(ii) ஒவ்வொரு இந்தியனுக்கும் தான் விருப்பப்பட்ட முறையில் தன் வளர்ச்சிக்கான வழிகளைத் தேடிக் கொள்ளும் உரிமை உண்டு என்பதையும், அரசு என்பது, அதற்கு உதவியளிக்கும் ஓர் எந்திரம் மட்டுமே என்பதையும் ஏற்றுக் கொள்கிறது.



(iii) ஒவ்வொரு இந்தியனுக்கும், மத, பொருளாதார, அரசியல் சுதந்திரம் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில், அந்த சுதந்திரமானது எவ்வகையிலும் நாட்டில் இருக்கும் பிற இந்தியர்களுக்குத் தீங்கு இழைக்காதவாறு இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

(iv) அனைத்து இந்தியர்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதே வேளையில், கடந்த காலத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

(v) ஒவ்வொரு இந்தியனையும் தேவை மற்றும் அச்சம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு வாழ வைப்பது, அரசின் கடமை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

(vi) சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவை நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு, மனிதனை மனிதன், ஒரு வகுப்பினரை மற்றொரு வகுப்பினர், ஒரு இனத்தவரை மற்றொரு இனத்தவர் சுரண்டும் - ஒடுக்கும் நிலையை மாற்றுவதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபடும்.

(vii) நாடாளுமன்ற ஆட்சி முறையே, நாட்டின் நலனுக்கும், தனி மனித நலனுக்கும் உகந்தது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

2. மேற்சொன்ன கோட்பாடுகளின் தேவையையும், நேர்மையையும் அறிந்து கொள்ள - இரண்டு அடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, இக்கோட்பாடுகள் கூட்டமைப்பின் கோட்பாடாக இருப்பினும், இந்தியாவில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்கு மானதாகும். அதன் அடிப்படையில், கூட்டமைப்பை, ஒரு சாதி அமைப்பென குற்றம் சாட்ட முடியாது. கூட்டமைப்பு, எல்லோரும் பங்கேற்பதாக இல்லாது இருக்கலாம்; ஆனால், அனைவருக்கும் பணியாற்ற, ஒருங்கிணைவதற்குத் தகுதியுடைய அனைவருடனும் ஒருங்கிணைந்து செயல்படக் கூடியதே.

3. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் கோட்பாடுகளில் புதிதாக ஒன்றும் இல்லாது இருக்கலாம். பெரும்பாலான அரசியல் கட்சிகளின் அறிக்கைகளில் அவை இருக்கலாம். ஆனால், பிற அரசியல் கட்சிகளிடமிருந்து கூட்டமைப்பை வேறுபடுத்திக் காட்டக் கூடிய இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, கூட்டமைப்பின் கோட்பாடுகள் அரசியல் தளத்தில் மதிப்புடையவர்களாகக் காட்டிக் கொள்வதற்காகவோ, வாக்காளர்களை ஏமாற்றுவதற்காகவோ கடைப்பிடிக்கப்படுபவை அல்ல. அவை கூட்டமைப்பிற்கு இயற்கையானவை. பட்டியல் இனங்களின் சமூக நிலையின் அடிப்படையில் எழுந்தவை. இக்கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காமல், அவற்றை உயர்த்திப் பிடிக்காமல், கூட்டமைப்பு செயல்பட இயலாது. இக்கோட்பாடுகள், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் வாழ்வியல் ஆதாரமாகும். இது, எவ்வகை அரசியல் நம்பிக்கையின் குறியீடும் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

உள்ளார்ந்த அனுபவங்களின் வெளிப்படையான பதிவாகும். பல கட்சிகளும் இவற்றைக் கடைப்பிடிக்கலாம். ஆனால், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு அளவிற்கு - இக்கோட்பாடுகளுக்கு உண்மையாக வேறு எவரும் இருக்க முடியாது. இது தான் கூட்டமைப்பின் கோட்பாடுகளை, தரத்தைப் புரிந்து கொள்வதற்கான இரண்டாவது அடிப்படையாகும்.



### கட்சியின் கொள்கை

4. மேற்சொன்ன கோட்பாடுகளை செயல்படுத்துவதே கட்சியின் கொள்கையாகும். கட்சியின் கொள்கை - கம்யூனிசம், சோசியலிசம், காந்தியம் அல்லது எந்த 'இசத்'தின் அடிப்படையிலோ, அவை போன்ற எவ்விதத் தத்துவத்தின் அடிப்படையிலோ உருவாக்கப்பட்டது அல்ல. மக்களின சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ள கட்சி தயாராக இருக்கும். கட்சியின் அணுகுமுறை அறிவுப்பூர்வமாகவும், நவீனமாகவும், தத்துவங்களின் அடிப்படையில் இல்லாமல், அனுபவங்களின் அடிப்படையில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

### கட்சியின் செயல் திட்டங்கள்

I பழைய பிரச்சினைகள்

5. இந்தியாவில் உள்ள எந்த அரசியல் கட்சியின்செயல்திட்டங்களும், ஆங்கிலேயர் விட்டுச் சென்றவற்றின் அடிப்படையிலேயே இருக்க முடியும். ஆங்கிலேயர் விட்டுச் சென்றவற்றில் நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு. நல்லவற்றில் கீழ்காண்பவற்றை எடுத்துக் கொள்ளலாம். (1) பொதுவான சட்டம் (2) பொதுவான நீதி (3) பொதுவான நிர்வாகம். தீயவற்றில் கீழ்காண்பவற்றைக் கூறலாம் (1) நாட்டு மக்களிடையே பழங்கால சமூக முறையை நிலவச் செய்வது (2) முற்படுத்தப்பட்ட வகுப்பினரே கல்வி மற்றும் வேலை வாய்ப்பு - ராணுவம் மற்றும் பொதுப் பணி ஆகியவற்றில் முன்னுரிமை பெற்றிருப்பது. (3) பிற்படுத்தப்பட்ட, தீண்டத்தகாத மற்றும் பழங்குடியினரை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பது (4) நாட்டை ஏழ்மை நிலையில் வைத்திருப்பது.

### (அ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை உயர்த்தும் பிரச்சினை

6. பிற்படுத்தப்பட்ட, தீண்டத்தகாத, பழங்குடி மக்களை கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் உயர்த்த - பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு பாடுபடும். இதுவே கூட்டமைப்பின் செயல் திட்டங்களில் முதன்மையானதாகவும், அடிப்படையானதாகவும் கருதப்படும். எவ்வகையான தாமதமோ, பொருளாதார சிக்கல்களோ, இந்த செயல் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தடையாவதை, கூட்டமைப்பு ஒருபோதும் அனுமதிக்காது. இவ்வகுப்பினருக்கான கல்வி எனும்போது, கூட்டமைப்பின் மனதில் இருப்பது வெறும் தொடக்கக் கல்வியோ, உயர்நிலைக் கல்வியோ அல்ல. அதன் மனதில் இருப்பது, இந்நாட்டிலும் வெளியிலும் இருக்கக்கூடிய மிக உயர்ந்த கல்வியாகும். அக்கல்வியானது, அம்மக்களை நிர்வாகப் பொறுப்பேற்கும் தகுதி பெற உதவக் கூடியதாக இருக்க வேண்டும்.

அதைப்போலவே வேலைவாய்ப்பில், ராணுவம் மற்றும் பொது வேலைவாய்ப்புகளில் தங்களுக்கான இடங்களைத் தாங்களே பெறும் நிலை வரும் வரை, இம்மக்களுக்கு இடஒதுக்கீட்டை பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு வலியுறுத்தும். தற்போது கட்டுப்பாடற்ற இனப் பாகுபாடு, நாட்டில் உள்ள பொது மற்றும் ராணுவ வேலை வாய்ப்பில் முற்படுத்தப்பட்ட சாதியினரால் செயல்படுத்தப்படுகிறது. இத்தகு வேலைகள், சில குறிப்பிட்ட சமூகங்களின் தனிப்பட்ட ஆதிக்கத்தில் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கான பங்கைக் கேட்டு, இந்த ஆதிக்கத்தைத் தகர்க்க முற்படும்போது, அவர்கள் சாதி வெறியர்களாக முத்திரை குத்தப்படுகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் இந்நாட்டின் நடவடிக்கைகளில் தங்களுக்கு உரிய இடத்தைப் பெறுவதற்கான உரிமைக்குத் தடையாக இருக்கும் இத்தகு திரிக்கப்பட்ட அடிப்படைகளை, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு எவ்வகையிலும் அனுமதிக்காது.

> பிற்படுத்தப்பட்ட, தீண்டத்தகாத, பழங்குடி மக்களை கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உயர்த்த - 'பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு' பாடுபடும். இதுவே கூட்டமைப்பின் செயல் திட்டங்களில் முதன்மையானதாகவும், அடிப்படையானதாகவும் கருதப்படும்.

7. இந்நாட்டில் முற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடையிலான இடைவெளி மிகப் பெரியதாக இருப்பதாக பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு நம்புகிறது. இந்த இடைவெளியானது, அம்மக்களிடையே ஒரு பகைமை உணர்வை ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. 1948 ஆம் ஆண்டு திரு. காந்தி கொல்லப்பட்ட போது, இந்தியாவின் சில பகுதிகளில் முற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திய கொலைகள், கொள்ளைகள் ஆகியவை இந்தப் பகைமை உணர்வு, எந்த அளவுக்கு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதைக்



படிப்பகம்

www.padippakam.com



அம்பேத்கருடன் மகாராட்டிர கவர்னர் மங்கள்தாஸ் பக்வாசா, ராவ் பகதூர் போலே மற்றும் பேரா. வி.ஜி. ராவ்

காட்டியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயர் கல்வி அளித்து, வேலைவாய்ப்பிற்கான கதவுகளை அவர்களுக்குத் திறந்துவிடுவதே - இந்தச் சிக்கலுக்கான ஒரே தீர்வாகவும், இந்தப் பகைமை உணர்வைப் போக்கக் கூடியதாகவும் இருக்குமென பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு கருதுகிறது. முற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரிடையே நிலவும் பிறப்பு அடிப்படையிலான இந்த செயற்கை வேறுபாடு, விரைவில் ஒழிய வேண்டும். ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களை கல்வி அடிப்படையில், முற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாக உயர்த்தாமல் - இந்த வேறுபாட்டை ஒழிக்க முடியாது.

### ஆ. வறுமை குறித்த பிரச்சினை

8. இந்தியாவின் பொருளாதார நிலை, திட்டக் குழுவால் மிக உண்மையாக விவரிக்கப்பட்டிருக்கிறது :

(i) இந்தியாவின் மக்கள் தொகை (ஜம்மு - காஷ்மீர் நீங்கலாக) 1901இல் 23 கோடியே 55 லட்சமாக இருந்தது. 1951இல் 35 கோடியே 65 லட்சமாக உள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் ஏறத்தாழ 52 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. முதல் இருபது ஆண்டுகளில் வளரச்சி விகிதம் குறைவாகவே இருந்தது. ஆனால், பிறகு உயர்ந்துள்ளது. 1921 - 1931இல் 14.3 சதவிகிதமாகவும் 1941-51இல் 13.4 சதவிகிதமாகவும் இருந்தது.

(ii) தொழில் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருந்தபோதும், மக்களின் தொழில் அமைப்பில் குறைந்த அளவு மாற்றமே இருந்தது. 1911இல் ஏறத்தாழ 72 சதவிகிதம் உழைக்கும் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். 1948இல் தேசிய வருமான குழு, இதை 68.2 சதவிகிதமெனக் கூறியது. விவசாயத் தொழிலில் வேலைவாய்ப்பு, ஆண்டின் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே சாத்தியமானது. அதனால் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலான தொழிலாளர்கள், ஆண்டின் எஞ்சிய பகுதியில் வேலையற்றவர்களாகவே உள்ளனர். ஆகையால், நாட்டில் மிக மோசமான வேலை குறைவு சிக்கல் உள்ளது.

(iii) தனி மனிதனுக்கான விதைக்கப்பட்ட நிலத்தின் அளவு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்திருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், 1911-12 இல் 0.88 ஏக்கராக இருந்தது, 1941-42 இல் 0.72 ஆக வீழ்ச்சியடைந்தது. 1948இல் அதாவது, பிரிவினைக்குப் பிறகு இந்தியாவின் தனிமனித விதை நிலத்தின் அளவு 0.71 ஆக இருந்தது. ஒரு ஏக்கருக்கான விளைச்சலின் அளவு தெளிவாக இல்லை. கிடைத்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் பார்த்தால், சில உணவு தானியங்களைப் பொருத்தவரையில், விளைச்சல் விகிதம் இறங்குமுகமாகவே இருக்கிறது. விவசாயத்தின் ஒட்டுமொத்த விளைச்சல் விகிதத்தைக் கணிப்பது கடினம் என்றபோதும், இருக்கிற நிலையை வைத்துப் பார்க்கையில், ஒரு தேக்க நிலை இருப்பதைக் காண முடிகிறது.

9. ஆக, வறுமை குறித்த பிரச்சினை என்பது, இரு முனைச் சிக்கலாகும். ஒரு பக்கம் அது விவசாயம் மற்றும் தொழில் துறையில் அதிக உற்பத்தியினால் ஏற்படும் சிக்கலாகும். மறுபுறம், அதிகளவு மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் சிக்கலாகும். இரு புறமும் சம அளவில் முக்கியமானவையே. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, வறுமைக்கு எதிராக இந்த இருபுறங்களிலிருந்தும் போராடும்.

10. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க, மக்களிடையே குடும்பக் கட்டுப்பாட்டு முறையைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. குடும்பக் கட்டுப்பாடு சுகாதார நிலையங்களை, நாட்டின் பல பகுதிகளிலும் பெருமளவு திறக்க வேண்டுமென அறிவுறுத்துகிறது. மக்கள் தொகை பெருக்க விகிதம் மிக வேகமாக வளர்வது பெரும் தீங்கானது என்பதும், அதனால் அதனைக் கட்டுப்படுத்த மிகத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்துகிறது.

11. உற்பத்தியை அதிகரிக்க பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு, எத்தகைய தத்துவத்தையோ அல்லது வடிவத்தையோ,

> இந்நாட்டு மக்களின் கடுமையான வறுமைச் சூழலைப் பார்க்கும்போது, மேலும் உற்பத்தி, மென்மேலும் உற்பத்தி என்பதே அதற்கானத் தீர்வாக இருக்க முடியும். உற்பத்திக்கான எந்தத் திட்டமும், உழைக்கும் வர்க்கத்தினரை எந்த வகையிலும் சுரண்டுவதாக இருந்துவிடக் கூடாது என்பதற்கே - பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு முக்கியத்துவம் அளிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

பின்பற்றாது. தொழில் துறைக்கான வடிவம் என்பது, காலநிலையையும் சூழலையும் பொறுத்து அமையும். தேசியமயமாக்கல் அவசியமாகவும் சாத்தியமாகவும் இருக்கும் சூழலில், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு அதனை ஆதரிக்கும். இந்நாட்டு மக்களின் கடுமையான வறுமைச் சூழலைப் பார்க்கும்போது, மேலும் உற்பத்தி, மென்மேலும் உற்பத்தி என்பதே அதற்கானத் தீர்வாக இருக்க முடியும். முன்பே தீர்மானிக்கப்பட்ட தொழில் வடிவம் என்பது, சரியான தீர்வாக இருக்க முடியாது. வறுமைக்கான மாற்று உற்பத்தியைப் பெருக்குவதே அன்றி, உற்பத்தி வடிவமைப்பில் இல்லை. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு எப்படியும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். உற்பத்திக்கான எந்தத் திட்டமும், உழைக்கும் வர்க்கத்தினரை எந்த வகையிலும் சுரண்டுவதாக இருந்துவிடக் கூடாது என்பதற்கே பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு முக்கியத்துவம் அளிக்கிறது.

12. அதிவேகத் தொழில் வளர்ச்சி நாட்டிற்கு அவசியம் என்பதே கூட்டமைப்பின் கருத்தாக இருந்த போதும், இந்தியாவின் பொருளாதாரத்திற்கு விவசாயமே அடிப்படையாக இருக்க முடியும். உற்பத்தி வளர்ச்சிக்கான எந்தத் திட்டமும் இந்திய விவசாய சீரமைப்பைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டால், அது ஏமாற்றத்திலேயே முடியும்.

13. விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு, கீழ்க்காணும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமெனக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது :

(i) விவசாயம் எந்திரமயமாக்கப்பட வேண்டும். பழங்கால முறைகளையே பயன்படுத்தும் வரையில், இந்திய விவசாயம் செழிக்கப் போவது இல்லை.

(ii) எந்திரமயமாக்கலை நடைமுறைப்படுத்த, சிறு விவசாய நிலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, பெரிய பண்ணைகளாக மாற்றப்பட வேண்டும்.

(iii) விளைச்சலைப் பெருக்க, தேவையான உரங்களும், தரமான விதைகளும் வழங்கப்பட வேண்டும்.

14. ஒரு சாதாரண விவசாயிக்கு இத்திட்டத்தை ஏற்று செயல்படுத்துவது, இயலாத செயலாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான பொருளாதாரம் அவர்களிடம் இருக்க முடியாது. இத்திட்டத்தை அரசு ஏற்று செயல்படுத்த வேண்டுமென, பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு நம்புகிறது. இத்திட்டத்தின் முதல் குறிப்பு அரசின் பொறுப்பாகும். விவசாயிகளுக்கு நவீன எந்திரங்களை அரசே வாடகைக்கு அளிக்க வேண்டும். நில வரியோடு அவ்வாடகையை கட்டும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

| | |
|---|---|
| மொத்த நிலப்பரப்பு | 81 கோடியே 10 லட்சம் |
| மொத்த விவசாய நிலம் | 57 கோடியே 70 லட்சம் |
| மொத்த காடு பகுதி | 8 கோடியே 40 லட்சம் |
| விவசாயத்திற்கு ஏற்ற தரிசு நிலம் | 9 கோடியே 30 லட்சம் |
| விவசாயத்திற்குப் பயன்படாத தரிசு நிலம் | 9 கோடியே 30 லட்சம் |
| உழுது பயிர் செய்யப்படாத நிலம் | 6 கோடியே 20 லட்சம் |
| நிகர விவசாய நிலம் | 24 கோடியே 40 லட்சம் |

**இக்கோட்பாடுகள் கூட்டமைப்பின் கோட்பாடாக இருப்பினும், இது இந்தியாவில் உள்ள அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்விற்குமானதாகும். அதன் அடிப்படையில் கூட்டமைப்பை, ஒரு சாதி அமைப்பெனக் குற்றம் சாட்ட முடியாது.**

15. சிறு விவசாய நிலங்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதால், பெரிய பண்ணைகளை உருவாக்குவது மிகவும் கடினமானதாகும். ஆனால், கூட்டுறவுப் பண்ணைகள் அல்லது கூட்டுப் பண்ணைகள் உருவாக்குவதன் மூலம் இச்சிக்கல் தீர்க்கப்பட வேண்டும்.

16. இந்தியா ஒரு விவசாய நாடாக இருந்த போதும், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பெருமளவில் இருக்கின்றனர். அவர்கள் மிக மோசமான வாழ்வியல் நிலையில், நில உடைமையாளர்களால் சுரண்டப்படுபவர்களாகவும் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் தீண்டத்தகாதவர்களாகவும், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவுமே உள்ளனர். இத்தகைய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், இத்தகு துன்பமான சூழலில் தவிக்க விடப்பட வேண்டிய அவசியம் இல்லை. இது, தீர்க்கப்படவே முடியாத பிரச்சனையும் அல்ல என்பதே மேலும் வருந்தத்தக்க செய்தியாகும். இதற்கு இந்தியாவில் இருக்கும் நிலங்கள் குறித்த இந்தத் தகவல் பயனுடையதாக இருக்கும் (பட்டியல் காண்க).

மேற்கண்ட புள்ளிவிவரத்திலிருந்து 9 கோடியே 30 லட்சம் ஏக்கர் நிலம், விவசாயத்திற்கு உகந்ததாக இருப்பினும், தரிசாக கிடப்பதையும், அவற்றையும் விவசாய நிலங்களாக மாற்ற இயலும் என்பதையும் காணலாம். நவீன அறிவியலைப் பயன்படுத்தி, இந்த நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவது முடியாத ஒன்றல்ல. பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு இக்கேள்வியை எழுப்புகிறது.

17. விவசாயிகளின் செழிப்பு, காடுகளைப் பராமரிப்பதில் இருக்கிறது. காடுகளின்றி தேவையான மழைக்கு உத்திரவாதமில்லை. இதனால் இந்தியாவில் விவசாயம் மழையை நம்பிய ஒரு சூதாட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இனியும் இப்படியே இருக்கும். விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைக் காடுகளாக்க வேண்டும் எனக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

18. விவசாயம், ஒரு குறுகிய நோக்கில் லாபம் ஈட்டக்கூடிய தொழில் அன்று. அவற்றிற்குத் துணையாக குடிசைத் தொழில்கள் இருக்க வேண்டும். ஆனால், எந்த குடிசைத் தொழிலுக்கும் அடிப்படைத் தேவை மின்சாரம். ஆகவே, மின்சார உற்பத்தி நாட்டின் வளத்திற்கு மிக அடிப்படைத் தேவையான ஒன்றாகும் என பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு கருதுகிறது. எனவே, பாசனத்திற்கும், மின்சார உற்பத்திக்கும், வெள்ளங்களைத் தடுக்கவும் பயன்படும் ஆற்றுப்படுகைத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு பாடுபடும்.

19. நிலங்கள் புறக்கணிக்கப்பட்டது போன்றே நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களும் புறக்கணிக்கப்படுகின்றனர். பயிர் செய்யப்படாத நிலங்களில் ஒரு பகுதியை நிலமற்ற தொழிலாளர்களுக்காக கூட்டமைப்பு பதிவு செய்யும். ●

தமிழில் : பூங்குழலி

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

சென்ற இதழில் வெளிவந்த டாக்டர் கே. பாலகோபால் அவர்களுடைய நேர்காணல், இவ்விதழிலும் இடம் பெறுகிறது


**மக்கள் யுத்தக் குழுவுக்கும், அரசுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கும், இதற்கு முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?**

தற்பொழுதுள்ள நிலையில் சி.பி.அய். (மாவோயிஸ்ட்)- க்கும், ஆந்திரப் பிரதேச அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஏறக்குறைய முடிவுக்கு வந்துவிட்டது. தெலுங்கு தேசம் ஆட்சியில் இருந்தபோது, பேச்சுவார்த்தை நடந்ததாகச் சொல்லப் பட்டாலும், அதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படவில்லை. ஏனெனில், பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பே ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று சந்திரபாபு (நாயுடு) வலியுறுத்தினார். இது, முற்றிலும் நடைமுறைச் சாத்தியமற்ற முன்நிபந்தனையாகும். ஏனெனில், நக்சலைட்டுகள் பொது நீரோட்டத்திற்கு வர விரும்புகிறார்கள் என்பதும், அதற்கு ஒரு மதிப்புமிக்க வழியை எதிர்பார்த்து நிற்கிறார்கள் என்பதும் யாரும் நம்பக் கூடியதாக இல்லை. அவர்கள் அப்போதும் சரி, இப்போதும் சரி, ஆயுதப் போராட்டத்தைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

புரட்சிகரப் போராட்டத்திற்கும், அதற்கெதிரான அரசின் கொடூரத் தாக்குதலுக்கும் இடையே சிக்கித் தவிக்கும் பொது மக்களின் நிலையிலிருந்துதான் - அனுபவம் மிக்க பொது நல ஆர்வலர்களைக் கொண்ட - 'அக்கறையுள்ள குடிமக்களின் குழு', விவாதத் திற்குரிய இப்பேச்சுவார்த்தையை முன்வைத்தது. இப்பேச்சுவார்த்தைகூட, காங்கிரஸ் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு ராஜசேகர (ரெட்டி), தொடக்க நிலையில் எந்த முன்நிபந்தனை களையும் வைக்காததால்தான் நடைபெற்றது. காங்கிரஸ் அரசு, நக்சலைட்டுகளுடன் முன்நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது. நக்சலைட்டுகளும் தங்கள் சார்பில் இத்தகையதொரு போர் நிறுத்தத்தை ஏற்று, பேச்சுவார்த்தைக்கென எந்த முன்நிபந்தனை களையும் விதிக்கவில்லை. விவாதத்திற்குரிய ஒரே பொருள் என்னவெனில், பேச்சு வார்த்தை காலங்களில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியை அளித் திருக்கும் நக்சலைட்டுகள், ஆயுதங்களுடன் வருவார்களா, இல்லையா என்பதே. மாவோயிஸ்டுகள் குறைந்தபட்ச அளவில்கூட ஆயுதங்களைக் கீழே வைக்க முடியாது என்பதை வலியுறுத்தினர்.

> ‘அரசியல் அதிகாரப் போட்டியில் முதல் பலி சமூக மாற்றத்திற்கானப் போராட்டமே’

ஆனால், ஆயுதப் போராட்டத்தையே அவர்கள் கைவிட வேண்டும் என்று முன் நிபந்தனையிடும் அரசு, பேச்சுவார்த்தை மற்றும் போர் நிறுத்த காலங்களில் அவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதை விரும்ப வில்லை. நாங்கள் ஆயுதமேந்தத் தவறினால், எதிரிகளால் தாக்கப்படுவோம் என்று மாவோயிஸ்டுகள் அச்சப்பட்டிருந்தால், அரசு அவர்கள் தங்கள் தற்காப்புக்காக ஆயுதங்களை வைத்துக் கொள்ளலாம் என்று அதிகாரப்பூர்வமற்ற முறையில் ஒப்புக் கொண்டிருக்கும். ஆனால், மாவோயிஸ்டு களின் ஆட்சேபனை வெறும் அடையாளத்திற்காக மட்டுமே சொல்லப்பட்டதாக இருந்தது. இத்தகைய தொரு அணுகுமுறை, பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருந்திருக்க வேண்டியதில்லை.பேச்சுவார்த்தைக்கான தேவையை மாவோயிஸ்டுகளோ, அரசோ மிக உறுதி யாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. நக்சலைட்டு கள் நடமாட்டம் இருக்கும் பகுதிகளில் உள்ள ஆளும் கட்சியினர்தான், பேச்சு வார்த்தை நடை பெற வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தனர்.



இருப்பினும், கடந்த கால நிகழ்வு களுக்கு எதிராக, ராஜசேகர (ரெட்டி) மிகவும் தந்திரமாக நடந்து கொண்டார். இப்பிரச்சினையில் இவருக்கு முன் பிருந்த சந்திரபாபு (நாயுடு)வின் கருத்தையே கொண்டிருந்த இவர்,



படிப்பகம்

www.padippakam.com

தான் அளித்திருந்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினார். எனவே, இப்பிரச்சனையில் அவர் எதையும் சொல்லாமல், அவருடைய உள்துறை அமைச்சரே எல்லா பேச்சுவார்த்தையிலும் முன்னின்று நடத்துமாறு பார்த்துக் கொண்டார். எந்தவொரு நோக்கமுமற்ற முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையை, ஊடகங்கள் மட்டுமே முக்கியச் செய்தியாக்கின. ஆனால், சந்திரபாபு (நாயுடு) எழுப்பிய அதே சந்தேகங்களைத்தான் ராஜசேகர (ரெட்டி)யும் எழுப்பினார்: சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு, சட்டத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் போராளிகளுடன் - அவர்கள் ஆயுதத்தைக் கீழே போடாத நிலையில் - எப்படிப் பேச்சுவார்த்தை நடத்த முடியும்? அதே நேரத்தில், இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கவும் காவல் துறைக்கு அனுமதியளித்து, 'என்கவுண்டர்' மரணத்தையும் நடத்தத் தொடங்கினார். அதற்குப் பிறகு, பேச்சுவார்த்தைகளுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

**பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து, மாவோயிஸ்ட் கட்சி மீண்டும் தடை செய்யப்பட்டு விட்டது. இனி என்ன நடக்கும் என்று நினைக்கின்றீர்கள்?**

முன்னெப்போதைக் காட்டிலும், தற்பொழுது நிலவும் சூழல் மிகவும் ஆபத்தானது. மாவோயிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது, கவலைக்குரிய செய்தி அல்ல. ஏனெனில், 1992 லிருந்து 2004 வரை அது தடை செய்யப்பட்டிருந்தது. மக்கள் எழுச்சியை முடக்குவதற்கான கொடூர வழிமுறைகள் இல்லாவிடில் - அனுதாபிகளுக்கும், மாவோயிஸ்டு உறுப்பினர்களுக்கும் பெரிய அளவில் நேரடியான பாதிப்பு இருந்திருக்காது. ஆனால், மக்கள் எழுச்சியை முடக்குவதற்கான இந்தப் புதுவித வழிமுறைகள் தான் கவலையை ஏற்படுத்துகின்றன.

இதனால்தான் பெயரே தெரியாத சில குழுக்கள் தங்களை 'டைகர்', 'கோப்ரா' என்று சித்தரித்துக் கொண்டு, மக்கள் அமைப்புகளின் தொண்டர்களைத் தாக்கி வருகின்றனர். மாவோயிஸ்டுகளுக்கு நெருக்கமாக உள்ள ஜனநாயக சக்திகளை வெளிப்படையாகவே கொன்று வருகின்றனர். தெலுங்கு தேசம் கட்சி ஆட்சியில் இருந்தபோது, ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் குழுவைச் சேர்ந்த புருஷோத்தம் மற்றும் முகமது ஆசாம் அலி என்ற இரண்டு சிவில் உரிமைப் போராளிகளை, இந்த 'டைகர்'கள் முதலில் கொன்றனர் என்பது உண்மைதான். ஆனால், காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு, பல்வேறு 'கோப்ரா'க்கள் இதற்கு முன்பு இல்லாத வகையில் பரவலாக செயல்படத் தொடங்கி விட்டனர். அரசுக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததும், ஆறு மாதத்திற்குள்ளாகவே மிகப் பெருமளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாக இருக்கும் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் என யாராக இருந்தாலும், அவர்கள் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாக அல்லது மறைமுகமாக அரசு வன்முறைக்கு எதிராகப் பேசுகின்றவர்களாக இருந்தாலும் - இந்த அமைப்புகள் மிகக் கொடூரமாகக் கொன்றுள்ளன. பல்வேறு அமைப்புகளில் இருந்த தனிப்பட்ட போராளிகள் மட்டுமல்ல; ஒட்டுமொத்த அமைப்புகளுமே இத்தகைய முகமூடி கொலைகாரர்களைக் கண்டு, தங்கள் அமைப்பைக் கலைத்து விட்டனர். மனித உரிமை அமைப்பினர் மட்டுமே செயல்பட்டு வந்தனர். இதைச் சொல்லும் போதே, அப்படி நடந்துவிடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையும் ஏற்படுகிறது.

வன்முறையை அவர்களால் ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கேட்டால், மாவோயிஸ்ட் வன்முறையால் பாதிப்புக்குள்ளானவர்கள், அவர்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக தாங்களாகவே ஆயுதமேந்தியிருக்கலாம்; எப்படி (காவல்துறை) அவர்களால் மாவோயிஸ்ட்டு வன்முறையைக் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அதேபோல அவர்களால் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான வன்முறையையும் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறுகின்றனர். இத்தகைய கூலிப்பட்டாளங்களில் உள்ள சிலர், நக்சலைட்டுகளால் பாதிப்படைந்தவர்களாகவோ, இல்லாமலோ இருக்கலாம். ஆனால், எல்லோருமே அப்படிப்பட்டவர்கள் என்பதில் உண்மையில்லை. நம்முடைய சந்தேகம் என்னவெனில், பெரும்பான்மையான 'கோப்ரா'க்களும் 'டைகர்'களும் போலிஸ்காரர்கள் என்பதுதான். இன்னொரு

> **"புலே, அம்பேத்கர், பெரியார், ஆகியோரின் சிந்தனைகளில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், பார்ப்பனிய எதிர்ப்பு என்பதில் அவர்களுடைய வழிமுறை மிகச் சிறப்பாக இருந்தது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்."**



சந்தேகம், குற்றவாளிகளாக மாறிய முன்னாள் நக்சலைட்டுகள் சிலர், முன்னாள் தோழர்களுக்கு எதிராக, போலிஸ் பாதுகாப்புடன் செயல்படுகிறார்கள் என்பதும் உண்மையே. இத்தகைய போக்குகள், மிகவும் ஆபத்தானவை; இது பல்வேறு கொடிய வன்முறையாளர்களையே உருவாக்கும். காவல் துறைக்கு காட்டிக் கொடுப்பவர்களும், தங்களுடைய தனிப்பட்ட பாதுகாப்பு கருதி, இத்தகைய கொலைக் கூட்டங்களில் சேருகிறார்கள் என்றும் மாவோயிஸ்டுகள் கூறுகின்றனர்.

**ஒரு மனித உரிமைப் போராளியாக உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொண்ட தாக்குதல்கள் பற்றி சொல்லுங்கள்.**

மனித உரிமைகளுக்காக களப்பணியாற்றுவது, எப்போதுமே ஆபத்துகள் நிறைந்தது. 1985 ஜுன் மாதம்தான் நான் முதல் முறையாக 'அகில இந்திய வித்யார்த்தி பரிஷத்' ஆட்களால் வன்முறைக்கு ஆளானேன். கரிம்நகர் மாவட்டத்தில் உள்ள ஜக்டியல் என்ற பேருந்து நிலையத்தில், இரும்பு நாற்காலிகளாலும், ஹாக்கி மட்டைகளாலும் நான் தாக்கப்பட்டேன். இதற்குப் பழிவாங்கும் வகையில், அவர்களில் இருவர் நக்சலைட்டுகளால் கொல்லப்பட்டனர். ஆனால், இதற்கும் முன்னதாகவே 'ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கழக'த்தைச் சேர்ந்த கோபி ராஜண்ணா என்ற போராளி, சனவரி மாதம் இதே ஊரில் சங்பரிவார் கும்பலால் கொல்லப்பட்டார். அதற்குப் பிறகு அதே ஆண்டு, செப்டம்பர் 3 அன்று, ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக்கழகத்தின் துணைத்தலைவர் டாக்டர் ராமநாதம், வாரங்கல்லில் பட்டப் பகலிலேயே கொல்லப்பட்டார். இது, காஜிப்பட்டு என்ற இடத்தின் காவல் துணை கண்



படிப்பகம்

www.padippakam.com



காணிப்பாளரை, நக்சலைட்டுகள் (அப்போதைய மக்கள் யுத்தக் குழு) கொன்றதற்கானப் பழிவாங்கும் நடவடிக்கையாகும். நான் இந்த அமைப்பின் பொதுச்செயலாளராக இருந்தபோது, 7.12.91 அன்று வாரங்கல்லில் நாராபிரபாகர் (ரெட்டி) யும், 7.12.86 அன்று கரிம்நகர் மாவட்டத்தில் உள்ள அங்குனூரில் ஜபா லட்சுமணன் (ரெட்டி)யும் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவருமே ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கழகப் போராளிகளாவர்.

1989 இல், நான் கம்மம் அருகில் அய்தராபாத்தை நோக்கிப் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது கடத்தப்பட்டேன். நக்சலைட்டுகளால் கடத்தப்பட்ட காவலர்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, இரண்டு இரவுகள் கண் கட்டப்பட்டு பிணைக் கைதியாக நான் வைக்கப்பட்டிருந்தேன். 1991 ஆம் ஆண்டு கம்மம் மாவட்டம் கோதகுடம் என்ற இடத்தில் மீண்டும் போலிஸ் ஏற்பாடு செய்த கிரிமினல்களால் தாக்கப்பட்டேன். என் முகத்தில் கடுமையாகத் தாக்கினார்கள். டாக்டர் ராமநாதம் என்பவர் பெயரில், நினைவு மண்டபம் எழுப்புவதற்காக நான் சேகரித்த பணத்தையெல்லாம் அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள்.

**ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள தலித் இயக்கங்கள் பற்றி தங்களுடைய பார்வை என்ன?**

ஆந்திரப் பிரதேசத்தில் 1985 இல் எழுச்சியுடன் தோன்றிய தலித் இயக்கம்தான், பார்ப்பனியத்தின் மீதான முதல் தாக்குதலாகும். இம்மாநிலத்தின் பார்ப்பன எதிர்ப்பு இயக்கம், தமிழ் நாட்டைப் போல வலுவாக இல்லை. இங்கு அதற்கான இடத்தை கம்யூனிஸ்ட் இயக்கம் ஆக்கிரமித்துக் கொண்டது. அது சில வழிகளில் ஒரு பரந்த செயல் திட்டத்தைக் கொண்டிருப்பினும், பார்ப்பனியத்தை விமர்சிப்பதில் அது பலவீனமுடனேயே இருக்கிறது. ஒரு துடிப்பான பகுத்தறிவு நாத்திக இயக்கம் இருந்தாலும், அது சூத்திரர்களில் மேலடுக்கில் உள்ள சாதியினரால் நடத்தப்படுகிறது. எனவே, அது பார்ப்பனியத்தை எதிர்ப்பதில் சில எல்லைகளைக் கொண்டிருக்கிறது. 'கம்மா' மற்றும் 'ரெட்டி' சாதிகளைக் கொண்ட இவ்வியக்கம், கொள்கையளவில் வர்ணாசிரம தர்மக் கோட்பாட்டை விமர்சிக்கிறது. ஆனால், தங்களைப் பார்ப்பனர்களுக்கு ஏற்புடையவர்களாகவும், அதே நேரத்தில் சூத்திரர்களிலேயே ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு சமத்துவத்தை, உரிமைகளை மறுப்பவர்களாகவுமே உள்ளனர். பஞ்சமர்கள் என்று வந்துவிட்டால், இதைவிட மோசமாக நடந்து கொள்கின்றனர்.

இதற்கும் மேலாக, பகுத்தறிவு இயக்கத்தில் இருந்த கணிசமான பிரிவினர் மார்க்சிஸ்டுகளாக இருப்பது, பார்ப்பனியத்தை விமர்சிப்பதற்குத் தடையாக இருக்கிறது. மார்க்சியத்தின் கருதுகோள்களான அடித்தளம், மேல் கட்டுமானம், வர்க்கப் போராட்டம் போன்றவை, பார்ப்பனியத்தை எதிர்கொள்ளும் திறனற்றவையாக உள்ளன. பார்ப்பனியத்தை, அது முன்வைக்கும் வாழ்க்கை முறையை அதன் அளவிலேயே ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும். புலே, அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் சிந்தனைகளில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், பார்ப்பனிய எதிர்ப்பு என்பதில் அவர்களுடைய வழிமுறை மிகச் சிறப்பாக இருந்தது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

17.7.1985 அன்று கரம்சேடு என்ற இடத்தில் 'கம்மா' சாதியினரால் தலித் மக்கள் கொல்லப்பட்டபோதுதான் - 'ஆந்திரப் பிரதேச தலித் மகாசபா' என்ற தலித் இயக்கம் தோன்றியது. அதற்குப் பிறகுதான், ஒரு சிறு குழுவிற்குள் முடங்கியிருந்த அம்பேத்கரின் சிந்தனைகள், ஒரு மாபெரும் அரசியல் கொள்கையாக மாறியது. எண்பதுகளின் பிற்பகுதியில் மிகப் பிரபலமாக இருந்த 'தலித் மகாசபா', தொண்ணூறுகளின் தொடக்கம் வரை ஆற்றலுடனேயே செயல்பட்டது. தலித் மக்களின் அன்றாட நடைமுறைப் பிரச்சினைகளையொட்டி அவர்களை ஒருங்கிணைக்காததாலும், கொள்கைத் தளர்ச்சியினாலும் தான் - அது படிப்படியாக சரிவை சந்தித்தது. முற்போக்கு அமைப்புகளின் அடிப்படைகளைத் தகர்க்கும் பலவீனங்கள், தலித் அமைப்புகளையும் விட்டுவைக்கவில்லை என்பது வியப்புக்குரிய ஒன்றல்ல.

எல்லா முற்போக்கு இயக்கங்களைப் போலவே தலித் இயக்கத்திலும் ஊழல், சுயநலம், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினரைப்போல, எல்லா போராட்டங்களுக்கும் மத்தியில் சுகங்களை அனுபவிப்பது போன்றவையும் ஒரு காரணம். கொள்கை அளவில் அரசு அதிகாரம் என்ற மாயையின் பின்னால் தொடர்ந்து செல்வது, முக்கியத் தடையாக இருக்கிறது. தலித் சிந்தனையாளர்கள் தாழ்த்தப்பட்ட, மலைவாழ், பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களின் ஒருங்கிணைப்பை மீண்டும், மீண்டும் வலியுறுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்றுவிடலாம் என்று கணக்குப் போடுவது, மிகச் சாதாரணமாகிவிட்டது. இதனால் சமூக மாற்றத்திற்கானப் போராட்டம்தான் முதலில் பலியாகிறது. சீர்திருத்தம் அல்லது புரட்சி என்று எப்படி அழைத்தாலும் - அதுதான் புலே, பெரியார் மற்றும் அம்பேத்கர் காண விரும்பியதாகும். ●

*- பேட்டி அடுத்த இதழிலும்...*

நேர்காணல் : கோ. சுகுமாரன்

## வன்கொடுமையைப் பதிவு செய்!

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த கருங்கம்மாள் என்ற தலித் பெண்ணை, அக்கிராமத்தைச் சேர்ந்த முனியசாமி மற்றும் முத்து என்ற சாதி இந்துக்கள் 1.3.2006 அன்று பாலியல் வன்முறைக்கு ஆட்படுத்தியுள்ளனர். இவர்கள் வசிக்கும் ராமநாதசுவாமி நகரில் தலித் மக்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளுமில்லை. குறைந்தபட்சம் கழிப்பறைகூட இல்லாததால், அம்மக்கள் அருகில் இருக்கும் வேதனைகுழை தோப்பைத்தான் கழிப்பறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட, இதுவும் ஒரு காரணமாக இருக்கிறது. ராமேஸ்வரம் காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட கருங்கம்மாளே தனக்கு நேர்ந்த கொடுமைகளைப் பதிவு செய்தும் - முதல் தகவல் அறிக்கையில் உண்மைக்கு மாறான தகவல்கள் பதிவாகியுள்ளன. பாலியல் கொடுமை நடைபெற்ற 24 மணி நேரத்தில், மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட வேண்டும். ஆனால், ஒரு வாரத்திற்கும் மேலாக இதைச் செய்யாமல் காலத்தைக் கடத்தி வருகிறது காவல் துறை. இங்கு பாலியல் வன்கொடுமைகள் தொடர, காவலர்களின் மெத்தனப் போக்கே காரணம். முனியசாமி மட்டுமே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வழக்கை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யக் கோரியும், காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் - அருந்ததியர் கூட்டமைப்பினர் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

- பூமிநாதன்



படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கரின் ஆசான் புத்தர்

ஏபி. வள்ளிநாயகம்

விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும் 34

III

சித்தார்த்தர் சிறுவயதிலிருந்தே மனித நல வேட்கையும், அறிவுக்கூர்மையும் உடையவராக விளங்கினார். தனது எட்டாவது வயதிலேயே கணிதத்திலும், மற்ற படிப்பிலும் நல்ல தேர்ச்சி பெற்றவராகவும் திகழ்ந்தார். நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்; என் உற்றார் உறவினர்களும்; எல்லா மக்களும்; எல்லா உயிரினங்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதான எண்ணங்களை வெளியிட்டார். சிறுவயதிலேயே ஒரு சமூக மனிதருக்குரிய கருத்துகளைக் கொண்டிருந்தார். சாக்கியர்கள் 'வப்ரமங்கலம்' என்னும் உழுகுடித் திருநாளை கொண்டாடுவது வழக்கம். விவசாய இனக்குழுக்கள் விதை தெளிப்பு நாளில் கொண்டாடும் ஓர் எளிய கிராமியத் திருநாளாகும் அது. அந்த நாளில் ஒவ்வொரு சாக்கியரும் தாமே ஏர் உழுவது வழக்கம். சித்தார்த்தர் எப்பொழுதும் இந்த வழமையைப் பின்பற்றி ஏர் உழுவார். அவர் உடலுழைப்பை உன்னதமாகக் கருதினார்.



கிண்டலும் கேலியுமாய்ப் பேசுவதில் - பகடி பண்ணுவதில் சித்தார்த்தர் கெட்டிக்காரர். எவர் மனதும் புண்படாத வகையில், நகைச்சுவை உணர்வைக் கொட்டி வைத்த அவர், எவரையும் கவரக் கூடிய வகையில் தக்க சான்றுகள் காட்டி தர்க்கம் செய்யக்கூடியவராக, பகுத்தறிவுவாதியாக நினைந்து காணப்பட்டார். சித்தார்த்தர், மானுடத்தில் தன்னை அடையாளம் கண்டு கொண்டதோடு, தன்னுடைய வாழ்க்கையும் தேர்ந்த ஒரு முடிவு நோக்கிய தேடலே என்பதையும் அறிந்தவராக இருந்தார். இவ்வாறான சிந்தனையாளரான சித்தார்த்தருக்குத் தக்க வயதில் வாழ்க்கைத் துணை நலமானார் யசோதரை. தோழமையான இனிய காதல் வாழ்வின் அடையாளமாக ராகுலன் என்ற மகனும் பிறந்தார்.

அக்காலத்தில் சாக்கியர்களுக்கென 'சமூக உறவின் முறை' இயங்கி வந்தது. சித்தார்த்தர் தன் இருபதாவது வயதில் அதோடு இணைந்தார். சித்தார்த்தர் சமூக உறவின் முறையில் அங்கம் வகித்த எட்டாமாண்டில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. சாக்கியர்களுக்கும் கோலியர்களுக்குமிடையே - ரோகிணி ஆற்று நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் பிரச்சினையிருந்து வந்தது. இதனால் சாக்கியர்களுக்கும் கோலியர்களுக்குமிடையே ஆண்டுதோறும் வாக்குவாதங்களும் கை கலப்புகளும் ஏற்படுவதுண்டு. இம்முறை மோதல் முற்றியதால், சாக்கியர்கள் மூர்க்கர்களாக போர்ப்பிரகடனம் செய்தனர். சித்தார்த்தர் போரை எதிர்த்தார். மானுடத்தில் போர் எந்தவிதப் பிரச்சினையையும் தீர்ப்பதில்லை; அது மற்றொரு போருக்குதான் வழி வகுக்கும். மேலும், சாக்கியர்களும் கோலியர்களும் நெருங்கிய உறவினர்கள் ஆதலால், அவர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்வது அறிவுடைமை ஆகாது என்றார். ஆனால், போரில் உறவினர்கள் என்றோ மற்றவர்கள் என்றோ பாகுபடுத்திப் பார்க்க முடியாது என்றனர் சாக்கியர்கள்.

சித்தார்த்தரோ மீண்டும் 'பகைமையால் பகைமை ஒழியாது என்று அறிவதே நீதி' என்றார். ஆனால், மனித நியாயத்திற்கு சாக்கிய உறவின் முறையினர் துணை நிற்கவில்லை. மூர்க்கர்களின் போர்ப் பிரகடனத்திற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். சாக்கியர் உறவின் முறை கூடியது. சக மனிதர்களான கோலியர்கள் மீது போர்த் தொடுக்க, இருபதுக்கும் - அய்ம்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையோர் ஆயுதம் தரிக்க ஆயத்தப்படுத்தப்பட்டனர். சித்தார்த்தர் கூறினார் : ''நண்பர்களே! நீங்கள் விரும்பியதைச் செய்யலாம். உங்கள் பக்கம் பெரும்பான்மை உள்ளது. ஆனால், நான் உங்கள் படையில் சேர மாட்டேன்.'' சாக்கியர் உறவின் முறையின் முடிவை ஏற்காதவர்களுக்கு மூவகைத் தண்டனை உண்டு. நாடு கடத்

> "உயிர்க் கொலை புரியும் போரில் நான் பங்கேற்க மாட்டேன். இது குற்றமென்று சாக்கியர் உறவின் முறை கருதுமானால், அதற்குரிய தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். என் குடும்பத்தைத் தண்டிக்க வேண்டாம்."



படிப்பகம்

www.padippakam.com

தப்படவோ, தூக்கிலிடவோசம்மதிப்பது. மற்றொன்று, அவருடைய குடும்பத்தார் சமூக விலக்கத்தால் தண்டிக் கப்பட்டு, சொத்துகள் பறிமுதல் செய்யப்படுவது.



சித்தார்த்தருக்கு பகை என்ற முரண் அறவே பிடிக்க வில்லை. தங்கள் வாழ்வை எப்படி எதிர்கொள்வது என் பதில் மூர்க்கர்களாகி திமிறிக் கொண்டிருப்பவர்களிட மிருந்து அவர் விலகி நிற்கவே முடிவு செய்தார். சித் தார்த்தர் உறுதிபடக் கூறினார்: ''உயிர்க் கொலை புரியும் போரில் நான் பங்கேற்க மாட்டேன். இது குற்றமென்று சாக்கியர் உறவின் முறை கருதுமானால் - அதற்குரிய தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். என் குடும் பத்தைத் தண்டிக்க வேண்டாம். நாடு கடத்தியவர்கள் நீங்கள் என்றால், என் தாய் வழி உறவின் முறையினரான கோலியர்களால் உங்களுக்கு ஆபத்து வர வாய்ப்பு உண்டு. எனவே, நான் பொதுவாழ்வு மேற்கொண்டு துறவியாக நாடுவிட்டு நாடு செல்வதாக அறிவிக்கிறேன்.''

மானுடத்தினுள் ஒரு பகுதியில் ஏற்பட்ட பிரச்சனை யில் பாதிப்புக்குள்ளான அவர், மானுடம் முழுவதற்கு மான தீர்வினை நோக்கி அதற்கானத் தேடல்களில் தன்னை செலவிட ஆயத்தமானார். ஒட்டுமொத்த மானு டம் நோக்கிப் புறப்படுவதும், மனிதத்தை சமச்சீர்மை நோக்கி வலிமைப்படுத்துவதுமே - தம் இருப்பிற்கும் இயக்கத்திற்குமான பாரிய பண்பாடு என்பதை வரையறை செய்தார்.

தன் இளமைப் பருவத்தின் அத்தனை ஜொலிப் போடும் இருந்த அவர், இத்தனை நாள் தன்னை குடும்பம், இனக்குழு என்று வளைத்துப் போட்டிருந்த முற்றுப்புள்ளி களை நீக்கினார். தன்னைப் பற்றிய பரிணாமத்தை நேர் மையுடன் வெளிப்படுத்தும் செயல்பாட்டிற்கு சமூக மனி தரானார். இனக்குழு சமுதாய வளர்ச்சியின் அப்போதைய சகாப்தத்தில் உலகைச் சரியான முறையில் புரிந்து கொள்ள வும், அதை மாற்றியமைக்கவுமான பொறுப்பினை ஏற்றார். ஒரு திருப்பு முனைக்கான அடையாளமாக ஆன சித்தார்த்தர், மனிதர்களால் சாதிக்கப்பட்டவை பற்றிய பரிசீலனைக்கு தன்னைத்தானே ஆட்படுத்திக் கொண்டார்.

சித்தார்த்தர், தன் வாழ்க்கைத் துணை நலமான இளம் மனைவியையும், அப்போதுதான் பிறந்திருந்த குழந்தையையும், கண்ணீருடன் நின்ற பெற்றோரையும் உண்மையைத் தேடும் அறிவுத்தாகத்தைத் தீர்த்துக் கொள் ளவே விட்டுப் பிரிந்தார். குடும்பத்தினர் அனைவரும் சித்தார்த்தரால் பின்னாளில் அடையப் போகும் உண்மை யான விடுதலையின் ஆனந்தத்தை உணர்ந்து, அவருக்கு விடை கொடுத்து அனுப்பினார்கள். அவர் இல்லற வாழ்க் கையிலேயே தங்கி இருந்தால், குடும் பத்தினருக்கு மகிழ்ச்சியினையும் வசதி களையும் துணையையும் அளித்திருக்க முடியும். ஆனால், அவர் மானுடத்தி னுள் உண்மையைத் தேடும் தனது அறி வுத்தாகத்தைத் தீர்த்துக் கொள்ளவே குடும்பத்தை விட்டு அகன்றார்.

**“சித்தார்த்தர், தன் துணைவியாரை விட்டுப் பிரிந்தாலும் தன் வாழ்க்கைப் பங்காளரின் வாழ்க்கை சிதையாமல் தொடர, மறுமணம் செய்து கொள்ள வலியுறுத் தினார்.”**

விருப்பு வெறுப்புகளின் பிடியிலிருந்து தன்னை முதலில் விடுவித்துக் கொள்ளாமல், ஒட்டுமொத்த மனி தர்களுக்கான பாதையைக் கண்டறிய முடியாது என்பது சித்தார்த்தரின் தலையாயப் புரிதலாகும். அவருடைய முக்கிய இலக்கு உண்மைக்கான தேடலை அடைவது மட்டுமல்ல; தாம் முழுமையான விடுதலை பெற்று சக மனிதர்களையும் விடுதலை பெறச் செய்ய வேண்டும் என்பதுதான். சித்தார்த்தர் தனது குடும்பத்தாரின் இசை வைப் பெற்றே இல்லற வாழ்வைத் துறந்தார் என்பதே உண்மை.

சித்தார்த்தர், தன் துணைவியாரை விட்டுப் பிரிந்தாலும் தன் வாழ்க்கைப் பங்காளரின் வாழ்க்கை சிதையாமல் தொடர, மறுமணம் செய்து கொள்ள வலியுறுத்தினார். தன் பிரிவு குறித்து நியாயம் கற்பிக்க அறிவுரைகளால் தன் மனைவியைத் துளைத்தெடுக்காமல், தொடர்ந்து அர்த்தத் தோடும் ஆனந்தத்தோடும் வாழ கேட்டுக் கொண்டார். வாழ் வதற்கான வெளியையும், அதற்கான மன உறுதியையும் ஏற்படுத்தினார். தனது பெற்றோர்களை, குடும்ப இனக் குழு உறவுகளில் சமன்பட்டு வாழ வலியுறுத்தினார். சாக்கிய சங்கத்தவருடன் ஏற்பட்ட முரண்பாடு, சித்தார்த் தரின் துறவுக்குத் தூண்டுகோலாக அமைந்தது என்பது உண்மையின் ஒரு பக்கமே; அவர் தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காக இல்லற வாழ்வைத் துறக்கவில்லை என்பது மறுபக்க உண்மையாகும். எனவே, அவரது குடும்பத்தாருடன் அவர் நிகழ்த்திய உரையாடலை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

*சுத்தோதனர் :* போரின் தீமைகள் குறித்து நாங்களும் பேசிக் கொண்டிருந்தோம். ஆனால், நீ இவ்வளவு தூரம் போவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

*சித்தார்த்தர் :* நிகழ்வுகள் இப்படியொரு திருப்பத்தை அடையும் என்று நானும்கூட எதிர்பார்க்கவில்லை. சாக் கியர்களை அமைதியின் பக்கம், எனது வாதங்களால் வென்றெடுக்க முடியும் என்று நான் நம்பிக் கொண்டிருந் தேன். ஆனால், கெடுவாய்ப்பாக நம்மவர்களில் மூர்க்கர்கள் ஆனவர்கள், எனது வாதங்கள் எந்தப் பயனுமின்றி தோற்றுப் போகும் அளவுக்கு சாக்கியர்கள் மனதில் உணர்ச்சிகளையும் தூண்டி விட்டுள்ளார்கள். ஆனால், இப்போது நிலைமை மோசமடையாமல் காப்பாற்றி விட் டேன் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நீதிக்காகவும் நியாயத்துக்காகவும் நிற்பதில் என்ன தண்டனைகள் கிடைத்தாலும், நீதியையும் நியாயத் தையும் நான் விட்டுக் கொடுத்து விடவில்லை. மேலும், அதனால் வரும் பாதிப்புகளை நான் மட்டுமே அனுபவிக் குமாறு செய்வதிலும் நான் வெற்றியடைந்துள்ளேன்.

*சுத்தோதனர் :* எங்களுக்கு என்ன நடக்குமென்று நீ சிந்திக்கவில்லையே!

*சித்தார்த்தர் :* நான் பரிவ்ராஜகன் ஆவதென முடி வெடுத்ததற்கு அதுதானே காரணம்! சாக்கியர்கள் உங்கள் நிலங்களை அபகரிக்க உத்தரவிட்டால், தங்கள் நிலைமை என்ன ஆகுமென நினைத்துப் பாருங்கள்.

*சுத்தோதனர் :* ஆனால், நீயில்லாமல் இந்த நிலங்களினால் எங்களுக்கு என்ன பயன்? இந்தக் குடும்பம் முழுவதும்



படிப்பகம்

www.padippakam.com

சாக்கியர்களின் இந்த நாட்டை விட்டு உன்னுடன் ஏன் வெளியேறி விடக்கூடாது?

**பஜபதி கோதமி :** நானும் இதற்கு உடன்படுகிறேன். எங்களை இந்நிலையில்விட்டு விட்டு நீ மட்டும் தனியாக எப்படிப்போக முடியும்?

**சித்தார்த்தர் :** அன்னையே! நீங்கள் எப்போதுமே ஒரு தீரனின் தாய் எனப் பெருமை கொள்வீர்கள் அல்லவா? அது உண்மையல்லவா? அப்படியெனில் நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும். இந்தக் கவலை உங்கள் தகுதிக்கு உரிய தன்று. நான் போர் முனைக்குச் சென்றிருந்தால், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? இப்படித்தான் துக்கம் அடைந்திருப்பீர்களா?

**கோதமி :** இல்லை. அது ஒரு சாக்கியருக்குப் பொருத்தமானதேயாகும். ஆனால், நீ இப்போது மக்களை விட்டு நீங்கி பரிவ்ராஜகன் ஆக ஆயத்தமாகி விட்டாய். நாங்கள் இங்கு எப்படி அமைதியோடிருக்க முடியும்? எனவேதான் நீ எங்களையும் உன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டுமென நான் கேட்கிறேன்.

**சித்தார்த்தர் :** எப்படி உங்கள் எல்லோரையும் நான் என்னுடன் அழைத்துச் செல்ல முடியும்? நந்தா இன்னும் குழந்தைதான். என் மகன் ராகுலன் இப்போது தான் பிறந்திருக்கிறான். உங்களால் அவர்களை விட்டு விட்டு வர இயலுமா?

**கோதமி :** நாம் அனைவரும் இந்த சாக்கியர்களின் நாட்டை விட்டு வெளியேறி, கோசல அரசரின் பாதுகாப்பில் அந்த நாட்டில் சென்று இருக்கலாமே?

**சித்தார்த்தர் :** ஆனால் அன்னையே, சாக்கியர்கள் என்ன சொல்வார்கள்? இதைத் துரோகமென்று அவர்கள் கருத மாட்டார்களா? அது மட்டுமல்லாமல், எனது பரிவ்ராஜகத்துக்கான உண்மையான காரணத்தை, கோசல அரசரின் கவனத்துக்குக் கொண்டு வரமாட்டேன் என்று நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். நான் தனியாக வசிக்க நேரிடும் என்பது உண்மைதான். ஆனாலும், எது சிறந்தது? தனியாக வசிப்பதா? இல்லை கோலியர்களைக் கொல்வதில் பங்கேற்பதா?

**சுத்தோதனர் :** ஆனாலும், ஏன் இந்த அவசரம்? சாக்கிய சங்கம்தான் போர் நடவடிக்கைகளை சில காலத்துக்கு ஒத்தி வைக்கத் தீர்மானித்துள்ளதே! ஒரு வேளை இந்தப் போர் தொடங்காமலேயே




கூட போய் விடலாம். ஏன் உன் பரிவ்ராஜகத்தை ஒத்திப் போடக்கூடாது? நீ சாக்கியர்களுடனே வாழ்வதற்கான சங்கத்தின் அனுமதியைக்கூட பெறும் சாத்தியம் இருக்கிறது.

**சித்தார்த்தர் :** நான் பரிவ்ராஜகத்தை ஏற்க உறுதியளித்த காரணத்தினால் தான், சங்கம் கோலியர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைத் தள்ளி வைக்கத் தீர்மானித்து - நான் பரிவ்ராஜகத்தை ஏற்ற பிறகு, சங்கத்தைப் போர் நடவடிக்கையை பின்வாங்கிக் கொள்ளும்படி வலியுறுத்த சாத்தியப்பாடுகள் உள்ளன. ஆனால், இது எதுவுமே நான் பரிவ்ராஜகத்தை ஏற்பதைப் பொறுத்தே நிகழும். நான் ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். நான் அதை நிறைவேற்றியே ஆக வேண்டும். அந்த சத்தியத்தை மீறுவதால் ஏற்படும் விளைவுகள், நமக்கும் அமைதிக்கான நோக்கத்துக்கும் மிகவும் பங்கம் விளைவிப்பதாக இருக்கும். அன்னையே, எனது பாதையில் குறுக்கே நிற்காதீர்கள்! உங்கள் அனுமதியையும், ஆசியையும் தாருங்கள்! நடப்பதெல்லாம் நன்மைக்கே!

(கோதமியும் சுத்தோதனரும் மவுனமானார்கள். அதன் பிறகு சித்தார்த்தர் யசோதரையின் அறைக்குள் சென்றார். யசோதரையைப் பார்த்ததும் அவருக்கு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது எனத் தயங்கி மவுனமாக நின்றார். அந்த மவுனத்தை யசோதரையே கலைத்தார்)

**யசோதரை :** கபிலவஸ்துவில் சங்கக் கூட்டத்தில் நடந்த அனைத்தையும் கேள்விப்பட்டேன்.

**சித்தார்த்தர் :** சொல் யசோதரை, பரிவ்ராஜகம் ஏற்பது என்ற என் முடிவு குறித்து என்ன நினைக்கிறாய்?

**யசோதரை :** உங்கள் நிலையில் நான் இருந்திருந்தால், நான் மட்டும் வேறென்ன செய்திருக்க முடியும்? நிச்சயமாக கோலியர்கள் மீதான போரில் நானும் பங்களித்திருக்க ஒப்பியிருக்க மாட்டேன். நீங்கள் எடுத்த முடிவே சரியானது. உங்களுக்கு என் சம்மதமும் ஆதரவும் உண்டு. நானும் உங்களுடன் பரிவ்ராஜகம் ஏற்றிருப்பேன். அப்படி நான் செயல்பட முடியவில்லை என்றால், அதற்கு ராகுலைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே காரணம். இது இப்படி நிகழ்ந்திருக்கக் கூடாது. ஆனால், நாம் துணிவுடன் இச்சூழலை சந்திக்க வேண்டும். உங்கள் பெற்றோரைப் பற்றியும் மகனைப் பற்றியும் நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். என் உயிருள்ளவரை அவர்களை நான் கவனித்துக் கொள்வேன். நான் விரும்புவதெல்லாம், உங்களுக்கு நெருக்கமானவர்களையும், பிரியமானவர்களையும் விட்டுவிலகி பரிவ்ராஜகராக ஆகும் நீங்கள், இந்த மனித சமுதாயத்துக்கு மகிழ்ச்சி தரும் புதிய வழியைக் கண்டறிய வேண்டும் என்பதுதான் (ஆதாரம் : 'புத்தரும் அவர் தம்மமும்' - டாக்டர் அம்பேத்கர், 1957). ●

- தொடரும்

---

**திருத்தம் :** சென்ற இதழில் வெளிவந்த 'மானுடத்தின் நேர்மறையும் - எதிர்மறையும்' அட்டவணையில், சாக்கியம் (நேர்மறை), ஆரியம் (எதிர்மறை) என்பதை, பவுத்தம் (நேர்மறை), பார்ப்பனியம் (எதிர்மறை) என்று திருத்தி வாசிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

# மீள்கோணம்




ஜெ.ஜெ. தாஸ்

■ அழகிய பெரியவன்

தலித் மக்களின் வரலாற்று மாதம் இது. 'வரலாறு மனிதனின் மன உறுதியை மட்டுமே நம்பியிருக்கிறது' என்ற ஸ்பானியக் கவிஞன் ஜார்ஜ் குயினின் சொற்களுக்கு ஏற்ப, தலித் மக்கள் தம் வரலாற்றை அகழ்ந்து எடுக்கவும், புதிதாகக் கட்டவும் முனைகிறார்கள். அகழ்ந்து எடுக்க வேண்டியதும்; கட்டப்பட வேண்டியதும்தான் தலித் மக்களின் வரலாறு. காலங்களின் இடிபாடுகளிலும், துரோகங்கள் மற்றும் அழித்தொழிப்புகளின் வஞ்சகத்திலும் அவர்தம் வரலாறுகள் இருட்டாக்கப்பட்டன. இருள் பூசப்பட்ட அவ்வரலாற்றின் ஒரு முனையிலிருந்து சூரியனாய் முளைத்தெழும்பி உண்மைகளை வெளிச்சமிட வேண்டிய தேவை - இன்று தலித் மக்களுக்கும், அறிவுசாலிகளுக்கும், செயல்பாட்டாளர்களுக்கும், தலைவர்களுக்கும் இருக்கிறது.

நாகரிகச் சமூகத்தின் முன்னால் ஒரு கதைச் சுருளைப் போல விரிந்து கிடக்கின்றன, வரலாற்றின் பக்கங்கள். அப்பக்கங்களிலே சில தனி மனித முயற்சிகளாலோ, அல்லது ஒரு கூட்டத்தின் முயற்சிகளாலோ பொற்காலமென ஒளியூட்டப்பட்டுள்ளன. சில பக்கங்களின் வரிகளில் இருள் கவிழ்ந்திருக்கிறது. இவைகளெல்லாம் இம்மாதத்தில் புரட்டப்படவும், அலசப்படவும் வேண்டும். வரலாற்றின் குடுவைகளுக்குள் பதப்படுத்தப்பட்டிருக்கும் காலப் பிரேதங்களை மீளவும் பரிசோதனை செய்வது, இம்மாதத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கும். வரலாற்றினை இப்படியாக அறுத்துக் கூறுபோடும் வேலைக்கு, ஒவ்வொரு ஒடுக்கப்பட்டவரும் இன்று தயாராவது காலத்தின் தேவை. இந்த வரலாற்று மீளாய்வுப் பணிகள் முடுக்கிவிடப்படும் வரை, நிலவும் சமூக நிலைமைகளில் பெரும் மாற்றம் சாத்தியமில்லை.



சங்கக் கொடியில் உள்ள 'செல்லா கத்தி'

'சிங்கங்கள் தங்கள் சொந்த வரலாற்றாசிரியரை உருவாக்கும்வரை, வேட்டையாடப்பட்டவர் கதை வேட்டையாடியவரின் புகழ் பாடுவதாக இருக்கும்' என்ற சினுவா ஆச்சுபேயின் வரிகளை இங்கே நினைத்துக் கொள்ளலாம். இன்று நிலைமை இத்துறையில் மேம்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் தலித் மக்களின் வரலாற்று நூல்கள் சில, மீள்வெளியீடு செய்யப்பட்டுள்ளன. தலித் மக்களின் தொடக்கக்காலப் போராளிகள் பலரது வரலாறுகள் தொகுக்கப்பட்டுள்ளன. தலித் வரலாற்றுத் துறையிலே காத்திரமான ஆய்வுகள் இன்று நடைபெறுகின்றன. இந்த மீளாய்வுப் பணிகளும், வரலாற்றினைத் தொகுத்தெழுதும் பணிகளும், பல்வேறு இடர்ப்பாடுகளைக் கொண்டது. ஆய்வுப் பணிகளில், தலித் வரலாற்று ஆய்வுப் பணி என்பது நெஞ்சுரம் வேண்டி நிற்பது மட்டுமல்லாமல், சலியாத முயற்சியையும், உழைப்பையும் வேண்டுவது.

தில்லி பல்கலைக் கழக விரிவுரையாளரும் ஆய்வாளருமான சகானா (பட்டாச்சார்யா), ஒரு முறை நேர்பேச்சில் சொன்ன செய்தி நினைவுக்கு வருகிறது. ஒரிசா மாநிலத்தின் சில பகுதிகளில் உள்ள பார்ப்பனர்களின் வாழ்முறையை ஆய்வு செய்வதற்கு அவர் போனபோது, சுமார் அய்நூறு ஆண்டுகளுக்குரிய குடும்ப வரலாற்றுச் செய்திகளை ஆதாரங்களுடன் அம்மக்கள் வைத்திருந்தது, அவருக்குப் பெரும் வியப்பைத் தருவதாக இருந்திருக்கிறது. ஆனால், ஒரு தலித்தின் ஒரு தலைமுறை வரலாறுகூட இங்கே ஆவணங்களோடு இல்லை. புகைப்படங்களோ, குடும்ப நிகழ்வுகளின் எழுத்துப் பதிவுகளோ, நில ஆவணங்களோ எதுவுமே இல்லை. அவைகளைத் தேடிக் கண்டடைவது, ஒரு புதையலைக் கண்டடைவதற்குச் சமம்.

1940 களில் 'உதயசூரியன்' என்ற பத்திரிகையை நடத்தியவரும், வடார்க்காடு மாவட்ட தோல்பதனிடும் தொழிலாளர்கள் சங்கத் தலைவரும், பெரும் சமூகச் சீர்திருத்தவாதியுமான ஜெ.ஜெ. தாஸ் அவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்ட முனைந்தபோது, அந்தச் சிரமத்தை உணரமுடிந்தது. ஜோசப் ஜேசுதாஸ் என்கிற ஜெ.ஜெ. தாஸ், வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் அருகில் உள்ள வடக்குப் பட்டறையில் பிறந்தவர். பாலாற்றின் கரையை அணைத்தது போல தென்னைகளால் நிறைந்த அக்கிராமம், மிகவும் அழகு



படிப்பகம்

www.padippakam.com

வாய்ந்தது. தென்னிந்தியத் திருச்சபை மிஷினரிகளின் மனித நேயச் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டுக் கிறித்துவர்களான குடும்பம் அவருடையது. யோசேப்பு (ஜோசப்), மரியாள் என்றே புகழ் பெற்ற கிறித்துவ இணையரின் பெயரை தாஸ் அவர்கள் பெற்றோரும் வைத்துக் கொண்டுள்ளனர். அவர் பிறந்த 1902 ஆம் ஆண்டில் ஜான் பாஷ்யம் என்கிற பாதிரியார், அந்த ஊரில் பணியாற்றியிருக்கிறார்.

மிஷினரிகள் தலித் மக்களிடையே செய்த முதன்மையான வேலை, அம்மக்களுக்குக் கல்வியை அளித்ததே. அரண்மனைகளிலும், மடங்களிலும், செல்வந்தர்களின் வீடுகளிலும் தலித் மக்களால் தீண்டப்படாதபடி வைக்கப் பட்டிருந்தன ஓலைச்சுவடிகள். படிக்கும் ஒடுக்கப்பட்டவனின் நாவறுக்க கத்திகளைத் தீட்டிக் கொண்டும், கல்வியைக் கேட்கும் ஒடுக்கப்பட்டவனின் காதில் ஊற்ற ஈயத்தைக் காய்ச்சிக் கொண்டும் காலம் இருந்தது. இதை ஊடறுத்துதான் காகிதத்தில் அச்சிடப் பட்டதமிழின் முதல் புத்தகத்தை தீண்டிப்படிக்கும் பேற்றினை, மிஷினரிகளால் தலித் மக்கள் பெற்றனர். இந்தப் பேறிலிருந்து ஜெ.ஜெ. தாஸ் அவர்களும் தப்பவில்லை.

ஊரின் கிறித்துவப் பள்ளியிலும், குடியாத்தத்தின் மிகப் பழைய பள்ளியான நகராட்சிப் பள்ளியிலும் தனது பள்ளிக் கல்வியை, அவர் முடித்தார். எப்.ஏ. என்றழைக்கப்பட்ட கல்லூரி முன்பருவக் கல்வியை வேலூர் ஊரிசு கல்லூரியிலே படித்தார். எப்.ஏ.வுக்குப் பிறகு அவர் பி.ஏ. ஹானர்ஸ் படித்ததாக சிலர் உறுதியற்றத் தகவல்களைத் தருகின்றார்கள். தாஸ் அவர்களின் உடன் பிறந்த ஒரே அண்ணனான தேவராசன் என்பவரின் மகன் சுந்தரேசன், தாஸ் அவர்கள் நல்ல ஊதியத்தில் இந்தியக் கப்பற்படையில் பணியாற்றி வந்ததாகக் கூறுகிறார். ஆனால், தாஸ் அவர்களோடு தொழிற் சங்கத்திலே இணைந்து வட்டத் துணைச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய ஆம்பூர் சான்றோர் குப்பத்தைச் சேர்ந்த திரு. ஜெயபால், தாஸ் அவர்கள் நீலகிரி தேயிலைத் தோட்டத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றியவர் என்று கூறுகிறார். தாஸ் அவர்களுக்கு பொதுவுடைமை சிந்தனையில் ஈடுபாடு இருந்ததால், கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட போது, கோலார் தங்க வயலில் தலைமறைவு வாழ்க்கையை நடத்தி விட்டு வந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். தாஸ் அவர்கள் தனது அரசுப் பணியை 1936 இல், தீராத வயிற்று வலி காரணமாக விட்டு விட்டு வந்திருக்கிறார். அவரின் இந்தச் சுருக்கமான வாழ்வுப் பகுதியில் அவரைப் பற்றி அதிகமான செய்திகளை நம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் இரண்டாம் கட்ட வாழ்வுப் பகுதி, உத்வேகம் கொண்டது.





வாணியம்பாடியில் கட்டப்பட்ட முதல் சங்க அலுவலகத்தின் முன்பு
தலைவர் எம். ஆதிமூலம் (நடுவில் இருப்பவர்), பி. பெருமாள், நேசராஜ் மற்றும் தொழிலாளர்கள்

**❝ ஒரு தலித்தின் ஒரு தலைமுறை வரலாறுகூட இங்கே ஆவணங்களோடு இல்லை. புகைப்படங்களோ, குடும்ப நிகழ்வுகளின் எழுத்துப் பதிவுகளோ, நில ஆவணங்களோ எதுவுமே இல்லை. அவைகளைத் தேடிக் கண்டடைவது, ஒரு புதையலைக் கண்டடைவதற்குச் சமம். ❞**

அவருடன் இணைந்து பணியாற்றிய, தலித் மக்களுக்காக தன்னியல்பான உணர்வெழுச்சியோடு சமூகச் சீர்திருத்தப் பணிகளைச் செய்த, இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு சில முதிய தலைவர்களால் உற்சாகத்தோடும், ஆத்மார்த்தத் தோடும் அது விவரிக்கப்படுகிறது. நினைவுகளைத் தேக்கிய அவ்விவரணைச் சொற்கள், அமிலத்தின் துளிகளைப் போல் நம்முன் விழுந்து பரவுகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் முக்கிய சிறு நகரங்களான வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை ஆகியவற்றில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தோல் பதனிடும் தொழில் நடைபெற்று வருகின்றது. இச்சிறு நகரங்களில் கணிசமாக இருக்கும் இசுலாமியர்கள், இறைச்சிக்காகப் பயன்படுத்தும் ஆடு மாடுகளின் தோல்களை பதப்படுத்தி விற்று வருகிறார்கள். விலங்குகளின் தோல்களைப் பதப்படுத்த தலித் மக்களான ஆதிதிராவிடர்களும், அருந்ததியர்களுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். இன்றளவும் தொடரும் இவ்வழக்கத்தில், கடும் உடல் உழைப்புடன் சுகாதாரமற்ற சூழலில் மேற்கொள்ளக்கூடிய பணிகளை தலித் மக்களும், மேற்பார்வை மற்றும் இதர வேலைகளை தலித் அல்லாதவர்களும், இசுலாமியர்களும் செய்கின்றனர். மரப்பட்டை, கடுக்காய், சுண்ணாம்பு ஆகியவைகளை பயன்படுத்தி செய்யப்பட்டுவந்த 'திரேஸ்' வகை பதப்படுத்தும் முறை, 1970 இல் அறிமுகமான 'குரோம்' என்ற வேதிப் பொருள் பதப்படுத்துதலால் பெரும் மாற்றம் அடைந்து, சுற்றுச் சூழல் சீர்கேட்டுக்கு காரணமானது. இன்று முறைப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தப்பட்டும், பெருமளவில் நவீனமடைந்தும் இருக்கின்ற இத்தொழில், தொடக்கக் காலங்களில் தலித் மக்களின் வியர்வை யாலேயே வளர்ந்தது.

பச்சைத் தோல் ஒன்றை உலர்ந்த, பயன்படுத்தக்கூடிய தோலாக மாற்ற சுமார் நாற்பது நாள்களுக்கும் மேலாகும். இத்தொழில் பல் வேறு பணி நிலைகளைக் கொண்டது. நனவு அறுப்பு, சுத்தறுப்பு, தொட்டி, சுண்ணாம்புக்குழி, செல்லா மேட்டு வேலை, இளங்காரம் என்று வழக்குச் சொற்களைக் கொண்டு அழைக்கப்படும் பல்வேறு வேலைப் பிரிவுகளில் பச்சைத் தோலின் முடி நீக்குவதிலிருந்து, மேட்டு வேலை வரை நடைபெறும் வேலைகள் அனைத்தும் - கடும் உடல் உழைப்பைக் கோருவதுடன் சுகாதாரமற்ற சூழலில் மேற்கொள்ளப்படுவது.

தொடக்கக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட தலித்துகள், முதலாளிகளால் கடுமையாக ஒடுக்கப்பட்டதாக வயதான தொழிலாளர்கள் நினைவுகூர்கிறார்கள். அதிகாலமே வேலைக்கு வந்துவிட வேண்டும். நேர அளவும், போதிய விடுமுறை நாட்களும் கிடையாது. சுண்ணாம்புக்குழியில் இறங்கி வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு கையுறைகளோ, காலுறைகளோ வழங்கப்படாது. சுண்ணாம்பு அரித்து புண் உண்டானாலும் வேலை செய்வதை நிறுத்தக்கூடாது. தொழிற்சாலைக்குள் இருகுவளை முறை உள்ளிட்ட சாதிய ஒதுக்குமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றன.

வேலைக்கு வர மறுத்த தலித் தொழிலாளர்களை அடித்து இழுத்து வர ஆட்கள் இருந்திருக்கிறார்கள். தலித் தொழிலாளர்களுக்கு தண்டனையாக கழுத்தில் இரும்பு வளையம் போடப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்குள்ளே உயரமான உத்திரங்களில் தொழிலாளியைக் கட்டித் தொங்கவிட்டு, கீழே முட்களைப் போட்டு கொளுத்தியுள்ளார்கள். எதிர்க்கும் தொழிலாளர்கள் மேல் தோல்திருட்டு வழக்குகள் பதியப்பட்டுள்ளன. தொழிலாளியை சிறைக்கு அனுப்பி விட்டு, அவரின் வீட்டிலும் நுழைந்து அழிம்பு செய்திருக்கிறார்கள். ராணிப்பேட்டையில் தோல்பதனிடும் தொழிலில் கொத்தடிமை முறை இருந்ததாகவும் சொல்கிறார்கள். தொழிலாளிகளுக்கு உழைப்புக்கேற்ற கூலியும், வேறு சலுகைகளும் இருந்ததில்லை. 1900 இலிருந்து ஏறக்குறைய 1945 வரையிலும் இந்நிலைமை நீடித்திருக்கின்றன.

தொழிலாளர் நலனுக்கென பேசுவதற்கு அமைப்புகள் எதுவும் இல்லாதிருந்த காலம் அது. நிலைமைகள் மெல்ல மாற்றம் கொண்டு தொழிற்சங்கம் தோன்றத் தொடங்கியுள்ளது. 1939 ஆம் ஆண்டில் பதிவு பெற்ற சங்கமாக உருவான வடார்க்காடு மாவட்ட தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம், 1942இல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பதிவு எண்: 315. 1951 இல் 1287 என்ற புதுப்பிக்கப்பட்ட பதிவு எண்ணுடன் இன்றளவும் இயங்கி வருகிறது. உதயேந்திரத்திலும், வாணியம்பாடியிலும் முதல் கிளைகள் கட்டப்பட்ட பிறகு, மாவட்டம் முழுக்க தோல்பதனிடும் தொழிற்சாலைகள் இருந்த இடங்களில் எல்லாம் கிளைகள் தோற்றம் கண்டிருக்கின்றன. இச்சங்கத்தைத் தொடங்கி, தொழிலாளர்களை முறைப்படுத்த ஜெ.ஜெ. தாஸ் அவர்களும், எம். ஆதிமூலம் அவர்களும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். தாஸ் அவர்கள் பெரும் பொறுப்புகளுக்குப் பிறகு, சங்கச் செயல்பாடுகளை திரு. எம். ஆதிமூலம் அவர்களும், அவருக்குப் பிறகு திரு.பி. பெருமாள், திரு.நேசராஜ் போன்றோரும் மேற்கொண்டுள்ளனர்.



ஜெ.ஜெ. தாஸ் சிறந்த ஜனநாயகவாதி. தொழிலாளர்களிடம் கருத்து கேட்டு நடப்பார்.

- எம்.எஸ். ஜெயபால்

இன்று தொழிலாளர்கள் அனுபவிக்கும் அத்தனை சலுகைகளுக்கும் ஜெ. ஜெ. தாஸ், ஆதிமூலம் போன்றவர்களின் உழைப்பே அடிப்படை.

- சுந்தர்





என்னை சமூக சீர்திருத்தப் பணிகளின் பக்கம் திருப்பியது தலைவர் ஜெ.ஜெ. தாஸ் அவர்கள்தான்.

- சி. ராமசாமி

ஜெ.ஜெ. தாஸ் அவர்களின் முயற்சிகளுக்குப் பிறகு தொழிலாளர்கள் மீது ஏவப்படும் வன்கொடுமைகள் குறைந்து, கட்டுக்குள் வந்துள்ளன. தம்மைத் தாக்க வந்த முதலாளிகளின் கையாட்களை திருப்பித் தாக்க, தோலின் சுற்றை அறுக்க பயன்படும் இருபக்கமும் பிடி கொண்ட 'செல்லா' கத்திகளை தொழிலாளர்கள் சிலர் எடுத்துள்ளனர். பேரணாம்பட்டின் சீர்திருத்தச் செம்மல் என்று அழைக்கப்படும் பி. பெருமாள் அவர்கள், இப்படி ஒருமுறை 'செல்லா' கத்தியை எடுத்துக் கொண்டு முதலாளிகளின் கையாட்களை தாக்கப்போனதாக சொல்கிறார் திரு. ராமசாமி. இவர் ஜெ.ஜெ. தாஸ் அவர்களோடு நெருக்கமாக இருந்தவராவார். ஜெ.ஜெ. தாஸ் அவர்கள் வரும் வரை கத்தியைக் கீழே போடமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் அவர். வடஆர்க்காடு மாவட்ட தோல் பதனிடும் தொழிற்சங்கத்தின் மாவட்டச் செயலாளர் திரு. சுந்தர் அவர்கள், தன்னுடைய தந்தையார் நேசராஜ் அவர்களும் கூட, இப்படி எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சொல்கிறார்.

ஜெ.ஜெ. தாஸ் அந்த தொழிற்சாலைக்கு வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, அச்சிக்கலைத் தீர்த்திருக்கிறார். இச்சம்பவத்தை நினைவுகூறும் பி. பெருமாள் அவர்களின் மகன் திரு. சவுந்தரபாண்டியன், இப்படிப் பல்வேறு சம்பவங்கள் அக்காலங்களில் நடந்ததாகக் கூறுகிறார். மாவட்டத்தில் எந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு எதிராக அநீதி நேர்ந்தாலும் ஜெ.ஜெ. தாஸ் அவர்கள், அங்கு விரைந்து போய் தடுத்திருக்கிறார். இந்தச் செயல் பணிகளில், பல முறை முதலாளிகளின் கையாட்கள் தாஸ் அவர்களைத் தாக்க முயன்றிருக்கிறார்கள். தாக்கப்பட்டிருக்கிறார் அவர். அவரைப் பாதுகாக்கவென்று எப்போதும் பத்து பேர் அவருடன் இருந்திருக்கிறார்கள். ஜெ.ஜெ. தாஸ், தொழிலாளர்கள் நலனுக்காகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்.

- அடுத்த இதழிலும்



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# இந்தியர்கள் ஆட்சி புரியும் வரை மநுதர்மம்தான் கோலோச்சும் - II

பார்ப்பனருக்கு வசதியான, பொது நலத்துக்கு கேடான, நீதிக்குக் கேடான குற்றமான காரியங்கள் நிறைந்த, தர்மங்கள் கொண்ட நூல், எப்படி மத (மநு) தர்மமாக இருக்கிறதோ, அது போல் சமுதாயக் கேடானதும் பார்ப்பனருக்குக் கேடாயிருந்தால் - ஆட்சியையே பாழ் பண்ணக் கூடியதுமானத் தன்மைகள் நிறைந்ததே அரசியல் (சட்ட) தர்மமாக இன்று விளங்குகிறது.

ஒன்று பார்ப்பனர், இல்லாவிட்டால் தமிழர் அல்லாதவர், இல்லாவிட்டால் பார்ப்பன தாசர் தவிர, வேறு யாரும் பதவிக்கு வரமுடியாததானத் தன்மையில் அரசியல் சட்டம், நடவடிக்கை இருப்பதால், என்றென்றும் திருத்த முடியாத தன்மையில் 'ஜனநாயக ஆட்சி தர்மம்' இருந்து வருகிறது.

இவற்றிற்கு ஒரு பரிகாரம் வேண்டுமானால், 'ஜனநாயகம்' ஒழிக்கப்பட்டு, 'அரச நாயகம்' ஏற்பட வேண்டும். அது எளிதில் முடியாத காரியமானால், தமிழ் நாடு தனி முழு சுதந்திரமுள்ள நாடாக ஆக்கப்பட வேண்டும். அது முடியவில்லையானால், இந்தியா அன்னியனுடைய ஆட்சிக்கு வர வேண்டும்.

இந்தியாவானது 'இந்தியர்கள்' ஆட்சி புரிகிறவரை, மேல்கண்ட மாதிரியான மநு தர்மம் தான் ஆட்சி தர்மமாக இருக்க முடியும். ஆதலால் மக்கள் மனிததர்ம ஆட்சியில் இருக்க வேண்டுமானால், இந்தியாவுக்கு அன்னிய ஆட்சிதான் தகுதி உடையதாகும்.

அதுவும் ரஷ்ய ஆட்சி - அதாவது ரஷ்யரால் ஆளப்படும் ஆட்சிதான் வரவேண்டும்; அல்லது பிரிட்டன், அமெரிக்கா போன்ற வெள்ளையன் ஆட்சிதான் வேண்டும். அப்படியில்லாமல் இந்தியாவை இந்தியன் ஆள்வது என்றால், அது பார்ப்பன நலத்துக்கு ஆக ஆளப்படும் சூழ்ச்சியாட்சியாகத்தான் அதாவது, இன்று போலத்தான் இருக்கும், இருந்து தீரும். மக்களும் தாங்கள் சூத்திரர்கள் என்பதை ஒப்புக் கொண்டவர்களாகத்தான் இருக்க முடியும்.

எனவே, இன்றைய இந்த நிலை மாற வேண்டுமானால் முதலாவது குறைந்தது -

1. காங்கிரஸ் - திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இரண்டு கட்சிகளைத் தவிர, அரசியல் சம்பந்தமான எல்லா கட்சிகளையும் இல்லாமல் ஆக்கிவிட வேண்டும்.

2. சமுதாயக் கட்சிகள் இருக்க வேண்டுமானால் அவைகளின் கொள்கைகளில், நடப்புகளில் சட்டம் மீறுதல், பலாத்காரம் ஏற்படுதல், ஏற்படும்படியான நிலைமை உண்டாக்குதல் ஆகியத்தன்மைகள் இல்லையென்று உறுதி மொழி பெற்ற பிறகே அவைகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

3. எந்தக் கட்சி ஸ்தாபனம் ஏற்படுத்துவதானாலும் அரசாங்க அனுமதி பெற்றுத் தொடங்க வேண்டும். அந்த அனுமதியும் முதலில் ஒரு ஆண்டுக்கு, பிறகு இரண்டாண்டுக்குப் பிறகு மூன்றாண்டுக்கு என்று அனுமதி கொடுத்து, இந்த ஆறாண்டு காலத்தில் ஒரு தவறு, எச்சரிக்கைப் பெறுதல் இல்லையானால்தான் காலவரையின்றி அனுமதி கொடுக்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் என்கின்ற பெயரால் எந்தக் கட்சிக்கும் அனுமதி அளிக்கக் கூடாது. இப்போது இருப்பவைகளைத் தடுத்துவிட வேண்டும். சமுதாய - பொருளாதார சம உரிமைப் பிரச்சார ஸ்தாபனம் என்பதாக மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்கலாம். கட்சிகளைத் தடுக்கவோ, ஏற்படுவதை மறுக்கவோ, சமாதானம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது என்பவை போன்ற நிபந்தனை மேற்பார்வை இருக்க வேண்டும். பத்திரிகைகளைப் பெரும் அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும்.


முடிவாக, ஜெயில்களில் வகுப்புகள் இருக்கக்கூடாது. ஒரே வகுப்புதான் இருக்க வேண்டும். இப்போதைக்கு இந்த நிபந்தனைகள் இருக்கலாம். அரசாங்க அதிகாரிகள் மீது அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கவர்னர் முடிவே முடிவானது என்றும், கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லையென்றும் திட்டம் செய்துவிட வேண்டும். எந்தக் காரியத்திற்கும் சட்டம் மீறுதல் இருக்கக் கூடாது. மீறுவதை அசல் கிரிமினல் குற்றமாகவே பாவிக்கப்பட வேண்டும்.

இப்படியான பல திருத்தங்கள் செய்தால் தான் இந்தியாவை இந்தியர் ஆளலாம். அதுவும் அன்னியர் ஆட்சி ஏற்படும் வாய்ப்பு ஏற்படும் வரைதான். இந்தியாவைப் பொருத்தவரையில், இந்த நிலையில் எப்படி இருந்தாலும் 'நம் நாட்டை நாம்தான் ஆள வேண்டும்' என்பது, அயோக்கியர்களும் காலிகளும் வாழத்தான் வசதி அளிக்கும்.

> "Patriotism is the last refuge of a scoundrel" —
>
> "தேச பக்தி என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம்" - ஜான்சன்

(கையொப்பம்)

*கீழ்வெண்மணியில் 42 தலித் மக்கள் கொல்லப் பட்டதையொட்டி, பெரியார் விடுத்த அறிக்கை 'விடுதலை' 28.12.1968*



> "இந்தியாவானது 'இந்தியர்கள்' ஆட்சி புரிகிறவரை, மநு தர்மம்தான் ஆட்சி தர்மமாக இருக்க முடியும். ஆதலால் மக்கள் மனித தர்ம ஆட்சியில் இருக்க வேண்டுமானால், இந்தியாவுக்கு அன்னிய ஆட்சிதான் தகுதி உடையதாகும். அதுவும் ரஷ்ய ஆட்சி - அதாவது ரஷ்யரால் ஆளப்படும் ஆட்சிதான் வர வேண்டும். அப்படியில்லாமல் இந்தியாவை இந்தியன் ஆள்வது என்றால்; அது பார்ப்பன நலத்துக்கு ஆக ஆளப்படும் சூழ்ச்சியாட்சியாகத்தான் அதாவது இன்று போலத்தான் இருக்கும், இருந்து தீரும். மக்களும் தாங்கள் சூத்திரர்கள் என்பதை ஒப்புக் கொண்டவர்களாகத் தான் இருக்க முடியும்."



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

தமிழக அரசில் நிரப்பப்படாமல் வைத்திருக்கும்
17 ஆயிரம் தலித் பணியிடங்களை உடனே நிரப்பு

பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, கையகப்படுத்தி
தலித்துகளுக்கு வழங்கு

ஒவ்வொரு தலித் குடும்பத்திலும்
ஒருவருக்கு அரசு வேலை கொடு

தனியார் துறையில்
இடஒதுக்கீட்டைச் சட்டமாக்கு

அண்ணல் அம்பேத்கரின்
திரைப்படத்தை வெளியிடு

கையால் மலம் அள்ளும்
இழி தொழிலை ஒழி

அனைத்து அரசு அலுவலகங்களிலும்
அண்ணல் அம்பேத்கரின் புகைப்படத்தை வை

இலவசங்கள் தேவையில்லை
சிறப்பு உட்கூறுத் திட்டப்படி - உரிய நிதியை ஒதுக்கு

அமைச்சரவையில் தலித்துகளுக்கு
அதிக இடங்களை வழங்கு

ஊராட்சியின் பொதுச் சொத்தில் பங்கு கொடு

**இவை -**
**தலித் மக்களால் இடையறாது**
**எழுப்பப்படும் முழக்கங்கள் மட்டுமல்ல;**

**அரசமைக்கப் போகும் கட்சி**
**நிறைவேற்ற வேண்டிய கடமைகள்;**

**தலித் இயக்கங்கள் வென்றெடுக்க**
**வேண்டிய சவால்கள் !**

படிப்பகம்